யாழ்ப்பாணத்தைப்
பிறப்பிடமாகக் கொண்டவரும்

திருக்கோணமலையை
வசிப்பிடமாகக் கொண்டவரும்

சிவயோக சமாஜ
ஸ்தாபக ஊழியர்களில் ஒருவரும்

முன்னாள் பாடசாலை அதிபருமாகிய

## அமரர் திரு. சு. நவரத்தினம்

அவர்களின்

# நினைவு மலர்

07-01-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தைப்

பிறப்பிடமாகக் கொண்டவரும்

திருக்கோணமலையை

வசிப்பிடமாகக் கொண்டவரும்

சிவயோக சமாஜ

ஸ்தாபன ஊழியர்களில் ஒருவரும்

முன்னாள் பாடசாலை அதிபருமாகிய

## அமரர் திரு. சு. நவரத்தினம்

அவர்களின்

# நினைவு மலர்

07-01-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். திரு. சு. நவரத்தினம் அவர்கள்



மலர்வு
**11-03-1927**

உதிர்வு
**5-12-1994**

### திதி வெண்பா

இல்லறங் காத்து இயல்புடைய மூவர்க்கும்
நல்லறங் காத்த நவரத்னம் - சொல்லரிய
மார்கழியில் பூர்வபட்ச சஷ்டித் திதியதனில்
சேர்ந்தார் சிவன் சேவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## பிள்ளையார் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளாமணிதான் கண்டாய்
காண்டற்கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க்கு ஆற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்
மெய்நெறி கண்டாய் விரதமெல்லாம்
மாண்டமனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட்டுள் உறையும் மணாளன் தானே.

## திருவாசகம்

நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட்டிருக்கும் அதுவன்றி
ஆயக்கடவேன் நானோ தான்
என்னதோ இங்கு அதிகாரம்
காயத்திடுவாய் உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திரு சு. நவரத்தினம் அவர்கள்
அனுபவித்த பாடல்களில் சில.

## திருவாசகம்

01. நானேயோ தவஞ்செய்தேன் சிவாய நம எனப்பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து என் உள்ளம் புகுந்து அடியேற்கருள் செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே

02. யானேபொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனை வந்துறுமாறே.

03. உடையாள் உந்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரிவாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே

## திவ்யப் பிரபந்தம்

04. குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுந்துயராயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள் விசும்பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தர் அலங்காரம்

05. நாள் என்செயும் வினைதான் என்செயும் எனை நாடிவந்த
கோள் என்செயும் கொடுங் கூற்று என்செயும் குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.

## கந்தர் அநுபூதி

06. உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜி அவர்கள்
அமரர் திரு. சு. நவரத்தினம் அவர்களுக்கு
விபூதி பூசி ஆசிர்வதித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா அவர்களின்
ஞான மண்டலம் என்ற நூலில் இருந்து

# மரணத்திற்குப் பின்.....

வாழ்க்கையின் முடிவு மரணம் என்பது அனைவரும் அறிந்த விஷயம். மரணத்திற்குப் பின் என்ன? என்பதை யாரும் அறிவதில்லை.

விஷய ஞானம் இல்லாத இடத்தில் பயம், பீதி முதலிய மனக் கஷ்டங்கள் தோன்றுவது சகஜம்.

மரணம் என்று நினைக்கும் பொழுது மரணத்திற்குப் பின் என்ன நிகழ்கின்றதென்ற சரியான அறிவில்லாததால் மரண பயம் உண்டாகின்றது.

மரணம் என்பது ஜீவனைப் பொறுத்தவரையில் புதிய சக்தியும், உற்சாகமும், புது ஆற்றல் திறமையும் உயிரில் உருவாகும் ஒரு புனிதமான நிகழ்ச்சி.

பகல் முழுவதும் உழைத்துக் களைப்படைந்தவர்களுக்கு இரவு உறக்கம் களை தீர்த்துப் புத்துணர்வும், தென்பும் அளிப்பது போன்று, வாழ்நாள் முழுவதும் பல துறைகளிலும் செயலாற்றி வாழ்வில் களைப்படைந்த மனிதர்களுடைய ஜீவன் சுயமாகவே ஏற்றெடுத்த ஒரு தீர்க்க கால உறக்கம் அல்லது ஓய்வு தான் மரணம்.

பழுதடைந்த உடையை மாற்றிப் புது உடை அணிவது போன்று ஜீவன் தனது இலட்சியத்தை அடையும் வரையும் பழுதடைந்த சரீரத்தை மாற்றிப் புதுச் சரீரத்தில் நுழைய வேண்டியிருக்கின்றது.

மரணத்திற்குப் பின் உயிர் என்ன நிலையடைகின்றதென்பதைப் பற்றி இந்து சமய சாஸ்திரங்கள் விளக்கந் தருகின்றன.

கண்ணுவன், கபிலன் போன்ற மகா ரிஷிகளின் பரிணாம சித்தாந்த சாஸ்திரங்களில் இது விஞ்ஞான பூர்வமாகத் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நசிகேதன் நமனைக் குருவாக ஏற்பதற்குரிய காரணம், மரணத்திற்குப் பின் ஜீவனுடைய நிலையை அறிவதற் குரிய பெரும் அவா தான் என்பதை கடோப நிஷதம் கூறுகின்றது.

ஒரு நோயாளி நோயைக் குணப்படுத்துவதற்காக ஒரு வைத்தியரைச் சந்திக்கச் செல்கின்றான். பின்னர் சந்திக்க முடியாமல் திரும்பி வருகின்றான். மீண்டும், மீண் டும் செல்லும் பொழுதும் அதே நிலைதான்.

மருத்துவரைச் சந்திக்கும் வரையும் வருத்தமுடைய வர் வருவதும் போவதுமாகிய நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மருத்துவரைச் சந்திப்பதுதான் நோயுடையவரின் நோக்கமாகையால் அது கைகூடும் வரையும் இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

ஜீவன் சிவத்துடன் ஐக்கியப் படுவதுதான் பிறவியின் நோக்கம் என்ற காரணத்தினால், ஜீவன் சுத்த சிவநிலை அடையும் வரையும் பிறப்பு, இறப்பு என்பன நிகழ்ந்து கொண்டிருக்கும்.

உயிரைப் பற்றிய சில அடிப்படைத் தத்துவங்களைத் தெரிந்து கொள்ளும் பட்சத்தில் இவ் விஷயத்திலிருக்கும் பல சந்தேகங்கள் தீர்க்கப்பட்டு விடுகின்றன.

**உயிரியல் சாஸ்திரம்:**

இந்துமத உயிரியல் சாஸ்திரப்படி சகல சராசரங் களும் உயிருடையன. தூணிலும், துரும்பிலும் உயிர் ஊடுருவி நிற்கின்றது. மனிதனும், மனிதனுடைய நிழலும் போன்று உயிர் பரமாத்மாவின் பிரதி பாசம்.

ஆகையால் உயிரை ஆக்கவும், அழிக்கவும் முடியாது. உயிரை உண்டாக்க முடியாத காரணத்தால் ஒரு புதுச் சரீரம் உருவாகும் பொழுது, நிலையான பழைய உயிரைத் திரும்பவும் சுவீகரிக்க வேண்டியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய உடல் அழிந்து புதுப்புது உடல் உருவாகிக் கொண்டிருப்பதாலும், என்றும் இருக்கின்ற உயிரை அழிக்கவும், ஆக்கவும் முடியாதிருப்பதாலும் மறு பிறப்பென்பது நிகழ்ந்து கொண்டேயிருக்கும்.

மரணம்:

ஒரு திரவத்தின் அடிப்படையான இறுதி அணுக்களிலிருந்து விசேஷ ரீதியில் உருவாகும் அலைநீளச் சலன சக்தியே உயிரென்று நவீன அலைச் சித்தாந்த சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஜீவன் தேகத்திலிருந்து பிரிவது (மரணம்) ஒரே நேரத்தில் ஒரே முறையில் நிகழ்வதில்லை. ஒரு குறிக்கப்பட்ட நேரத்திற்குள் இரண்டு தரமாக ஜீவன் பிரிந்து செல்கின்றது.

முதல் தரம் நிகழ்கின்ற மரணம் தைதீக மரணம் என்றும்; இரண்டாம் முறை நிகழ்வது கோச மரணம் என்றும் சொல்லப்படும்.

வெறும் சரீரத்திலிருந்து மாத்திரம் உயிர் பிரிந்து சரீரம் செயலற்றுப் போகும் நிலைக்கு தைதீக மரணம் என்றும், இறுதியில் பஞ்ச கோசத்திலிருந்து உயிர் பிரிவதை கோசீக மரணம் என்றும். பஞ்ச கோசத்திலிருந்து முற்றாக ஜீவன் பிரிந்தாற்றான் உண்மையான மரணம் சம்பவிக்கின்றது என்றும் கூறப்படுகிறது.

தைதீக மரணத்திற்குப் பின் இரண்டு அல்லது மூன்று மணித்தியாலத்திற்குள் கோசீக மரணம் நிகழ்கிறது.

அபூர்வமாக சில சந்தர்ப்பங்களில் கோசீக மரணம் நிகழ்வதற்கு முன், சரீரத்திலிருந்து பிரிந்து நின்ற ஜீவன் திரும்பவும் சரீரத்தில் நுழைவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத்தான் இறந்தவர் திரும்பவும் உயிர் பெற்ற சம்பவமாகக் கேள்விப்படுகிறோம்.

எனவே சில சந்தர்ப்பங்களில் இவ்விதம் நிகழ்வதால் சரீரம் அதிகம் பழுதடையாத நிலையில் மரணம் சம்பவிக்கும்போது, குறைந்தது ஆறு அல்லது எட்டு மணித்தியாலங்களின் பின்னர் தகனம் செய்வதுதான் உசிதமானதாகும்.

ஞானம்:

முன் ஜென்மங்களைப் பற்றி அறிவதற்கு "பரித்துவாஜ தர்சனம்" என்ற ஒரு சாஸ்திரக் கிரந்தம் இன்றும் நடைமுறையில் இருக்கின்றது. இதை இதய சுத்தமுடையவர்கள், நாலு ஆண்டுகள் அப்பியாசித்தால் தமது சொந்தப் பூர்வ ஜென்மங்களைப் பற்றியும், எட்டாண்டு பயின்றால் மற்றவர்களுடைய பூர்வ ஜென்ம விருத்தாந்தங்களைப் பற்றியும் அறியத்தக்க ஞானம் சித்திக்கும்.

அல்லது மூலாதார சக்தியை ஆதார சக்கரங்கள் வழியே சகஸ்ராரத்தில் ஏற்றி நிறுத்திப் பழகிய மகா யோகிகள், சித்தத்தில் அடங்கிக் கிடக்கும் பூர்வ ஜென்ம வாசனைகளில் சம்யமனம் செய்து பார்க்கும் பொழுது முன் ஜென்மங்களைப் பற்றிய அறிவு கிடைக்கின்றது.

ஜீவன் பிறவி தோறும் செய்த கர்ம பலாபலன்களுக்குத் தக்கபடி, அடுத்தடுத்துப் பிறவிகளெடுத்துச் சுக துக்கங்களை அனுபவிக்கின்றது.

முற்சென்மங்களிற் செய்த கர்ம பலன்களைப் பற்றி மனிதன் அறிவானாகில் பாப கர்மங்களைப் புரிவதற்கு அஞ்சி வாழ்வான்.

ஆகையால் பிறவி தோறும் வினையாற்றிக் களைப்படைந்த ஜீவன் களையைத் தீர்த்துப் புத்துணர்வு பெறுவதற்காக மரணம் என்ற ஒரு இடைக்கால ஓய்வெடுப்பதைப் பற்றிச் சந்தோஷம் அடையாமல் பயப்படுவதேன்?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜீ அவர்கள்
அருளிச்செய்த

# அமிர்த மொழிகள்

01. உனது வாழ்வில் நிரந்தரமான சுகத்துடன் நிம்மதியாக வாழ முடியுமா? என்ற விஷயத்தில் எள்ளளவும் சந்தேகப்படாதே. கருகிய கரி நெருப்புடன் சம்பந்தப்படும் பொழுது அதன் இயற்கையான கருமை மாறி ஒளிர்கின்றது. அதே போன்று உனது மனம் தெய்வீக ஒளியில் கலந்திருந்தால் ஜீவசுகம் நிறைந்த சம்பூர்ண மனிதனை உன்னில் காணலாம்

02. கறள் ஏறிய இரும்பைக் காந்தம் ஈர்க்காதது போன்று அழுக்கு நிறைந்த மனதைத் தெய்வீக ஒளி கவர்ந்தெடுப்பதில்லை.

03. உனது இதயத்தைத் தூய்மைப் படுத்துக. அப்பொழுது சிந்தனாசக்தியும் செயலாற்றும் திறமையும் அற்புதகரமான ரீதியில் பெருகும்.

04. நீ தெய்வத்தைப் பார்க்கவில்லையென்றாலும், தெய்வம் உன்னைப் பார்க்கின்றது.

05. கண்கள் உலகத்தைப் பார்க்கும் சக்தி இழந்தாலும், தெய்வத்தைப் பார்க்கும் சக்தியை இழப்பதில்லை.

06. உனது சிறுசெயலிலும், சிற்றறிவிலும் கூட பேராற்றலும் பேரறிவும் மறைந்திருக்கிறது. அதை உணரக்கூடிய அளவிற்கு இதயத்தைப் புனிதப்படுத்துக.

07. தார்மீக வழியில் தேடிய பணம் அவ்வழியில் செலவழிந்தால் பாபங்கள் தேய்ந்துவிடும்.

08. உன் மனக்குற்றம் மற்றவர்களின் குற்றமாகத் தோற்றமளிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. அழுக்காறு நீங்கியபின் செய்யுந் தொண்டுதான் தொண்டு.

10. குறுகிய மனமுடையவனின் பக்தி நஞ்சு கலந்த அமிர்தம் போன்றது.

11. தன்னைத்தான் அளந்து பார்க்கத் தெரியாதவன் மற்றவர்களை அளந்து பார்ப்பது எங்ஙனம்?

12. உலோபியின் செல்வம் பாம்புப் புற்றிலிருக்குந் தேன் போன்றது.

13. நல்லதாயினும் அது நல்லோர்களிடத்திலிருந்து வரவேண்டும்.

14. கர்மரகசியம் தெரிந்தவனுக்கு வாழ்க்கை விளையாட்டரங்கம் போன்றது.

15. சேர்ந்து வாழ்ந்தாலும் நீரிற் கலந்த எண்ணெயைப் போல் வாழ்.

16. உன்னை உன்வசப்படுத்தினால், மற்றவர்கள் உன் வசப்படுவார்கள்.

17. உண்மை இருக்கும் இடத்தில் அழகும், இளமையும் பொழியும்.

18. அடிமைகள் வாழ்ந்தாலும், நலன் பெறுவதற்கு ஒன்றுமேயில்லை.

19. மரணபயம் இருக்கின்றவன் விடுதலையின் உயர்ந்த சுகத்தை அறிவதில்லை.

20. அரிய சந்தர்ப்பங்கள் பலதும் உன் எதிரில் நிற்கின்றன. குழைத்து ஊட்டும்போது உண்ண மறுக்கும் குழந்தையைப்போல், சந்தர்ப்பத்தை உணர்ந்து, செயல் படுத்தத் தெரியாதவர்கள், துன்பத்திலிருந்து மீளுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. காலத்தைப் பிரயோசனப்படுத்தத் தெரியாதவர்களுக்குக் காலமும், காலனும் ஒன்றே.

22. உபயோகமுறை தெரிந்தால் நஞ்சும் அமுதமாகும்.

23. உரிமை இல்லாத இடத்தில் உரித்துடன் பேசி விரோதிகளைத் தேடாதே.

24. மனிதா! உனது மெய்யன்பை உணர்ந்து ஏற்றுக் கொள்ளும் வகையில், இவ்வுலகம் இல்லை. அதை உணர்ந்து அன்புடன் அரவணைக்கும் இறைவனிடம் அன்பு செலுத்தினால், வஞ்சனை இல்லாத பேரன்பில் மூழ்கி வாழலாம்.

25. மனச்சாந்தியை இழந்தவர்கள் தன்னையும், உலகத்தையும் வெறுக்கின்றனர். அன்றியும் தான் கொண்டது தான் சரி என்ற ஆபத்தான பிடிவாத குணமுடையவராயும் இருப்பர். எனவே தனக்கும் சமுதாயத்திற்கும் உபத்திரவம் இல்லாது வாழ மனச் சாந்தியை வளர்த்தெடுக்க வேண்டும்.

26. மனித வாழ்க்கை அருவருக்கத் தக்க நிலைக்குத் தாழ்ந்துவிடும் பொழுதும், சமுதாயப் பண்புகள் நஷ்டப்படும் பொழுதும், இவ்வுலகில் மனிதனாகப் பிறப்பதற்குரிய சந்தர்ப்பம் கிடைத்த நன்றிக்கடனுக்காவது நாம் மேலான வாழ்வு வாழக் கடமைப் பட்டிருக்கின்றோம். இதை உணராமல் செய்யுஞ் செயல் எல்லாம் தன்னைத்தான் வஞ்சிப்பதாகும்.

27. தங்கள் தங்களுடைய தேசிய கலை, கலாச்சாரத்திற்குத் தனி மதிப்பளிக்கும் ஒரு அரசியலமைப்புக்கு மாத்திரந்தான் ஆதரவளிக்க வேண்டும் · ஏன்?...... இதில் தான் எங்களுடைய முழுச் சுதந்திரமும் தங்கியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. காலமெல்லாம் பாலூட்டிவளர்த்த பாம்பும் ஒருநாள் ஊட்டிய கரத்தில் கொத்தும். அவ்விதமே செய் நன்றி மறந்த மனிதனும்.

29. சான்றோர்கள் மனம் புண்பட நடந்தால், தீர்த்தால் தீராத பிரம்ம சாபம் உன்னைவிட்டு அகலாது.

30. உன் குற்றம் மற்றவர் குற்றமாவதில்லை. குற்றத்தை உணர்ந்தால் திருத்துவதும் திருந்துவதும் எளிது.

31. நம்பினாலும் நம்பாவிட்டாலும் சரி, தெய்வம் உன்னைக் கணப்பொழுதிலும் கைவிடுவதில்லை. உயிர்த் துடிப்பின் ஆதார சக்தி தெய்வமாய் இருக்கும் பொழுது அது கைவிட்டால் நீ வாழ்வது எங்ஙனம்?

32. அழியவேண்டியது அழியும்பொழுது அதனைப் பார்த்துத் துயரம் கொள்ளாதே.

33. புயல் சமுத்திரத்தில் கொந்தளிப்பை உண்டு பண்ணினாலும் சமுத்திரம் சமுத்திரமாகவே இருப்பது போன்று பக்குவம் அடைந்தவர்களுடைய மனமும், வாழ்க்கையும் உலக விகாரத்தினால் கொந்தளிப்பதில்லை.

34. புனித யாத்திரைகள், ஆலய தரிசனம் போன்றவைகளை இறைவனோடு இணையும் முறையில், திரிகரண சுத்தியுடன் சிறுமைக் குணங்களை நீக்கிச் செய். அழுக்காறுகள் நீங்கும் வண்ணம் அது புனிதமாய் இருக்கட்டும்.

35. அந்தரங்கசுத்தி இல்லாத நாம ஜெபம் தியானம் போன்றவைகள் எள்ளளவிலும் பயன் அளிப்பதில்லை. அது வெறும் நாடகமாயும், தன்னையும் மற்றவர்களையும் ஆத்ம வஞ்சனைக்கு உட்படுத்தும் ஒரு தந்திரமாகவும் மாறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. நல்லொழுக்கக்குறைவால் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் துயரம், கடவுளே! கடவுளே! என்று சொல்லிக்கொண்டிருப்பதால் மட்டும் தீர்ந்துவிடாது. நற்செயலால் மனதைப் பரிசுத்தப்படுத்தும் பொழுது எல்லாம் சுகமாய் முடியும்.

37. பசி தாகமில்லாத இறைவனுக்கு வேளா வேளைக்கு நீரும், உணவும் அளிக்கிறீர்கள். தூணிலும் துரும்பிலும் குடியிருக்கத் தகுதியுடையவனுக்குத் தனித்ததோர் இடவசதியும் செய்து கொடுக்கின்றீர்கள். உங்களுடைய அதே உணர்வும், செயலும் மனிதனாகப் பிறந்தும், மனித உரிமையற்று நிர்க்கதியாய் ஊர்ந்து செல்லும் மனித உருவங்களுக்கு அளிக்கப்படுமானால், அதுவே இறைவனுக்கு அர்ப்பணிக்கும் சிறந்த நிவேதனமாகும்.

38. இரைப்பை பழுதடையும் வண்ணம் உண்டு உறங்கும் பொழுது, இலை தழைகளைத் தின்று வாழும் நிலைக்குத் தள்ளப்பட்ட ஏழை மக்களைப் பற்றி நினையாத இருதயத்தில் இறைவன் கடுகளவும் நுழைவதில்லை.

39. மனதால் வாழ்கின்றவன் மனிதன். நீதி நியாயத்திற்குப் பொருத்த மில்லாத ஆதிக்க மனமுடையவர்களுடைய மனதைவிட உங்களுடைய மனதை அதீத சக்தியுடையதாக மாற்றிவிடுங்கள். அங்ஙனம் நீங்கள் சுயரட்சகர்களாக மாறிவிடும் பொழுது விடுதலைக்குரிய வழி தானே பிறக்கும்.

40. சொல்லும் செயலும் சிந்தனையும் தாய்மொழிமூலம் செயற்படும் போது விடுதலையின் முதற்கதவு திறக்கப்படுகிறது.

41. மூர்க்கத்தனமான அசுர சக்தியைக் கூரிய புத்தியாலும், நுணுக்கமான உபாயத்தாலும் எளிதில் வென்றுவிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. வாழ்க்கை உரிமைகளுக்குரிய சம சந்தர்ப்பம் மனிதனுக்கு மாத்திரமன்று, விலங்கினத்திற்கும் இருக்க வேண்டும். அதைப் பகிர்ந்தளிக்கும் தேசம்தான், தர்ம தேசம்.

43. தங்கள் தங்களை இன்னும் ஆழமான ரீதியில் அறிவதற்கும், நாள்தோறும் கூடுதலான கர்ம சக்தியைப் பெறுவதற்கும் பழகிக்கொள்ள வேண்டும். சொந்தப் பிரச்சனைகளை நேரடியாகப் பார்த்தறிவதற்கும், அதைச் சுயமாகவே தீர்ப்பதற்கும் இதைத்தவிர வேறுவழியில்லை.

44. கிடைக்கும் சுதந்திரம், சந்தர்ப்பம் இவற்றை சரிவர உபயோகப்படுத்தத் தவறினால் அது மீண்டு கிடைப்பதரிது.

45. இராவணன், கம்ஸன், துரியோதனன், சூரன் போன்றவர்களுக்குத் தன்டனைக்குப் பின்புதான் பாவ மன்னிப்புக் கிடைத்திருக்கிறது.

46. பொருளின் தாரதம்மியங்களைக் கொண்டு வாழ்க்கையின் உயர்வு தாழ்வை நிச்சயிப்பது மடமை. மனதின் தராதரத்தைக் கொண்டு தான் அதை நிச்சயிக்க வேண்டும். மனத் தெளிவுடையவனுக்கு லாபமும் நஷ்டமும் ஒன்றேயாகும்.

47. தேவையானதை வைத்துத் தேவையில்லாததை விட்டு விடும் இயற்கையான அறிவு சகல ஜீவராசிகளிடத்திலும் இயல்பாக அமைந்திருக்கிறது. மனிதனில் அது விவேகம் அல்லது பகுத்தறிவு என்ற சிறப்பான குணத்துடன் இருந்தும் பேராசையால் அது அறியப் படுவதில்லை.

48. மனம் எப்பொருளில் கலந்திருக்கிறதோ அப்பொருளின் வடிவம் கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. மனம் ஒரு நுண்மையான பொருளாதலால், அதை முறையாக ஆராய்ந்தால் எளிதில் அறியக்கூடியதே யாகும்.

50. அறிவினாலும் அப்பியாசத்தினாலும் மனதைத் தன் வசப்படுத்தத் தெரிந்தவனுக்கு வாழ்க்கை என்பது ஒரு காற்பந்து விளையாட்டுப் போன்று சுவைமிக்க விளையாட்டாகும்.

51. மனதை ஆத்மாவில் லயம் செய்து நிறுத்தும் நிலை தான் மனோலயம். மனவொடுக்கம், மன நாசம், மனதைக் கடந்த நிலை என்றெல்லாஞ் சொல்லப் படுவதுமஃதே.

52. அரசியல், பொருளாதாரத் தத்துவங்கள் சமயக் கொள்கைகளுக்கு மாறானதன்று. அவை சில மகத் தான உண்மைகளின் அடிப்படையில் சிந்தனை செய்து செயற்படுத்தும் பொழுது சமயம் அதை முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளும்.

53. ஆத்ம சுகம், மனச்சுகம், சரீரசுகம் என்ற மூவகைச் சுகங்கள் மனிதனுக்குத் தேவை. சரீரசுகமில்லாத வனுக்கு மனச்சுகமில்லை. மனச்சுகமில்லாதவனுக்கு ஆத்ம சுகம் இல்லை ஆத்ம சுகம் பூரணமாயிருப்ப வனுக்கு மனச்சுகத்திலும் சரீர சுகத்திலும் நாட்டமு மில்லை.

54. தர்மத்தையுணர்ந்து அதன் வழி நில்லாதவர்க்கு ஞானம் என்பது பிறப்பதில்லை.

55. தர்மம் காய் போன்றது எனில், ஞானம் பழம் போன்றதாகும். வாழ்க்கையில் தர்மம் என்ற காய் முற்றி ஞானம் என்ற பழமாகப் பழுக்கின்றது.

56. அடிப்படையில் விடுதலை வேட்கையும் வெளிப்ப டையில் உலக க்ஷேமமும்தான் ஒரு மத விசுவாசி யின் இலட்சியமாக இருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. தர்மத்திற்கு இருக்கும் அதே ஆயுள் அதர்மத்திற்கும் இருக்கின்றது.

58. உயர்வதும் தாழ்வதுமாகிய இயற்கை நியதிகளைப் போன்று தர்மமும் அதர்மமும் காலாகாலத்தில் தேய்வதும் வளர்வதுமாகத் தோற்றமளிக்கிறது.

59. மத விசுவாசமுடைய சிறந்த அரசாட்சியின் துணையால்தான் அதர் மத்தை ஒழித்துத் தர்மத்தை நிலை நிறுத்தமுடியும். மக்கள் தர்மத்தை அனுஷ்டிக்கும் வகையில் ஆட்சி செலுத்தி, தர்ம நெறியில் மக்கள் ஒழுகத் தொடங்கும் பொழுது ஆட்சியின் அவசியம் மக்களுக்குத் தேவையற்றதாகிவிடுகிறது.

60. தர்மத்தின் அடிப்படையில் அரசாட்சி இருந்தால் தான் மதகுருமார்களினாலும், மதப்பிரசாரத்தாலும் பிரயோசனம் ஏற்படும்.

61. தர்ம சிந்தனைக்கு இடமில்லாத நிர்வாகமும், கல்வி முறையும் இருக்குமிடத்தில், எக்காலமும் அமைதி நிலவுவதற்கு இடமில்லை.

62. தர்ம சிந்தனை இல்லாத மக்கள் இருக்குமிடத்தில் எத்தகைய அரசாட்சியும் நிலைத்திருப்பதில்லை.

63. அரசாட்சியை விட தர்மம் பெரியதென்று, மக்கள் நினைக்கும் பொழுதுதான், அரசாட்சி அதன் உண்மையான குறிக்கோளை அடையும்.

64. வேற்றுமையில் ஒற்றுமையிருக்கும் இயற்கை இரகசியத்தை அறிந்தவர்கள் உள்ளத்தில் சமரசம் தானாகவே பிறக்கின்றது.

65. பிராணன், மனம் புத்தி மூன்றும் ஆத்மாவில் லயிக்கும்பொழுது அதி அற்புதமான சுகம் பிறக்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. எங்கு பண்பு குறைந்திருக்கின்றதோ அங்கு தரும மில்லை தருமத்தின் செயலுருவம் தான் பண்பு

67. தாய் தந்தையின் அந்தரங்க எண்ணங்களின் உருவ வடிவமாகத்தான் குழந்தைகள் பிறக்கின்றன.

68. தாய் தந்தையர்களின் அடிமனதில் பதிந்திருக்கும் எண்ணங்களுக்குத் தக்கபடி, பிறக்கும் குழந்தைகளின் அடிப்படைச் சுபாவமும் அமைந்திருக்கும்.

69. தர்ம சிந்தனைகள் அடிமனதில் பதியாதவர்களுக்கு நன்மக்கள் பிறப்பதில்லை

70. தர்மத்தை உபாசிக்கின்றவர்களுக்குத் தர்ம தேவதை புத்திரனாகப் பிறக்கின்றது.

71. நல்லறமிக்க இல்லறத்திலிருந்து ஒழுக்கமுடைய மக்கள் பிறக்கின்றனர்

72. நல்லறமில்லாத இல்லறமே ஒழுக்கங் கெட்ட பிரஜை களுக்குக் காரணம்.

73 மாதா, பிதா, குரு, அரசன் இந்நால்வரும் அறநெறி யில் வாழ்பவராகில் கெட்ட பிள்ளையும், கெட்ட சிஷ்யனும், கெட்ட பிரஜையும் இருக்கமுடியாது.

74. சத்தியம், தர்மம் இவற்றை இரு கண்களாக வைத்து வாழ்கின்றவர்களுக்கு அரசியல் சலுகையும் பாது காப்பும் எதற்கு?

75. சுயநலம் கருதி கடமையும், சேவையும் செய்கின்ற வர்களுக்கு இறுதியில் அதுவே துன்பத்திற்குக் கார ணமாகின்றது.

76. அசுர குணம் படைத்தவர்களுக்கு நல்லுபதேசம், செய்தல், குளிர் ஜுரம் உடையவர்களுக்குக் கொடுக் கும் அன்னம் போன்று விஷமாக மாறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. அறநெறி ஒழுக்கில்லாத அரசியல் வாதிகளின் ஆட்சியில், பஞ்சமா பாதகங்கள் பெருகும்.

78. சொந்தச் சுகதுக்கங்களுக்குத் தானே காரணமென்பதை தன்னை ஆராய்ந்து அறிந்து கொண்டவர்களுக்கு நாளடைவில் நிறைந்த சாந்தியும் ஆத்ம சுகமும் கிடைக்கின்றது.

79. அறமில்லாதவனுக்கு இறைவனும், இறை உணர்வு இல்லாதவனுக்கு அறமுமில்லை.

80. அறநெறியும், அரசாட்சியும் பிராணனும் சரீரமும் போன்றவை, அறம் குன்றிய ஆட்சி வீழ்ச்சியடைகின்றது.

81. உலோகாயதக் கல்வியால் புத்திக்குட்பட்ட காரியங்களைத்தான் கற்பிக்க முடியும். சமயக்கல்வியால் புத்திக்கும் அப்பாற்பட்ட விஷயங்களையும் அறிய முடியும்.

82. எல்லா மனிதருடைய அடிப்படைத் தேவைகளும் ஒன்றாயிருந்த போதிலும் அவை நிறைவேறும் முறைதான் கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப மாறுபடும்.

83. பன்றியின் சயனசுகம் சேற்றில் தங்கியிருப்பது போன்று நெறிகெட்டவர்களுக்குப் பஞ்சமா பாதகங்கள் சுகமாகத் தோன்றும்.

84. எருதிலிருந்து பால் சுரந்தாலும், வஞ்சகர்களிடத்திருந்து அன்பு சுரப்பது அரிதிலும் அரிது.

85. உருக்கினால் உருகாத உலோகப் பொருள் உலகில் இல்லாதிருக்கலாம். எனினும் மூர்க்கரின் உள்ளம் உருகுவது மிகக் கடினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86. வித்திினின்று மரம், மரத்திலிருந்து பூ, காய், பழம் உண்டானாலும் மரத்தில் காய்த்துப் பழுத்த பழம் மரத்திற்குரியதன்று. இது மரத்தின் நியதி. அது போன்று தவத்திலிருந்து ஞானம், ஞானத்திலிருந்து சுகம் பிறக்கும். ஞானசுகம் ஞானிக்கு மட்டும் உரியதன்று.

87. ஞானியின் ஞான சுகம், ஞானகாரகனாகிய ஈஸ்வரனுக்கு அர்ப்பணம் செய்யப்படும் பொழுது, இறை சிருஷ்டிகள் அதனைப் பகிர்ந்து கொள்கின்றன.

88. பிறருடைய நலத்தைப் பேணி வளர்ப்பவர்களின் சுய சுகம், பரசுகமாக மாறி விடுகிறது.

89. உனது சொந்த விருப்பு வெறுப்புகளைப் புறக்கணித்து இறைவனுடைய விருப்பத்திற்கு உன்னை ஆளாக்கி விடும் போதே இறை அருளுக்கும், அன்புக்கும் நீ பாத்திரமாகிறாய்.

90. உன்னிடமிருக்கும் சகலவிதமான உடமைகள், உரிமைகளை முற்றாக விட்டுவிடு. உன்னை நிர்க்கதிக்கு உட்படுத்து. உனது சுய சிந்தனையிலிருந்தும் செயலிலிருந்தும் விலகு. பட்டம் பதவிகளை உதறு. கற்ற கல்வியை நிஷ்பிரயோசனப்படுத்து. இங்ஙனம் நீ செய்ய முடியுமானால் ''சரணாகதி'' என்ற உயர்ந்த நிலையால் ஞானத்தின் உச்சநிலை அடைவாய்.

91. இரத்த சோகையால் துன்புறும் நோயாளிக்கு இரத்த விருத்திக்குரிய மருந்தினாலன்றி வேறு ஒன்றினாலும் சுகம் கிடைக்காதது போன்று, அஞ்ஞானத்தினால் துன்பப் படுகிறவர்களுக்கு, ஞானத்தால் அன்றி, வேறொன்றினாலும் சுகம் கிடைப்பதில்லை.

92. தவத்தினாலன்றி உபதேசத்தினால் ஞானசக்தி உண்டாவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93. உபதேசத்தினாலும், உபதேசம் பெறுவதினாலும் பூரணத்துவம் அடையமுடியாது. பற்றின்மை யாலேயே அதை அடையலாம்.

94. மதமும், தர்மமும், முத்துச்சிப்பியும் முத்தும் போன்றது.

95. சரீரம் இருக்கும்வரை ஞானிக்கும் பசி, தாகம், உறக்கம், பிணி போன்ற சரீர உபாதைகள் இருக்கத்தான் செய்யும்.

96. குளிர்ந்த கார்முகிலை உஷ்ணமுகில் உராயும் பொழுது இடியும், மின்னலும் உண்டாவது போன்று, தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் நடக்கும் போராட்டத்தில் சத்தியம் என்ற மின்னல் தோன்றுகிறது.

97. குருவை குருவாகவும், தெய்வத்தை தெய்வமாகவும் கருதுகின்றவர்களுக்குத்தான் குரு தேவை. தெய்வம் தான் குரு என்று காணுகின்ற பேரறிஞனுக்கு குருவின் தேவைதான் என்ன?

98. நீரிலும் நிலத்திலும் வாழ்கின்ற சில பறவைகள் போன்று ஞானியும், இகத்திலும் பரத்திலும் சஞ்சரிக்கக் கூடிய தகுதியுடையவர்.

99. பறவைகள் உண்பது, கூடுகட்டுவது, தேகசுத்தம் செய்வதாகிய மூவகைக் கருமங்களையும் தமது ஒரே ஒரு அலகினால் மாத்திரஞ் செய்து முடிக்கின்றன. அதேபோன்று ஞானியின் ஞானமும் அநேக கருமங்களைச் செய்துமுடிக்கும் வல்லமையுடையது.

100. மயிலுக்குத் தேவாங்கு ஜன்ம விரோதியாய் இருப்பது போன்று, காமம் ஞானத்துக்கு ஜன்ம சத்துரு ஆகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101. மதுவை அமுதம் என்று கருதும் அசுரர் போன்று, அஞ்ஞானி சிற்றின்பத்தைப் பேரின்பம் எனக்கருது கிறான்.

102. புலிக்கு அறியுந்தன்மை நுகர்ச்சியிலிருப்பது போன்று, ஞானியின் அறிவும் அகக்கண்ணில் இருக்கின்றது.

103. சக்தி திரண்டு பொருளாவது போன்று, நிலையான சக்தி திரண்டு ஞானமாகிறது.

104. கருவுற்றிருப்பவர்களுக்கு அன்னத்துவேஷம் உண்டாவது போன்று ஞானக் கருவுற்றிருக்கும் ஞானசாதகனுக்கு விஷய சுகங்களில் வெறுப்பு உண்டாகிறது.

105. கடம்புப்பால் குடித்துக் குடல் அழுக்கை நீக்கும் கன்றுக்குட்டி போன்று, ஞான சாதகன் ஞானப் பால் குடித்து அக மலங்களை நீக்கிய வண்ணம் இருப்பான்.

106. புறப்பார்வையிலிருக்கும் தூரம், இடைவெளி, நேரம், காலம் முதலியவை அகப்பார்வையில் இருப்பதில்லை

107. ஞானமும் பக்தியும் இரு கண்கள் போன்றவை. ஞான சாதகன் நிலைத்த பொறுமையுடையவனாகில் குறியின் கண் நெருங்கிக் கொண்டிருப்பதாகக் கருதலாம்.

108. உண்ணும் மருந்து பலிதமாவதற்குப் பத்தியம் அவசியமாயிருப்பது போன்று, தவப்பயனுக்கு பிரமசாரியம் என்ற பத்தியம் அவசியமாகும்.

109. கடமை என்பது லௌகிகச் செயலாயிருந்தாலும் அதில் அன்பும், தியாகமும் கலக்கும் பொழுது ஞான சாதனமாக மாறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110. தேனில் ஊறிவிட்ட பழச்சுளைகள் கெட்டு விடுவதில்லை அதேபோன்று இறை சிந்தனையில் ஊறியிருக்கும் மனமும் பக்தியும் எக்காலமும் கெட்டு விடுவதில்லை

111. பிரபஞ்ச வாசனைகள் அற்றிருக்கும் மனம் ஆழமான மௌன சுகத்தை அனுபவிக்கின்றது. நீரைப் பிரித்துப் பாலை மாத்திரம் உண்ணும் பறவையை அன்னமென்பர். அன்னத்தைப் போன்று, தன்னிலிருக்கும் அசத்தை பிரித்துச் சத்தை மட்டும் உண்ணுகின்றவனை ஞானி என்பர்.

112. ஆசையின் மத்தியில் அசைவற்றிருக்கும் இரகசியத்தை அறிந்தவனை ஆசைகள் தீண்டுவதில்லை.

113. சர்வ சக்திதரனும், சர்வ வியாபியுமாகிய இறைவனை எல்லா மதத்தவர்களும் ஏகோபித்து வழிபடுகின்றனர் அதே இறைவன் பெயரைச்சொல்லிச் சொல்லி எல்லா மதத்தினரும் ஒன்றோடொன்று மோதி வாழ்கின்றனர் — என்ன மதியீனம்!

114. அன்பு என்பது ஒரு நல்ல மன விகாரம்,. பக்தி என்பது மனதைக் கடந்த விளக்கமுடியாத அற்புத ஆத்ம சுகம்.

115. கோது, சுளை, வித்துக்குள்ளே இருக்கும் பீஜம் போன்றே முறையே மதம், பண்பாடு, தர்மம் அமைந்திருக்கின்றது.

116. பண்பாடு என்பது தர்ம நெறியிலிருந்து புடம்பண்ணியெடுத்த நல்லதோர் பழக்க வழக்கமாகும்.

117. வியாதிக்கு ஔஷதம் போன்று, வாழ்க்கை! என்ற வியாதிக்கு ஔஷதமாய் இருப்பது தர்மம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

118. சரீரம், நித்தியம் என்றும், அநித்தியம் என்றும் வாதிட்டு வீணே காலம் கழிப்பவர்கள் சரீரத்தை உள்ளபடி பிரயோசனப்படுத்தத் தெரியாத வீணர்களேயாகும். சரீரத்தை மிதமிஞ்சிப் போற்றுவதும், தூற்றுவதும் குற்றமாகும்.

119. விஷத்தை விஷவித்தையால் இறக்குவது போன்று அஞ்ஞானம் என்ற விஷத்தை ஞானம் என்ற ஒளஷதத்தால் சுகப்படுத்தலாம்.

120. திசை அறிகருவி திசையைக் காட்டுவது போன்று உண்மையான வாழ்க்கையின் திசையைக் காட்டும் கருவி மதம்.

121. யானைக்கு கரும்பு போன்று, தர்மம் மனித வாழ்க்கைக்கு உவப்பான கரும்பு.

122. பால் கெட்டால் நஞ்சாக மாறுகின்றது. ஒழுக்கம் குறைந்த சமுதாயம் கெட்ட பாலுக்குச் சமானம்.

123 மரத்தில் பூக்கும் பூக்கள் எல்லாம் காயாவதில்லை. சில உதிர்ந்தே போய்விடுகின்றன. அதேபோன்று மனதில் உதயமாகும் எண்ணங்கள் முழுவதும் செயற்படுவதில்லை.

124. மலரிலிருந்து தேனூறுவது போன்று தியானத்தினின்று பெருஞ்சுகம் ஊறி வருகின்றது.

125. நீர் வற்றிய குட்டையில் துடித்துச் சாகும் மீன்கள் போன்று, தர்மம் குன்றிய மனித சமுதாயம் பஞ்சமா பாதங்களால் துடி துடித்துமடியும்.

126. நீர் கலந்த பால் கெட்டுப்போனால் அது பாலின் குற்றமன்று நீர் கலந்தவனின் குற்றமேயாகும். அனாசாரங்களினால் சமயம் கெட்டு விட்டால் அது சமயத்தின் குற்ற மன்று. அனாசாரங்களைப் புகுத்திய மனிதனின் குற்றமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

127. மனிதன் விரும்பினாலும், விரும்பா விட்டாலும், இருளும் ஒளியும் என்றென்றும் இருப்பது போன்று, உலகம் இருக்கும் வரையில் தர்மமும் அதர்மமும் இருந்தே தீரும்.

128. உத்தமமான பக்தி பயத்தினால் உருவாகும் ஒரு மன விகாரமன்று. சத்திய தரிசனத்தின் அனுபூதி மாத்திரமாய் நிற்கும் விளக்கமுடியாத கோடானு கோடி இன்பங்களின் திரட்சியேயாகும்.

129. பிரார்த்தனை, வழிபாடு, பூஜை, ஜெபம், தவம் முதலியவற்றின் காரிய சித்திதான் பக்தி.

130. கருமம், யோகம், ஞானம் முதலிய மரங்களில் காய்த்துக் கனிந்த கனியே பக்தி.

131. புளிமாங்காய், நன்றாக முற்றிப் பழுத்தால் சுவை மிக்கதாய் மாறுவது போன்று, விஷய வாசனைகளால் புளித்துக் கெட்டுப்போன வாழ்க்கை, பக்தி நெறியால் முற்றிப் பழுக்கும்போது நிலையான சுகத்தைக் கொடுக்கின்றது.

132. வெளிச்சம் ஒன்றினாலன்றி வேறெதனாலும் இருள் நீங்குவதில்லை. அதே போன்றே சுத்த ஞானத்தினாலன்றி வேறெதனாலும் வினைப் பயன் நீங்குவதில்லை.

133. தேன் கலந்த முக்கனிரசம் போன்று தெய்வீகம் கலந்த கர்மம், யோகம், ஞானம் என்ற முக்கனி பிழிந்தெடுத்த ரசமே பக்தி.

134. சந்துப்புழு, பயிர்களின் சந்து பொந்துகளில் குடியிருந்து பயிரை நாசஞ் செய்வது போன்று வஞ்சகக் குணம் இருதயத்தில் குடியிருந்து, மனிதனை அடியோடு நாசஞ் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

135. நீரோட்டத்திற்கெதிரே நீந்திப் பழகுவதால் சரீரம் வலுவடைவது போன்று வாழ்க்கையில் வருங்கஷ்டங்களை எதிர்த்துப் போராடுவதனால் மனம் வலுவுடையதாகின்றது.

136. இனம் இனத்தை நாடுவது போன்று போலிகள் போலிகளை நாடுகின்றனர்.

137. நாய் போன்ற பிராணிகளுக்கு வெறி பிடித்தால், அடித்துக் கொல்லலாம் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் மனித சமுதாயத்திற்கு வெறி பிடித்தால் என்ன செய்வது?

138. சமயமென்றால் கடைந்தெடுத்த வாழ்க்கைத் திட்டத்தின் பெட்டகமாகும்.

139. எந்த மதம் நிலையான தர்மத்தை உட்கொண்டிருக்கின்றதோ, அந்த மதம் என்றென்றும் உயிரோட்டம் உடையதாயிருக்கும்.

140. ஞானி ஞானோதயத்திற்குப் பின்னும் மக்களையும் மாநிலத்தையும், நன்றி உணர்வுடன் பார்க்க வேண்டும்.

141. பலாப்பழத்தின் சுவையும், குணமும் சுளையில் தங்கியிருப்பது போன்று மதத்தின் சாரம் மததர்மத்தில் கலந்திருக்கின்றது.

142. மதத்தில் இடைபுகுந்து வந்த அனாசாரங்களுக்காக மதத்தைப் புறக்கணிப்பது, எலிக்குப் பயந்து இல்லத்தைச் சுடுவதற்கு ஒப்பானது.

143. ஜனநாயக ஆட்சியில் எதிர்க் கட்சிகள், களைகொல்லி திராவகம் போன்றவை. ஆனால் அது அசிற்றுத் திராவகமாக மாறினால், பயிரையுஞ் சேர்த்து அழித்து விடுவது போன்று ஆட்சியை அழித்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

144. மாமிசம் உண்பவனைப் பார்த்துப் பிணந்தின்னி என்றொருவன் சொல்வானாகில் விபரீத பயன் விளையும். எனவே உண்மையைச் சொல்லும் பொழுது பண்புடன் சொல்ல வேண்டும்.

145. நிலத்தில் பாடுபட்டு உழைக்கும் உழைப்பாளியின் உழைப்பில்தான், உண்மையான ஜீவகளை பொங்கி வழிகின்றது.

146. ஆத்ம ஞான சுகமும், உத்தமமுமான பக்திச் சுவையும் ஒன்றேயாகும். பக்தியும், ஞானமும் ஆத்மாவின் இரு கண்களேயாகும்.

147. மனிதன் இறைவனில் இரண்டறக் கலந்திருக்குஞ் சுகமே பக்தி.

148. தேன் ஜாடியில் விழ்ந்திருக்குந் தேனீக்கு எங்ஙனம் தேனைச் சுவைக்க முடிவதில்லையோ அதேபோன்று பிரபஞ்ச வாசனையில் மூழ்கிக் கிடக்கும் மக்களுக்குப் பக்தி என்ற தேனமுதைச் சுவைக்க முடிவதில்லை.

149. பொறியில் வீழ்ந்திருக்கும் பறவைக்கு உணவின் சுகம் இல்லாதது போன்று, உலகப்பற்று என்ற பொறியில் வீழ்ந்து கிடக்கும் மனிதனுக்கு உண்மையான பக்தியின் சுவை தெரிவதில்லை.

150. நித்தியம், அநித்தியம், சிறுமை, பெருமை முதலியவற்றைச் சரிவர ஆராய்ந்து எது மெய் என்று அறியும் பொழுது, பக்தியுணர்வின் ஊற்றுவாய் திறக்கப்படுகிறது.

151. குற்றத்தைக் கண்டிப்பதும், திருத்த முயற்சிப்பதும் சமய சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு செய்யப்படாவிட்டால், கிடைக்கும் பலன் கலகமும் விரோதமுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

152. உனது அறிவைப்பற்றிய அறிவு உனக்கில்லாமல் இருப்பதே உனது துன்பங்களுக்கெல்லாம் மூல காரணம்.

153. தன் அபிமானத்தை தன் அளவில் அடக்கமாக வைத்திராவிட்டால் அது அகங்கார வடிவம் கொள்ளும். அகங்காரத்தின் விளைவு நாசம்.

154. உனது தீய கர்ம வினைகளின் திரட்சியே ஏழரைச் சனியாய் வடிவெடுக்கின்றது. அதற்கு அந்நியமாய்ப் பிறிதொரு சனிதோஷம் கிடையவே கிடையாது.

155. சரித்திர கால வரலாற்றினால் மாத்திரம் ஒரு தேசம் என்றும் பெருமையுடையதாய் இருப்பதற்கில்லை காலத்திற்கேற்றவாறு அபிவிருத்தி அடைந்தால் தான் சரித்திரப்பெருமையும் நிலைத்திருக்கும்.

156. பண்பாடு என்பது தொன்று தொட்டு வந்த பழக்கங்கள் அன்று. கோடானுகோடி மக்களால் பல்லாலாயிரம் தலைமுறைகளாகப் படிப்படியாய்ச் சீர்திருத்தியெடுத்த வாழ்க்கை முறையாகும்.

157. பழையதானாலும் கெட்டுவிடாமல் இருப்பது தர்மம் ஒன்றேயாகும்.

158. விவேகமிருந்தும் சினமும், சஞ்சலப்படும் சுபாவமும் உடையவர்களுக்கு நிம்மதி என்பதில்லை.

159. விவேகம் இல்லாத கல்வி கடிவாளம் இல்லாத குதிரை போன்றது.

160. குலம், கோத்திரம், பிறப்பு இவைகளால் ஒருவனைக் கணிப்பது பிழை. ஒருவனுடைய மேன்மையும் தாழ்வும் அவனது குணத்தைப் பொறுத்து இருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

161. சத்தியம், தானம், பொறுமை, ஒழுக்கம், சாந்தம், தபசு இவைகளால் எவன் பிரமத்தை அறிய முயற்சிக்கின்றானோ அவனே உத்தமமான பிராமணன். அத்தகையவன் சண்டாள குலத்தில் பிறந்தாலும், பிராமணனேயாம்.

162. ஞானம் கைவந்த போதிலும், மக்களையும், மாநிலத்தையும் மறப்பது இறைவனைப் புறக்கணிப்பதற்கு ஒப்பாகும்.

163. உனது திறமைகளை அடக்கி ஒடுக்காதே. அதை சீரிய முறையில் செயற்படுமாறு சுதந்திரமாகத் திறந்துவிடு.

164. எங்கு கருணை இருக்கின்றதோ அங்கு தர்மம் இருக்கும். தர்மம் இருக்குமிடத்தில் சுகம் இருக்கும். சுகம் இருக்கும் இடத்தில் இறைவன் இருப்பார்.

165. மன்னனும், மனிதனும் உனக்கு மன்னிப்பு அளித்தாலும் உனது தீவினைப்பயன் உனக்கு மன்னிப்பளிப்பதில்லை.

166. தன்னடக்கம் இல்லாதவர்களுக்குக் கிடைக்கும் அனுகூலம் சில சமயம் பிரதி கூலமாக மாறிவிடுகிறது.

167. வண்டுதான் தேன் உண்ணுமே தவிர மண்டூகம் (தவளை) அதை உண்பதில்லை. அதே போன்று உலக ஆசையில் மூழ்கிக் கிடப்பவர்களுக்கு ஞானத் தேன் உண்ண விருப்பம் வருவதில்லை.

168. அன்றலர்ந்த மலர் அன்று கெடும். மலராமல் மலர்ந்திருக்கும் ஞான மலர் என்றும் கெடுவதில்லை.

169. அந்தரங்க சுத்தியில்லாத ஒரு சமய வாதியை விட நல்லொழுக்கம் உடைய ஒரு நாஸ்திகன் மிகச் சிறந்தவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

170. தன்னறிவு தெளியும் வரையில் சான்றோன் ஒரு வரை நாடி நிற்பதால் பெரும் பயனுண்டு.

171. உன்னில் தேய்வதும், வளர்வதும் எவை என்பதைக் கண்டறிவது மிகக் கஸ்டம். நுண்ணறிவை நிதான மாய் உபயோகித்து அறியவும்.

172. தனக்கு மதிப்புத்தந்து தன்னைப் புகழ்ந்து கொண் டிருப்பவர்கள் மட்டும்தான் நல்லவர்கள், மற்றவர் களெல்லாம் பொல்லாதவர்கள் என்று நினைப்பவர் கள்தான் பொல்லாதவர்கள்.

173. குளத்தில் நீரிருக்கும்வரையில் மீன் இருக்கும். ஈர்ந் தெடுப்பதற்கு ஏதாவதொன்று இருக்கும் வரையில் மனிதர்கள் உன்னை நாடி நிற்பர். ஒன்றுமே இல்லை யென்றால் ஒருவரும் சார்வதில்லை.

174. கோயிலைச் சுற்றிவாழும் நாய்களெல்லாம் பிராம ணனாக மாறுவதில்லை. மகான்களைச் சுற்றி நிற்ப வர்கள் எல்லாம் நல்லவர்கள் ஆவதில்லை.

175. பழமை வாய்ந்ததையாயினும், புதியதையாயினும் அப்படியே ஏற்றுக்கொள்ளாதே. விவேகத்தினால் இரண்டிலுமிருக்கின்ற நல்லவைகளையே தேர்ந் தெடுத்துக்கொள்.

176. ஊசி முனையில் நிற்கப் பழகினாலும், மனநுனியில் ஒரு வினாடிதானும் நிற்கப் பழகுவது மிகக்கடினம்.

177. நிறம் மாறும் ஓணான் போன்று அடிக்கடி குணம் மாறுபவர்களிடத்திலிருந்து வெகு தூரம் **விலகி** நில்.

178. நண்பனாகிலும் கூரிய கத்தி உடையவன், வளர்ப்பு மிருகமாயினும் கூரிய கொம்புடையது, மனிதனாகி லும் பேராசைபிடித்தவன், இவ்வியல்புடைய மூவகை யினரும் ஆபத்தானவர் என்பது அறிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

179. தன்னயம் கருதாமல் அன்பு செலுத்துகிறவர்களுடைய அன்புதான் உண்மை அன்பு. அவர்கள்தான் உத்தம நண்பர்கள்.

180. சிற்றின்ப நுகர்ச்சிகளில் காணுந் தோல்விகளை தோல்வி என்று கருதி வருந்தாதே. அது திருந்துவதற்குரிய ஒரு கடுந் தண்டனை என்பதை உணர்க.

181. கடலின் மேற்பரப்பில்தான் அலையும் இரைச்சலும் இருக்கின்றது. ஆழத்தில் அவைகள் இல்லை. அதே போன்று மேல் மனத்தின் செயல் நிலையில் மாத்திரந்தான் துயரமும் அமைதிக்குறைவும் நிலவுகின்றது. அடிமனதில் இறங்கிச் செல்லும் அளவிற்கு ஆத்மசக்தியின் வலிவும், பேரானந்தமும்தான் அனுபவமாக நிலவுகிறது.

182. கண்டதும் கேட்டதும் எல்லாம் விரும்பாதே. நல்லவையில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அதை அழுத்தம் திருத்தமாகச் செயல்படுத்துக. பலன் நிச்சயம் கிடைக்கும்.

183. உலகியல் இன்பம், பால்பம், இளமை, முதுமை என்பதற்கிணங்க விதம் விதமாக அனுபவம் ஏற்படுகின்றது. ஞான இன்பமோ எந்தப் பருவத்திலும், ஒரே மாதிரியான சுகானுபவம் உடையது.

184. அருளும் பொருளும், உயிரும் சரீரமும் போன்று ஒன்றோடொன்று தொடர்புடையவை. இரண்டையும் படைத்த கரம் ஒன்று. ஆகையால் இவை இரண்டையும் இரண்டு கோணத்தில் வைத்துப் பார்த்து வாழ்வதில் அர்த்தமேயில்லை.

185. பழங்கள் பழுத்தால் மரத்தின் மேலும், கீழும் நல்லதும் கெட்டதுமாகிய பலவித பிராணிகள் வந்தடைகின்றன. அதே போன்று ஞானம் பூத்து நிற்கும் இடத்தில் பலதரப்பட்ட மனிதர்களும் வந்து சேர்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

186. மதம், ஆத்மீகம் இவைகளைத் தவறான வழியில் கவர்ச்சியுடைய தாக்கி வளர்ப்பதால் அது விரைவில் அழிந்துவிடும்.

187. துறவிகளின் பூர்வ வரலாற்றை அறிய முயற்சிப்பது, இறந்த குழந்தையின் சாதகம் வாசித்து அறிவதற்கு ஒப்பானது.

188. நேரம், காலம் கடவுள் இவை உன்னை நோக்கி வரும் எனக் காத்திருக்காதே. இம் மூன்றும் தீவிர முயற்சியுடையவனில் எப்பொழுதும் தங்கி இருக் கின்றது.

189. உனது கெட்டித்தனத்தால் பலதும் சாதிக்க முடிய லாம். ஆனால் சாதித்ததை நிம்மதியுடன் சம்பூர் ணமாய் அனுபவிப்பதற்குத் திருவருள் வேண்டும் என்பதை அறிக.

190. குளிப்பது, உண்பது, உறங்குவது, புணர்வது இவற்றை மனம் போன போக்கில் செய்தால் தேகசுகம் கெடும்; நோய்வாய்ப்படுவாய் ஊர்ந்தும், பறந்தும் வாழ்கின்ற பற்பல பிராணிகளின் தினசரி செயலுக்கு ஒரு நேரமும் நெறியும் உண்டு. மனிதனுக்கென்று ஒரு நன்னெறி இருந்தும், நெறி தவறி வாழ்கின் றவர்களின் வாழ்வால் என்ன பயன்?

191. உண்ணும் உணவின் அதிசூக்குமமான பகுதிக்கும், மனதிற்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன. எனவே நல்லுணர்வுகளை வளர்க்கும் சாத்வீக உணவை உண்க!

192. சுகமுடன் வாழ்வதற்கும், இறப்பதற்கும் ஒரு நெறி யும், குறியும் வேண்டும். அது இல்லையானால் திசை தடுமாறித் திரிய நேரிடும். இடறுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

193. முத்துச் சிப்பியை உடைத்துப் பார்த்தாற்றான் முத்து இருப்பதும் இல்லாததும் தெரியும். ஒருவருடைய இதயத்தை ஊடுருவிப்பார்க்கும் திறமை உனக்கிருந்தால் மட்டும்தான் மற்றவர்களுடைய நன்மை, தீமைகளைச் சரிவர அறிய இயலும்.

194. உனது கடமைகளைச் செயற்படுத்தும் பொழுது மற்றவர்களுக்கு இடையூறு விளையாமல் பார்த்துக் கொண்டால், இன்னலும் விரோதமும் குறையும்.

195. ஒரு தேசத்தின் இயற்கை வளங்களையும் செயற்கைச் செல்வங்களையும், அந்நாட்டு மக்கள் சம தர்ம ரீதியில் அனுபவிப்பதற்குரிய சந்தர்ப்பம் இருக்கவேண்டும். அங்ஙனம் இருந்தால் பஞ்சமா பாதகங்களைச் செய்யத் தூண்டும் உணர்வுகள் குறையும்; தேசப் பற்றும் தேச பத்தியும் பெருகும்.

196. மாதா, பிதா, குரு, மன்னன் இவர்கள் தான் தண்டிப்பதற்குரிய உரிமை உடையவர்கள். மற்றவர்கள் அதனைச் செய்தல் குற்றமாகும்.

197. உலகத்தைப் புரிந்து வாழ். துயர் நீங்கும்.

198. வெளிச்சத்திற்குப் பின் இருள் இருப்பது போன்று நல்லதென்று கருதுவதின் பின்னுக்குத் தீயதும் இருக்குமென்றறிக.

199. பகவான் என்ற சொல் இறைவனுக்கு மாத்திரம் பொருத்தமானது.

200. உலகத்தில் மனிதத் தன்மை வளரும் அளவிற்குப் பிரச்சனைகள் தானாகவே குறையும். ஆகையால் சகலவிதமான செயல்களும் மனிதத் தன்மையை வளர்த்தெடுக்கும் முறையில் அமையவேண்டும்.

201. சீரிய குணந்தான் செல்வங்களில் சிறந்த செல்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

202. தனது இதயத்தைப் பரிசுத்தப் படுத்தி எடுப்பது தான் நிலையான சம்பத்து. அது எதனாலும் அழிக் கப் படுவதில்லை.

203. என்ன தான் இருந்தாலும் நல்ல குணமில்லாவிட்டால் ஜீரண சக்தி குறைந்தவர்கள் உண்ணும் உணவு போன்று பிரயோசனமற்றது.

204. நீ ஒரு சக்திக் கனலாக மாறும் பொழுது உன்னை நோக்கி வரும் பிரச்சனைகள் தானாகவே கருகிவிடும்.

205. உலகம், உலகியல் தேவைகளில் தன்னிறைவு எய்தி னாலும், ஆத்மீக சைதன்யத்தின் உட்செறிவு இல் லாவிட்டால், சமுதாயத்தின் நிலை நாய்க்கூட்டத்தி னுள் வீசப்பட்ட மாமிசத்துண்டு போலாகிவிடும்.

206. ஆத்ம சித்திகள் மனம் புத்தியைக் கொண்டு அப்பி யாசித்து அடையக் கூடியதன்று, மனம் புத்திகள் அகந்தையால் செயற்படுபவை. ஆகையால் அகங்கார நாசத்திற்குப் பின் தோன்றும் விசேஷ பேறுகள்தான் ஆத்ம சித்திகள்.

207. நீ ஏதோ ஒரு துறையில் சிறிதளவு அறிவு பெற்றி ருக்கலாம் அதை வைத்துக்கொண்டு படித்தவன், அறிவுடையவன், நாகரீகமானவன் என்றெல்லாம் அகங்கரித்தால் அது உன்னைச் சர்வநாசத்தில் ஆழ்த்திவிடும்.

208. நீ எதைக் கற்றறிந்தாலும் உன்னுடைய சொந்தப் பிரச்சனைகளுக்கு நீயாகவே தீர்வுகாண முடியா திருந்தால் கற்றதின் பயன் என்ன?

209. எப்பொழுதும் எல்லாவற்றிலும் சந்தேகப்படும் சுபாவம் உடையவர்கள் ஒன்றையும் சரியான முறை யில் அறிவதும் அனுபவிப்பதும் இல்லை. எதையும் நிலையாக அடைவதும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

210. மனதைச் சரியான முறையில் கட்டுப்படுத்துவதற்குரிய பயிற்சியும், மனிதசக்திகளுக்கெல்லாம் ஆதாரமாயிருக்கின்ற கடவுள் சக்தியில் முழுநம்பிக்கையும் இல்லாதவிடத்தில் மற்றெல்லாம் இருந்தாலும் நிலையான சுகமும் சாந்தியும் உண்டாவதில்லை.

211. இன்று வரையில் நீ செய்து வரும் கர்மங்களில் அதிக பங்கும், உன்னுடைய சரீர மனம் இவைகளின் சக்தியைக் குறைக்கக் கூடியதும், சொந்த ஆத்மாவை வஞ்சிக்கக் கூடிய செயல்களும்தான் செய்து வருகின்றாய். ஒரு நாளைக்கு ஒரு தரமாவது தனிமையில் இருந்து ஆழமாய்ச் சிந்தனை செய். இந்த உண்மை விளங்கும். எனவே சிந்தனை செய்து தெளிவுபடுத்திய பிறகு மனம். சரீரம், புத்தி இவைகளைப் பலப்படுத்தக் கூடியதும், ஆத்மாவின் சுகத்திற்கேற்றவாறும் உரிய கர்மங்களை மாத்திரம் செய்தால் சுகமுடன் வாழலாம்.

212. முறையறிந்து செய்தால் ஒரு சிறு செயல் மூலமாகவே இறைவனுடைய திருவருளை எளிதில் பெறலாம்.

213. நீ இறைவனை நோக்கிக் கீழ் வருமாறு பிரார்த்தனை செய். என்னுடைய பலவீனத்தாலும், அஞ்ஞானத்தாலும், பல குற்றங்கள் செய்தும், நல்லன பலதும் செய்யாமலும் விட்டேன். இங்ஙனம் உன்னுடைய நெஞ்சுருகும் வண்ணம் பிரார்த்தனை செய்து வந்தால் இந்தப் பிறவியிலேயே பாபங்கள் நீங்கி திருப்தியும் சுகமும் பெறலாம்.

214. இதில் கூறப்பட்டிருக்கும் உண்மைகளை நீங்களாகவே உங்களில் கண்டறிந்து சுயம் செயல்படுத்துவீர்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் திரு. சு. நவரத்தினம் அவர்களின்
வாலிபத்தோற்றம்



திரு - நவரத்தினம் திருமதி - பராசக்தி நவரத்தினத்துடன்
பேரப்பிள்ளைகள் அமிர்இனி, அமிர்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திரு. சு. நவரத்தினம் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

''மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையா மெனில் உலகவர்முன் வருகென உரைப்பார்
(திருத்தொண்டர் புராணம்)

உலகில் வாழ்ந்து மறையும் ஜீவிகளில் மானிடம் ஒரு மகத்தான படைப்பு. இப்படைப்பு இரண்டு அம்சங் களின் இணைப்பாக அமைகின்றது. அவை ஆன்மா தேகம் என்பன. மரணம் என்ற ஒரு இயற்கை நிகழ்வின் போது ஆன்மா மறைகின்றது. தேகம் மடிகின்றது. மானிடன் ஒருவன் தோன்றி மறைவதற்கிடையில் மகத்தான காரியங் களை நிகழ்த்துகிறான் அந்த நிகழ்ச்சிகள் உலகத்தில் சற்காரிய நியமங்களாக நிலை பெற்று விடுகின்றன. அந்த நியமங்களில் இரண்டை ஞானசம்பந்தப் பெருமான் திருத் தொண்டர் புராணத்தின் வாயிலாக மக்களுக்கு அறியத் தருவதோடு அவற்றின் அருளாற்றலை மரணமடைந்த பூம்பாவையை உயிர்பெற்றெழச் செய்து நிருபித்தும் காட்டுகிறார்.

சற்காரியம்:-

அமரர் திரு. சு. நவரத்தினம் அவர்கள் அடியார் களுக்கு அமுது செய்வித்தல் பெருவிழாக் கண்டு ஆர்தல் ஆகிய சற்காரிய நியமங்களைத் தமது வாழ்நாளில் கடைப் பிடித்து நிறைவேற்றி மறைந்து விட்டார் நிறைவேற்றும் ஆர்வத்தைச் சிவயோக சமாஜம் வழங்கியது. அதிகாரத்தை ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா அவர்கள் வழங்கினார் கள். இதனால் சிவயோக சமாஜத்திலும் சிவயோகபுரம் நடேசர் கோவிலிலும் அடியார்களுக்கு அன்னதானமும் ஆடல்வல்லானுக்குப் பெருவிழா வெடுத்தும் கண்டுகளித்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறப்பும் வளர்ச்சியும்:-**

வரலாற்றுப் பெருமையும், வளமும், வண்மையும், பண்பும் நிறைந்த சான்றோர்களையுடைய யாழ் நாட்டில் கோண்டாவில் என்னும் இடத்தில் திரு. சுப்பிரமணியம் குஞ்சுப்பிள்ளை தம்பதியருக்கு 11-03-1927ல் பிறந்த நவரத்தினம் அவர்கள் கோண்டாவிலை விட்டுக் கோண மாமலைக்கு வருவதற்கிடையில் அவருடைய இளமை நலன்கள் மலர்ந்தன ஒரு சகோதரி உட்பட உடன் பிறப்புகள்ஒன்பது பேரைக் கொண்ட குடும்பத்தில் ஒன்பதாவது கடைக்குட்டி திரு சு. நவரத்தினம் அவர்கள்.

இளமைக் கல்வியை இனிது நிறைவேற்றி வளர்ந்த வாலிபனுடைய உள்ளுணர்வு "காலத்தை வீணாகக் கழிக்காதே" என்று உணர்த்தியது இதனால் திருநெல்வேலி விவசாயக் கல்லூரியில் பயிற்சியை முடித்து விவசாய மேற்பார்வையாளராக சில காலங்களைக் கழித்தார். அப் பதவியில் சளிப்படையாத திரு. நவரத்தினம் அவர்கள் திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் 1952ம் ஆண்டு சேர்ந்து இரண்டு வருட ஆசிரியப் பயிற்சியைப் பூர்த்தி செய்து பயிற்றப்பட்ட தமிழாசிரியரானார்.

**பண்டித மணியின் தொடர்பு:-**

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களை வித்தியா குருவாகப் பெற்ற நவரத்தினம் அவர்கள் தமிழையும் சமயக் கல்வியையும் பெற்றுப் பெருக்கிச் சீடரானார். இறுதி மூச்சுவரை மனம், வாக்கு, காயத்தால் பண்டிதமணியை நெஞ்சாரப் போற்றித் துதிப்பதை யான் அறிவேன். சமய தத்துவங்களையும் தமிழ் இன்பத்தையும் ஆழ்ந்து சிந்தித்துப் பேசும்போதெல்லாம் பண்டிதமணியின் வித்துவத்தை அடிநாதமாகக் கொண்டே பேசுவார். அமரர் நவரத்தினம் அவர்களுக்கு பண்டிதமணி நடமாடும் சர்வ கலாசாலை. நடமாடும் நோயாளியாக இருந்த காலத்தில் நவரத்தினம் அவர்களுக்கு இறைவன் அளித்த ஓய்வு நாட்களில் திருக்குறள், திருமந்திரம் பகவத்கீதை சுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தரின் ஞானதீபம் முதலிய சாஸ்திர நூல்களை ஆழ்ந்து படித்து உரையாடுவார். அந்த அனுபவங்கள் எனக்கும் மற்றும் பலருக்கும் கிடைத்தன.

**ஆசிரியர் முதல் நியமனம்:-**

1954ம் ஆண்டு தி/இ. கி. ச. இந்துக் கல்லூரிக்கு ஆசிரியராக முதல் நியமனம் பெற்று கடமையாற்ற வந்திருந்தார். அப்போது தான் எனக்கு அவருடைய முதல் சந்திப்புக் கிடைத்தது. அவருடைய எதிர்காலம் எப்படி அமையப்போகின்றது என்ற சிந்தனை எனக்கிருக்கவில்லை. தமிழும் சமயமும் எங்களுக்கு இணைப்புப் பாலமாக இருந்ததினால் நெருங்கிப் பழகிக் கொண்டோம். திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றுப் பெருமைகளை அறிய ஆர்வங்கொண்டிருந்த அவரை கோணேஸ்வரத்தில் ஆத்மீக நாட்டங்கொள்ளும் தாகத்தை உண்டாக்கினேன். இதனால் பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறும் கோணேஸ்வரத்திற்கு அழைத்துச் சென்று வழிபடுவோம். அதேபோன்று ஆத்மீக சாதனையில் தன்னை முழுமைபாகக் கரைத்துக் கொண்டிருக்கும் சுவாமி கெங்காதரானந்தா (சைதன்யர்) அவர்களிடமும் அழைத்துச் சென்று ஈடுபடுத்தினேன்.

இந்த இரண்டு சம்பவங்களும் பின்னர் நிகழப்போகும் மாபெருங் காரியத்திற்கு வித்திட்டது. போன்று அமைந்து விட்டது. இதனைப் பரமேஸ்வரனாகிய கோணேசப் பெருமானுடைய திருக்குறிப்பென்றே நினைக்கிறேன்.

**சிவயோக சமாஜத் தொடர்பு:-**

திருக்கோணேஸ்வரம் யோகிகளின் ஞானபூமி. சைதன்னியர் கெங்காதரனை ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாவாக ஆக்கிய புனிதபூமி. திருக்கோணமலையின் ஓர்பால் தனித்திருந்து வாழும் தவமணியாகிய சுவாமி கெங்காதரானந்தாவுக்கு யோகாச்சிரமம் அமைக்கப் பாடுபட்ட ஊழியர்கள் பலருள் ஒருவராக விளங்கியவர் அமரர் நவரத்தினம். ஆச்சிரமத் திருப்பணிகள் நடைபெறும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்சுமந்து, மண்சுமந்து கட்டிட வேலையை மேற்பார்வை செய்தவரும் அவரே. 1956ம் ஆண்டு தொடக்கம் இறுதி மூச்சுவரை சிவயோக சமாஜத்தின் உள்ளுறு தொண்டனாகவும் சுவாமிஜீயின் அணுக்கத் தொண்டனாகவும் வாழ்ந்தவர். சிவயோக சமாஜத்தின் வளர்ச்சிக்கு சுவாமிஜீ மேற்கொள்ளும் ஒவ்வொரு வேலைத் திட்டங்களையும் முன்னின்று நடத்தியவர்களில் ஒருவர். சமாஜத்து அனாதை இல்லம் பான்மதவாச்சி விவசாயப் பண்ணை சிவயோக புரம் நடேசர் கோவில் என்பனவற்றின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் திரிகரண சுத்தியோடு உழைத்த செயல்வீரர்.

1983ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் சிதைக்கப்பட்ட சிவயோகபுரம் நடேசர் கோவிலை புனருத்தாரணம் செய்யவேண்டுமென்று இரவு பகலாகச் சிந்தித்துக் கொண்டிருந்த சுவாமிஜீ அவர்கள் 1991ம் ஆண்டு மகாசமாதி அடைந்ததினால் சுவாமிஜீயுடைய இறுதிக்கடமைகளை நிறைவேற்றி அவருக்குச் சமாதிக் கோவிலை அமைத்துப் பராமரித்துவரும் தொண்டர்களுக்குத் தொண்டனாய் வாழ்ந்தவர் திரு. நவரத்தினம் அவர்கள்.

## திருமணவாழ்க்கை

கஞ்சிமடம் மேற்குத் தமிழ் மகா வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகவும் ஒளவைநகர் பான்மதவாச்சிப் பாடசாலைகளில் அதிபராகவும் கடமையாற்றிய திரு சு. நவரத்தினம் அவர்கள் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்ற அதே ஆண்டில் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திரு. பொன்னையா செல்லமுத்து தம்பதியரின் புத்திரியும், மட்டுநகர் புனித சிசிலியாக் கல்லூரி, வின்சன்ற் மகளிர் கல்லூரிகளில் ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவருமாகிய பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியை செல்வி. பொன்னையா - பராசக்தி என்பவரின் வாழ்க்கையைத் திசைதிருப்பித் திருமண பந்தத்தினால் தம்பதிகளானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்த சோர்வில்லாத மனைவி திருமதி. ந. பராசக்தி அவர்களுடன், அமரர் நவரத்தினம் அவர்கள் இல்லிருந்தோம்பி இனிது பெற்ற பிள்ளைகள் அறுவர். மூவர் ஆண்கள் சக்திதாசன், சக்திதரன், சுபகரன். மூவர் பெண்கள் நவசக்தி, சிவசக்தி, ஜெயசக்தி. நவரத்தினம் தம்பதிகள் தமது சக்தியெல்லாம் திரட்டி இல்வாழ்க்கையை நல்வாழ்வாக இனிது நடத்தினார்கள்.

''தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.,

''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் என்னும் சொல்''

என்று வள்ளுவர் கூறிய இலட்சியத்தில் வெற்றிக்கொடி நாட்டியவர்கள். பிள்ளைகளையெல்லாம் கல்வித் தகமையில் உயர்த்திக் கணிசமான அளவில் காஞ்சனமும் சேர்த்து வைத்துப் பிள்ளைகளின் கல்யாணங்களையும் கண்டு மகிழ்ந்தவர்.

நவசக்தி - புவனேஸ்வரனும் பெற்ற அமிர்தினி அமிர்தனையும்; சக்திதாசன் - ஜீவராணியும் பெற்ற மாதுரி பூர்ணிமாவையும்; சிவசக்தியும் - அங்ஸுவும் பெற்ற அருண் என்பவர்களான ஐந்து பேரப்பிள்ளைகளையும் எடுத்தணைத்து முத்தமிட்டு மகிழ்ந்தவர்

சுபகரன் - மேகலா; ஜெயசக்தி, சக்திதரன் என்பவர்களின் திருமணத் தீர்மானத்தின் நிறைவை எண்ணி அளவுகடந்த மகிழ்ச்சியோடு வாழ்ந்தவர் அமரர் நவரத்தினம் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் ஒரு ஏடு:-

திரு. சு. நவரத்தினம் அவர்களின் ஆன்ம யாத்திரையின் ஒரு ஏடு அவருடைய உள்ளுணர்வுக்குத் தோன்றியது போலும். சூழ் நிலையும் காலமும் சுகங்கொடுப்பதாயில்லை. கனவுகளை நனவாக்குவதற்கு உடல் இடங்கொடுப்பதாயுமில்லை. எனினும் திருவருட் குறிப்பு எதுவோ அதுதான் நடக்கும், என்ற உறுதிப்பாடு நவரத்தினம் அவர்களின் இறுதிக்காலத்தில் அவரை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

''எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்''


என்ற மாணிக்க வாசகரின் திருவாசகத்தின் உட்பொருளை உற்றுணர்ந்து, உருகி, ஊறி உள்கசிவுடையவராய் வாழ்ந்த நவரத்தினம் அவர்கள் 14-12-94 புதன்கிழமை இரவு நிம்மதியாகத் தூங்கச்சென்றார். நற்றுணையாய் நின்ற இறைவன் 15-12-94 வியாழக்கிழமை உதயத்தில் அமரத்துவத்தை அளித்துவிட்டான்.

''எப்பவோ முடிந்த காரியம்''
(யோகர் சுவாமிகள்)

ஞான சிரோன்மணி
பண்டிதர் ஆர். வடிவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு சு. நவரத்தினம் அவர்கள் ஸ்ரீ பாலயோகி மகராஜ் அவர்களை சிவயோகசமாஜத்தில் வரவேற்றது.



இராமகிருஷ்ண சங்கத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தா அவர்களையும் அன்பர்களையும் சு. நவரத்தினம் அவர்கள் சிவயோக சமாஜத்திற்கு அழைத்து வருவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவயோக சமாஜ உயிரோட்டத்தில்

## சங்கமமாகிய ஆசிரியர் நவரட்ணம்

திருக்கோணஸ்வரத்தின் வடகரை வீதியிலமைந்த ஓலைக் குடிசையிலே வெண்ணாடையில் தவப் பொலிவுடன் விளங்கிய அந்த இளந்துறவியை, தன் கர்ம நோய் தீரவேண்டும் என்ற ஒரே காரணத்தால் சந்திக்கச் சென்றவர், அந்த நிமிட முதலே அவரைத் தன் குருவாக ஏற்றுக் கொண்டார். பிரம்ம ஞானி சுவாமி கெங்காதரானந்தா அவர்களைச் சரணடைந்த ஆசிரியர் நவரட்ணம் அவர்கள், அந்த நாள் முதல் தன் தேக வியோகம் வரை சிவயோக சமாஜத்தின் செயற்பாடுகள் அனைத்திலும் முக்கிய பணியாளனாய்த் தன்னை ஆக்கி வாழ்ந்தவர்.

வடகரை வீதியில் ஆரம்பித்து, சிவயோக சமாஜத்தில் தொடர்ந்து நடந்து வரும் பஜனையில், அன்று போலவே தானும் பங்கு கொண்டு பாடி ஆத்மசுகம் பெற்று வாழ்ந்தவர்.

ஆச்சிரமத்தில் அவ்வப்போது நடைபெறும் கலை நிகழ்ச்சிகளின் போதெல்லாம் தோளோடு தோள் நின்று அவை சிறப்புற நடப்பதில் திருப்தியும் இன்பமும் அடைந்தவர்.

சமாஜத்திலும், நடேசராலயத்திலும் அடியார்க்கு அமுதளிக்கும் நிகழ்ச்சிகளில் அப்பணியை முழுமனதுடன் ஏற்று முன்னின்று சுவைபடச் சமைத்து, அடியார் மனம் குளிரப் பரிமாறி அதில் அளவிலா ஆத்ம திருப்தியை அடைந்தவர்.

கதிர்காம யாத்திரைக்காக திருக்கோணமலைக்கு நூற்றுக் கணக்கில் வரும் அடியார்களுக்கு, அன்பர் ஒருவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் பண உதவி கொண்டு சமாஜத்தில் அமுது செய்விக்கும் தெய்வீகப் பணியை வருடந்தோறும் செய்யும் பெரும் பாக்கியம் பெற்றவர்

சுவாமிஜியை நாடி பல ஊர்களினின்றும் வரும் அடியவர் அனைவர்க்கும் அடியவனாய் அவர்களின் சுய தேவைகளைப் பூர்த்தி செய்து உபசரித்து இன்பம் கண்டவர்.

சுவாமிஜியின் நிழலில் வாழ்ந்த தாய், தந்தையற்ற குழந்தைகளை, தன் குழந்தைகள் போன்று அரவணைத்து அன்புடன் வழிநடத்தியதில் மன சுகமடைந்தவர்.

மார்கழித் திருவெம்பாவை நாட்களில் ஆச்சிரமத்தினின்றும் புறப்படும் பஜனைக் குழுவில் 'கணீர்' என்று குரலெடுத்துப்பாடி முன் நடத்திச் செல்லும் பேறு பெற்றவர்.

தைப் பொங்கல் நன்னாளில் அதிகாலை ஆச்சிரம வாயிலில் பொங்கி, வரும் அடியார் பஜனை வழிபாடு முடிய, தித்திக்கும் பொங்கலை சுவாமிஜியுடன் சேர்ந்தமர்ந்து உண்பிக்கும் வாய்ப்பை அனைவர்க்கும் தந்து நின்றவர்.

பன்மதவாச்சியிலே சமாஜத்திற்கென ஒதுக்கப்பட்ட காடுகளைவெட்டி, களனி செய்த பெரும்பணியில் சுவாமிஜியுடன் தோள் கொடுத்து நிற்கும் பேறு பெற்றவர்.

எக்கருமத்தையும் பதற்றமின்றி, அனைவரையும் அன்புடன் அரவணைத்து செயற்படும் பெரும்திறன் பெற்றவர்.

சுவாமிஜியிடம் ஆயிரக்கணக்கில் அன்பர்கள் வந்த போதும், தம் சுகதுக்கங்களைப் புறக்கணித்து, என்றும் விருப்போடு குருபணிக்கே தம்மை ஒப்படைத்து, நவரட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் குடும்பம் வாழ்ந்ததை யாவரும் அறிவார். அவருடைய பணிகளை விரித்துக் கூறின் நீண்ட மலர்ச் சரமாக மணம் கமழ்ந்து நிற்கும். ஆசிரியரையிட்டு சிந்திக் கும் வேளையில் அவர் செயற்பாடுகள் யாவும் சிவயோக சமாஜத்தைச் சார்ந்து தழுவி நிற்பதை நிசர்சனமாகக் காணக்கூடியதாயுள்ளது. அவரது மறைவு சிவயோக சமா ஜத்தைப் பொறுத்தவரை ஒரு பெரும் இழப்பேயாகும்.

மார்கழி எட்டாம் நாள் அதிகாலை வேளை, அமைதி யாக ஆனந்தமாக இவ்வுலகை நீத்த இந்த ஆத்மாவின் பிரிவு, குருசேவையிலும் இத்தாபனத்தின் சேவையிலும் தன் வாழ்வை அர்ப்பணித்த புண்ணியத்தின் பெரும் பயனோ என ஆழமான சிந்தனையை எழுப்புகிறது.

அவருடைய பிரிவால் துயருறும் குடும்பத்தினர் அனைவர்க்கும் சிவயோக சமாஜத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபத்தைச் சமர்ப்பிக்கிறோம். நவரட்ணம் ஆசிரியரின் ஆத்மா தம் சற்குருவின் பாதகமலங்களில் ஆனந்தமாய் அமைதியும் சாந்தியும் பெற்றிடும் என்பதில் ஐயமில்லை.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி.

சிவயோக சமாஜம்,
பிரதான வீதி,
திருகோணமலை.
23-12-94

சுவாமி கெங்காதரானந்தா சமாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவரத்தினம் மனிதருள் இரத்தினம்

ஐயாவை நவரத்தின மாஸ்ரர் என்றும் நவரத்தினம் ஐயா என்றும் எல்லோரும் அன்பாக அழைப்பார்கள். முன்னாள் நீதியரசர் உயர்திரு நா. கிருஷ்ணதாசன் ஐயா அவர்களின் வேண்டுகோளின் பேரில் ஸ்ரீ சண்முகமாணவர் இல்லத்தை 1957ல் அமைத்து நடத்தியதில் நவரத்தினம் ஐயாவின் சேவை ஆரம்பித்தது. இதில் நானும் எனது பங்களிப்பைச் செய்த போது ஐயாவின் தொடர்பு ஏற்பட்டது.

ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜி அவர்களும் அப்போதிருந்த சுவாமிஜீயின் பக்தர்களும் சிவயோக சமாஜத்தை ஸ்தாபித்த போது நவரத்தினம் ஐயா முக்கிய இடத்தை வகித்தார். சிவயோக சமாஜமும் ஆச்சிரமமும் சிவயோகபுரத்தில் அமைக்கப்பட்ட நடேசர் ஆலயமும் அதனை அடுத்த தமிழர் குடியேற்றமும் ஐயாவை ஈர்த்தன அவற்றுடன் இரண்டறக் கலந்து செயற்பட்டார்.

இறுதி நாட்களிலும் விட்ட மூச்செல்லாம் சமாஜமும் நடேசர் கோயிலுந்தான். சிவயோகபுரத்தில் தமிழரை மீண்டும் குடியேற்ற வேண்டும் என்றும் இலங்கை முழுவதிலும் நடேசருக்கெனத் தனிக்கோயிலாயமைந்த நடேசராலயத்தை மறுபடியும் கட்டியெழுப்பிக் கும்பாபிஷேகம் செய்து மக்களின் வழிபாட்டுக்கு விடவேண்டுமென்றும் துடியாய்த் துடித்தார்.

சுவாமிஜீயின் தொடர்பு நவரத்தினம் ஐயாவை ஆத்மீகப்பக்கம் திருப்பியது. சுவாமிகளுடன் சேர்ந்து ஆத்மீகப் பணிபுரிவதும் சுவாமிஜீ இட்ட பணிகளை நிறைவேற்றிச் செயற்படுவது மாகப் பல வருடங்கள் கழிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியில் சுவாமிஜீயின் உள்ளத்தில் பெரும் இடத்தை ஐயா பிடித்து விட்டார். நாளடைவில் குடும்பம் முழுவதுக்குமே சுவாமிஜீ சற்குருவாகவும் வழிகாட்டியாகவும் ஆகிவிட்டார்.

சிவயோக புரத்தைப் போல பன்மதவாச்சியும் சமாஜப் பணிகளின் தளமாக விளங்கியது - அங்கும் கோயில் குடியேற்றம் வயல் தோட்டம் மாட்டுப் பண்ணை என்பன நடைபெற்றன. ஐயா அங்கும் முதல் தொண்டராக விளங்கினார்.

விவசாயப் பயிற்சி பெற்றிருந்ததோடு விவசாய மன்னனாகவும் விளங்கினார். பூமி திருத்தி உண் என்பதனைத் தன் விவசாய வாழ்வில் மெய்ப்பித்தார். நாட்டு உற்பத்தியைப் பெருக்கினார். பலருக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தார்.

வியாபாரத்திலும் ஈடுபட்டு ஒரு தொழில் அதிபராக விளங்கினார். ஆனால் ஒரு முதலாளியாக நடந்து கொள்ளவில்லை. ஐயா வலது கையால் கொடுப்பது இடது கைக்குத் தெரியாது. பிறருக்கு உதவுவதில் கொடுப்பதில் மகா திருப்தி. உதவி பெறுவதற்காகத் தொழிலாளர்களும் வறியவர்களும் அவரைச் சுற்றி நிற்பர்.

திருவெம்பாக் காலத்தில் அடியார்கள் சூழ நடேசர் கோயிலுக்குப் பஜனை செய்து கொண்டு போவார். அங்கும் சமாசத்திலும் அன்னதானங்களை முன்னின்று நடத்துவார். தேவைப்படின் தானும் சேர்ந்து ருசியாகச் சமையல் செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியம் சோதிடம் ஆகிய துறைகளிலும் ஈடு பட்டார். தனக்கும் மற்றவர்களுக்கும் வைத்தியம் செய்வார். சில வைத்திய முறைகளைச் சுவாமிஜீயிடமும் கற்றிருந் தார். அவர் பெற்ற அறிவு அனுபவங்களைக் கொண்டு அவரை ஒரு சர்வகலாசாலை என்று கூறலாம்.

தமிழ் அறிவுக்கும் சமய அறிவுக்கும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா குருவாக வாய்த்தமையைத் தான் பெற்ற பெரும் பேறாக எண்ணி வாழ்ந்தார். பண்டிதமணி யைத் திருக்கோணமலைக்கு அழைத்து விழா வெடுத்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.


ஆசிரியத் தொழிலையும் திறம்பட நடத்திப் பல மாணவர்களைக் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மேம்படச் செய்து சில மனிதர்களை உருவாக்கினார். மனிதர்களைக் கண்டு பிடித்து அவர்களைப் போற்றி வாழ்ந்தார். பிற்போக் கான கொள்கைகளை அறவே வெறுத்தார். ஒரு தலை சிறந்த சீர் திருத்தவாதியாக விளங்கினார்.

ஒரு காலம் சிறந்த அரசியல் வாதியாகவும் தொழிற் பட்டார். கூட்டங்கள் ஊர்வலங்கள் சத்தியாக் கிரகங்கள் மகாநாடுகள் நடத்தி அரசியல் தலைவர்களுடன் இணைந்து கொண்டார்.

எல்லோராலும் பராசக்தி அக்கா என்று அன்புடன் அழைக்கப்படும். ஐயாவின் பாரியார் கர்ம யோகியாக இருந்து கொண்டு ஐயாவின் சகல தொண்டுகளுக்கும் உதவியாகவும் ஒத்தாசையாகவும் செயலாற்றினார். நோ யுற்ற காலத்தில் ஐயாவுக்குச் செய்த தொண்டுகள் சொல் லிலடங்கா. ஐயாவின் ஆறு பிள்ளைகளும் படித்துப் பட்டம் பெற்று தந்தை மகற் காற்றும் உதவி அவையத்து முந்தியி ருப்பச் செயல் என்னும் திருக்குறளுக்கமைய முன்னணியில் இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறைபணிச் செம்மல் - கர்ம யோகி-திரு - பொ. கந்தையா (காந்தி ஆசிரியர்) அவர்களுடன் அமரர். சு. நவரத்தினம் அவர்கள்.



செல்வி த. சியாமளாதேவி அவர்களின் பிரம்மஞானி ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா என்ற நூல் வெளியீட்டு விழாவில் திரு. சு. நவரத்தினம் அவர்கள் உரையாற்றுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா பிற்காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்தார். இருந்த இடத்தில் இருந்து கொண்டும் வாகனங்களிற் சென்றும் பல பணிகளைப் புரிந்தார். இக்காலத்தில் ஆத்மீக நூல்களைப் படிப்பதிலும் அவற்றை அன்பர்களோடு கலந்து பேசுவதிலும் இன்பங்கண்டார். இப்படியே ஆத்மீக வாதியாக மாறி விட்டார். பகவத்கீதை திருக்குறள் இரண்டும் அவரது உள்ளத்தைப் பிடித்துக் கொண்டன. இறுதி நாட்களில் அவரது பேச்சுக்கள் சத்சங்கமாகவே அமைந்தன.

என்னிடத்தில் அளவற்ற மதிப்பு வைத்திருந்தார். எனது விழாவைச் சிறப்பாக நடத்திய பெருமை ஐயாவையே சாரும். முக்கிய விஷயங்களில் எனது ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களையும் கேட்பார். தனது முடிவுகளையும் உள்ளக் கிடக்கைகளையும் எடுத்துக்கூற எனது வரவைக் காத்திருப்பார். சுருங்கக் கூறின் ஐயா தனது உள்ளத்தில் எனக்கு ஒரு பகுதியை ஒதுக்கி வைத்திருந்தார்.

ஐயாவுக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் அவர் விட்டுச் சென்ற சிவயோக சமாஜ நடேசராலயப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதேயாகும். ஐயாவின் பிரிவால் வருந்தும் மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் ஆறுதல் கிடைக்கவும், ஐயாவின் ஆத்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல கோணேசப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''

முத்துக்குமார சுவாமி கோயிலடி
திருக்கோணமலை.
**23-12-94**

பொ. கந்தையா
காந்தி ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபணியில் கரைந்த சேவையாளர்

திருக்கோணமலை சிவயோக சமாஜ ஸ்தாபகர் ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்த மகரிஷியுடனும், ஆரம்ப காலந்தொட்டு இந்த ஸ்தாபனத்தின் முழுமையான வளர்ச்சியுடனும், சுமார் 38 ஆண்டுகளுக்கு மேலாகத் தம்மைக் கரைத்துக்கொண்டு, அதன் அருட்பிரவாகத்திலே சங்கமமாகிய பெரியார் சு. நவரத்தினம் அவர்களுக்கு, சிவபதமடைந்து முப்பத்தோராம் நாள் நினைவு மலர் மலர்ந்திருப்பது சாலவும் பொருத்தமானதாகும்.

1959ம் ஆண்டு இதே ஆச்சிரமத்தின் அருட்சுடரைத் தரிசிக்கும் பேறு எனக்குக் கிடைத்த காலத்திலிருந்து இறைபதமடைந்த ஆசிரியப் பெருந்தகையை நன்கறிவேன். அது மட்டுமல்ல, அவர் எனது அயலவருங்கூட. இப்பூமியில் வாழ்ந்தோம் என்பதற்கு அடையாளமாக பூர்வ புண்ணியத்தாலும், செயற்திறமைகளாலும், மனிதப் பண்புகளாலும் மிகச் சிலரே இறவாத தமது முத்திரைகளை பதித்துச் சென்றிருக்கின்றார்கள். அந்த வகையில் ஆசிரியரும் பேறு பெற்றவராகிறார்.

சிவயோக குருமணி ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்த மகராஜ் அவர்களைத் தமது உத்தம குருவாகப் பெற்று, அவரது திருவருட்கடாட்சத்திலேயே ஆசிரியரின் குடும்பம் வாழ்ந்து வருகின்றது. உலகியல் தேவைகள், உபசாரங்கள் இவற்றையெல்லாம் புறந்தள்ளி, இரவு பகலாக குரு சிந்தனையுடன் தொண்டாற்றி, அதனோடு ஐக்கியப்பட்டிருந்ததில் ஆசிரியரும், மனைவி, மக்களும் இன்புற்றிருந்தனர். எவருக்குமே கிடைத்தற்கரிய பெரும் பேறாக ஓர் தவசிரேஷ்டருக்கு பணிவிடைகள் செய்யும் பாக்கியம் பல்லாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலந்தொட்டு இறுதிவரை கிடைக்கப் பெற்றிருந்தது. குடும்பத்தின் தலைவரான திருவாளர் சு. நவரட்ணம் அவர்களின் மாசற்ற குருபக்தி, திடமான நம்பிக்கை, ஆழமான விசுவாசம் இவை அவரது குடும்பத்தினரையும் ஒன்றிணைத்து தொண்டியற்ற வழி வகுத்தது.

அது மட்டுமன்றி தன் குருவை நாடிவரும் பக்தர்களுக்கும் பணி செய்ய ஆசிரியர் பின்னிற்கவில்லை. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கிணங்க அவர்களை அன்புடனும் இன் முகத்துடனும் வரவேற்று உபசரிக்கும் சலிப்படையாத விருந்தோம்பும் பண்பை நான் பெருமையுடன் நோக்கியதுண்டு. குரு தேவரின் அருட்சக்தியின் அமுத சுரபி அங்குதான் ஊற்றுக் கண்டிருக்கிறதோ எனவும் நான் வியந்ததுண்டு. தகுந்த சந்தர்ப்பங்களில் ஆச்சிரமத்திலும், நடேசர் ஆலயத்திலும் அமுது வழங்குவதில் ஆனந்தமடைவார். தூய்மையான வெள்ளை வேஷ்டி; இடுப்பில் சுற்றிய காவித் துண்டு; நெற்றியில் துலங்கும் விபூதியின் வெண்மை; அவரது திடகாத்திரமான கருமை நிறமேனியை அழகுபடுத்த, எந்த வித ஆரவாரமுமின்றித் தம் கைகளினாலேயே இலகுவாக சுவைபட அமுத சமைத்து உள நிறைவுடன் அடியார்க்கு கொடுத்த பண்பினை எந்தவொரு ஆச்சிரமவாசியும் மறந்திட முடியாது. போதும் என்று நிறைவளிக்கும் தானங்களில் தலைசிறந்த அன்னத்தை அளித்தே 'சஞ்சிதம்' என்ற வங்கியில் பெரும் புண்ணிய பலனை வைப்புச் செய்தவர் இப் பெரியாராகும்.

தனது அன்றாட வாழ்க்கையில் ஆத்ம சுத்தியுடன் தானதருமங்களைச் செய்யவும் ஆசிரியர் தயங்கியதில்லை. அந்த மனநிறைவால் புளகாங்கிதம் அடைவார். எந்த விடயத்தையும் கள்ளம் கபடமின்றி, ஒளிவு மறைவில்லாது மனம் திறந்து கூறுவார். ஆன்மீக நூல்களின் கருத்துக்களை ஏனையோருடனும் பகிர்ந்து கொள்ளும் தாகம் இவரிடத்தில் எப்போதும் காணப்படும் சிறப்பம்சமாகும். தமது கல்விக்கு வித்திட்ட குரு, பண்டிதர் கணபதிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களையும், ஆன்மீகத் துறைக்கு வழிகாட்டிய குரு தேவரையும் அவர் நினைந்து பேசாத நாளில்லை என்றே கூறலாம்.

'மாஸ்ரர்' என்று அன்புடன் அழைத்து, சுவாமிஜி இடும் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு ஆச்சிரமப் பணி களை அவர் செய்வதில் அடையும் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. சிவயோக சமாஜத்தின் அடிநாதமாக விளங்கும் நாமபஜனையில் தவறாது கலந்து கொள்வார். தேவார திருவாசகங்களோடு 'ஹரி நாராயண' என்னும் நாமபஜனை இவரது குரல் வளத்திலே இசைக்கப்படும் பொழுது லய யோகத்தில் ஒன்றிடும் உணர்வையே தந்திடும்.

குருதேவரின் சமாதிக்கான இறுதிக் காலம்; கொழும்பு ரட்ணம் வைத்தியசாலையில் சுவாமிஜியின் தூல சரீரம் பேச்சற்று, விழிமூடி கடும் உபாதையில் போராடிக்கொண்டிருந்தது. எனினும் அவரது சைதன்ய சக்தி விழிப்புடன் வேகமாக இயங்கிக் கொண்டிருந்தது. அந் நிலையில் ஆசியர் அவர்களையும் பெயரிட்டு அழைத்து, தமது இறுதிக் கடமைகளைச் செய்யப் பணித்தார். அந்தக் கைங்கரியத்தையும், அஸ்தி சமாதிலிங்கப் பிரதிஷ்டையை யும் திடசித்தத்துடன் தளராது நின்று நிறைவு செய்து குருதேவரின் ஆசியைப் பெற்றுக் கொண்டவர் இவர்.

பின்னாட்களில் இவரது கனவும் நனவும் சுவாமிஜி, ஆச்சிரமம், நடேசராலயம் என்பவற்றிலேயே கருத்தாக இருந்தது. தமது குடும்பத்தை முழுமையாக ஏற்று வழி நடத்திய குருதேவரை தனது ஹருதயகமலத்தில் எந் நேரமும் இருத்திக் கொண்டதாலோ என்னவோ, அவரது புண்ணிய ஆத்மா உலகியல் பந்த பாரங்களின் தடைக ளின்றி, எந்த அவஸ்தையையும் காட்டாமல், அமைதியாக ஆனந்தமாக தம் குருவினது சைதன்ய அலைகளுடன் ஐக்கியமாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது வெற்றிடத்தை நிரப்புவது இலகுவான தல்ல. ஜீரணிக்க முடியாத இழப்பாகினும் அவர் எம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பது போன்ற உணர்வு அமைதி தருகிறது. தன் கணவரது இறுதி மூச்சுவரை சளைக்காது பணிவிடைகள் செய்து, கடமைகளை செவ்வனே முடித்துக் கொண்ட அக்கா பராசக்தி அவர்களையும், அப்பா என்ற அரண் தகர்ந்ததால் தாக்குண்டு தவிக்கும் அன்பான பிள்ளைகள் மருமக்களையும், பாட்டா என ஏங்கித் தவிக்கும் பேரன் பேத்திகளையும் குருவருள் துணை நின்று அரவணைத்து ஆறுதல் அளிக்கும் என்பதில் ஐயமில்லை. பெரியாார் சு. நவரத்தினம் அவர்களின் ஆத்மா, குருதேவரின் அருட்பொழிவில் அமைதியும் சாந்தியும் அடையும் என்பது சத்தியமாகும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

71, பிரதான வீதி,
திருக்கோணமலை.
20-12-94.

தா. சியாமளாதேவி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு' சு' நவரத்தினம் ஆசிரியர்

01. யாழினிய நன்னகரான் நவரட்ண நாமத்தான்
வாழத்திருக்கோணம் தேர்ந்தானே - நாளில்
நல்லாள் பராசக்தி நங்கை துணையிருக்க
இல்லறம் காத்தான் இனிது

02' தக்கார் தகவிலர்கள் தாரணியிலன்னவர்தம்
எச்சத்தினாலுணரப் படுவாரே — இச்சகத்தில்
அச்சந்துறந்து அறங்காத்தான் நவரட்ணன்
எச்சம் உணராதோ ஊர்.

03. மனைத்தக்க மாண்புடையாள் மாது பராசக்தி
தனைக்காத்துத் தற்கொண்டாற் பேணினனே-
பனைத்துணையாய்
பண்பான பாலகரைப் பக்குவமாய்ப் பெற்றார்கள்
கண்விழியாய்க் காத்தார் கனிந்து

04. ஊருணியாய் நீர்நிறைந்து ஓம்பித்தமர்பிறரை
வாரியணைத்து வளமீந்து — பாரினிலே
காருணியமூர்த்தி கெங்காதரானந்தன்
பாதத்தில் நின்றார் பணிந்து

05. நல்லதமிழாசானாய் நாதியில்லாப் பாலகர்க்கு
இல்லம் அமைத்தோம்பும் இரட்சகனாய் - வெல்லும்
வேதாந்த வித்தகனாய் வேண்டுவார்க்கீந்தின்பம்
பூ தலத்திற் கண்டான் பொலிந்து

06. வேழாண்மை செய்து விளைச்சல் பெருக்கித்தம்
தாழாண்மை போக்கத்துணிந்தான் - வேள்ளயிலே
பாலாய்ப் பசுந்தயிராய் பாங்கான நெய்முதலாய்
ஆவோம்பிப் பெற்றானறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. நண்பருக்கு நண்பன் நம்பினவர் தங்களுக்கு
நன்றே புரிந்தின்பம் நல்குபவன் - என்றும்
அன்பாலரவணைப்பான் ஆதாரமற்றவரின்
துன்பம் துடைத்து விடுவான்.

08. இன்னாசெய்தாரை ஒறுக்கு மாறவர்நாண
நன்னயமே செய்யும் முதல்வனவன் - பின்னும்
கண்ணாய் விருந்தோம்பிக் காப்பான் வருவிருந்து
எண்ணாதே எங்குமறைந்தான்.

09. தன்னடக்கம் தூய்மை தாழ்மை பொறுமையுடன்
பின்னடக்காப் பாங்கும் பெரிதான - நன்னடக்கை
முன்னெடுத்துக்காத்து முழுமையாய் வாழ்ந்துசிவன்
தன்னடியிற் சென்றான் துறந்து.

10 நிலையாதே யாக்கை நிலையாதே யிவ்வாழ்க்கை
நிலையாதே நீணிலத்து நெடுஞ்செல்வம் - நிலையாக
நீலகண்டன்பாத நீழலிற் சென்றானே
நேயமார் நவரத்தினன்.

அன்பன்
க. வேலுப்பிள்ளை
இளைப்பாறிய அதிபர்
தி/கோணேஸ்வர மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாயிராம்

## காலஞ்சென்ற சு. நவரத்தினம் அவர்களின்

# நினைவுச் செய்தி

காலஞ்சென்ற ஆசிரியர் அவர்கள் ஓர் புண்ணிய ஆத்மா. துயிலும் பொழுதே மரணத்தை எய்தியவர். இப்பேர்ப்பட்ட பயம், வேதனை இல்லாத, மரணம் ஒரு சிலருக்கே கிடைக்கக்கூடியது.

மாஸ்ரர் அவர்களுடன் கடந்த மூன்று ஆண்டு களுக்கு மேல் நன்கு பழகும் வாய்ப்பைப் பெற்றேன். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல், ஸ்ரீ சண்முக இல்லத்தில் நான் பணியாற்றியபோதும், இத் தாபனத்தின் முழுமை யான வரலாற்றை அறிந்திராமலிருந்தேன். ஸ்ரீ சண்முக தர்ம ஸ்தாபனத்தின் 35ஆவது ஆண்டு பூர்த்தியையிட்டு சிறப்பு மலர் ஒன்று வெளியிட முயன்றபோது, ஆசிரியர் அவர்களை அணுகி வேண்டிய விபரங்களைப் பெற்றேன். இத் தாபனத்தின் ஸ்தாபகர் உயர்திரு. நா. கிருஷ்ண தாசன் அவர்களால் 1957ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆதரவற்ற சிறுவர் இல்லத்தை முதன் முதலில் மேற் பார்வை செய்பவராக விளங்கியவர், அமரத்துவம் அடைந்த மாஸ்ரர் அவர்களே.

அன்னார் சிறந்த ஆசிரியராக தனது பணியைச் சிறப்பாகவும், திறமையாகவும் ஆற்றியதோடு சமய, சமூகப் பணிகளையும் ஆற்றி வந்தார். சிவயோக சமாஜத் தில் சுவாமியுடன் பல காலம் தங்கியிருந்து ஆன்மீகக் கல்வி பெற்று பல சமய, சமூகத் தொண்டுகளைத் திருக் கோணமலை மாவட்டத்தில் ஆற்றியவர்.

அன்னாரிடம் இயல்பாக்வே நற்குணம் நிரம்பியிருந் தது. மிகவும் பண்பானவர். எவ்வித பயமோ, தயக்கமோ இன்றி அவரிடம் நாம் பல சந்தேகங்களைக் கேட்கலாம். பல விடயங்கள் சம்பந்தமாக நான் அவரைச் சந்தித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது மகிழ்ச்சியுடன் வரவேற்று நாம் கேட்கும் கேள்வி களுக்கு ஆறுதலாக அமைதியாக சிறந்த விளக்கம் தருவார். இப்பேற்பட்ட பண்பாளர்களை தற்போது காண்பது அரிது. அவரோடு உரையாடுவதே ஓர் மகிழ்ச்சி.

தமிழ் வைத்தியமுறைகளையும் நன்கு அறிந்தவர். சண்முக இல்லப் பிள்ளைகளுக்கு நோய் ஏற்படும் நேரங் களில் அவரிடம் சென்றால் நோயை மாற்றுவதற்கு பயன் படுத்தும் மூலிகைகளையும் மருந்துகளையும் கூறி பயன் படுத்தும் முறைகளையும் விளக்கிச் சொல்லுவார்.

தன் குடும்பத்தினருக்கு மட்டும் தன் சேவையை வழங்காமல், தன்னை அணுகிய அனைவருக்கும் எந்நேர மும் உதவி செய்யும் சுபாவமுடையவராகத் திகழ்ந்தார். அவர் மட்டுமல்ல அன்னாரின் துணைவியார்கூட பிறருக்கு உதவி செய்வதில் பின் நிற்பதில்லை.

வாழ்நாளில் கர்மயோகியாக இருந்து மரணத்தை யும் எப்போதும் வரவேற்றுக் காத்திருந்தார், அதன் பிரகாரம் துயிலோடு துயின்றார். அவரது மரணம் ஆனந் தமயமானது.

அவரது பிரிவால் வாடும், மனைவி, பிள்ளைகள் ஆறுதலடையவும், அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல பகவானைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

செல்வி. விமலா நடராஜா
செயலாளர்
ஸ்ரீ சண்முக தர்ம ஸ்தாபனம்

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்டி கொடுத்து... உயிர் கொடுத்த

## எங்கள் ஆசிரியர் நவரட்ணம்

அன்புடன் பதிசேவைக்கே தன் வாழ்வை அர்ப் பணித்துக் கொண்ட மனைவி - தலைநிமிர்ந்து பேர்விளங்க வைக்க நல்ல பதவிகளில் வாழும் இரு பெண்கள் - பல் வைத்தியத்துறையில் கற்கும் மாணவனாகக் கடைசிமகன்- உள்ளம் புழகமுறவைக்கும் பேரக்குழந்தைகள் - எல்லாவற் றுக்கும் மேலாக, நல்வாழ்வு காட்டும் நண்பராக எத்த னையோ நூல்கள் - தான் பெற்ற இன்பத்தைப் பகிர்ந்து மகிழ, அறிவுமிக்க நல்ல நண்பர் குழாம் - இத்தனையையும் விடுத்து, அந்தப் பிரிவின் துயர் எள்ளத்தனையும், தன்னை தாக்காத பாவத்தில் முகம் மலர்ந்து விளங்க துயில்வபோல் நீள்துயில் கொண்ட "நவரட்ணம் மாஸ்டரின்" பெருமை பேசும் நாளாக இந்தமாத அந்தியேட்டி வந்தமைந்துள்ளது.

சிவயோக சமாஜம் - ஆசிரியர் நவரட்ணம் ஆரம்ப முதலே இருந்து போற்றி வளர்த்து, தன்னையும் வளர்த் துக் கொண்ட ஆத்மீகத் தாபனம். சுவாமி கெங்காதரா னந்தாஜீ - ஆச்சிரமத்தாபகரை - தனது சற்குருவாகவும் ஏற்று அவர் சொன்னதெல்லாம் தலைமேற்கொண்டு வாழ் ந்த குடும்பமாக அவர் தம்மை ஆக்கிக் கொண்டதே, தனிக்கதையாகும். சுவாமிஜீயின் அடியார்கள் அன்புடன் விருந்தோம்பி உபசரித்து வாழ்ந்த வாழ்வில் நிறைவுகண்ட நெஞ்சமது. "சமாஜம் ஓர் குடும்பம்" என்ற சுவாமிஜீயின் அடிச்சுவட்டில் தம்மை பயிற்றி வந்தமையால், நன்று செய்தாரேனும், தீதுசெய்தாரேனும் சமாஜ அன்பர் என்ற ஒரே காரணத்துக்காக, நடக்க முடியா நிலையிலும் வண்டி யேறி அன்னார் வாழ்வின் நிகழ்வுகளில், பங்கு கொண்டு வந்த பக்குவமான கடமை நெஞ்சமது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாஜத்திலாயினும், நடேசராலயத்திலாயினும், நடைபெறும் விஷேசங்களெல்லாம் சுவாமிஜீயின் கட்டளையிலும், மேற்பார்வையிலும் நவரெட்ணம் ஆசிரியரின் சாமர்த்தியமான நிர்வாகத்திலுமே நிறைவு பெற்று வந்ததை அன்று தொட்டு வாழ்ந்த அன்பர் நெஞ்சங்கள் நன்றியுடன் நினைவுகூரும். நடேசராலயம் உருவானதுமுதல் திருவெம்பாவை நாட்கள் பத்தும் நவரெட்ணம் ஆசிரியர் தலைமையில் நடைபஜனை சிவயோக சமாஜத்தில் இருந்து புறப்படும். கணீரென்ற குரலில் திருப்பள்ளியெழுச்சி எதிரொலி செய்ய, தன் பிள்ளைகள் மட்டுமே துணையாக நின்றபோதிலும், அவர் என்றும் சளைத்தது கிடையாது.

சிவயோக சமாஜத்திலோ நடேசராலயத்திலோ, நடைபெறும் அன்னதான வைபவங்களனைத்திலும் அலட்டிக் கொள்ளாமல், சுவையுடன் கூடிய சமையலை முடித்து வயிறார உண்டு செல்லும் வரை சளைக்காமல் பணிபுரிந்த விதம் கண்டு மெச்சாத அன்பர்கள் யாருண்டு? இத்தகைய பணிசெய்ய மற்றொரு நவரெட்ண மாஸ்டர் பிறந்துதான் வரவேண்டும். தனது திட்டங்களை, செயல்படுத்த முயல்கையில், யார் தடுத்து ஒரு வார்த்தை சொன்னாலும், அதை நின்று நிதானித்து. பணிந்து நடக்கும் பண்பு இந்த வயதிலும் அவரிடம் காணப்பட்டது அதிசயமே. தன் மனதில் கொடுக்க வேண்டுமென நினைத்தவர்களுக்கு பிறரறியாமல் அள்ளிக் கொடுக்கும் தாராள சிந்தையை இயல்பாகவே பெற்றிருந்தார்.

ஆச்சிரம பணிகளே என்றும் அவர் உயிர்மூச்சாக இருந்து வந்ததை எவராலும் மறுக்க முடியாது.

ஓர் தடவை அவர் இளையமகன், யாரும் எதிர்பாராத வகையில் உயிருக்கு மன்றாடும் நிலையில் வைத்தியசாலையிலனுமதிக்கப்பட்டார். விபரமறிந்து அங்கு சென்றிருந்த எம்மிருவரை வெளியே அழைத்து வந்து, ஆசிரியர் பதற்றமாகப் பேசலானார் இந்தப் பையன் இந்த வேளையில் தானா இப்படி அடாத செயலைச் செய்ய வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் ஆகிவிட்டால், வரவிருக்கும் சமாஜ நிகழ்வுகளை நான் எப்படி முன்னின்று நடத்துவது' சமாஜத்தில் சுவாமியின் சமாதி அஸ்திப் பிரதிஷ்டை தொடர்பான கருமங்கள் நிகழ இருந்த சமயமது. தன் மகனுயிரைவிட சுவாமி ஜீயின் பணியை மேலாக மதித்து வாழும் நெஞ்சம் வேறு யாருக்குத்தான் வரும்?

சுவாமிஜீ சமாதியடைந்த நேரத்தில் இறுதியாத்திரையில் பங்கு கொள்ள மட்டக்களப்பு, கொழும்பு. எனப் பலவிடத்தும், இருந்து வந்து கூடிய அன்பர்கள், நிகழ்ச்சி முடிய வந்து பசியாறி இளைப்பாற, பல்லாற்றாலும் உழைத்த அவர் சேவையை எப்படி மறந்திடலாகும்?

நவரட்ணம் ஆசிரியா இன்று எம்மிடையே இல்லை என்பது உலகாயதமான பேச்சு; அவராத்மா சிவயோக சமாஜத்தினையும் நடேசராலயத்தினையுமே, நீங்காது நிறைந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

அமைதியாய் தன் உலக வாழ்வை, முடித்து விட்ட அவரது வாழ்வில் ஏற்றுக்கொண்ட பாத்திரங்கள் பல

ஆசிரியராய், நல்லதொரு விவசாயியாய் அனாதை ஆச்சிரம நிர்வாகியாய், கடைமுதலாளியாய், சமய தத்துவங்களை ஆய்வு செய்யும் அறிஞராய் அவர் வாழ்க்கை நிறைவு பெற்றிடக் கண்டோம்.


மரணபயம், அறியாமலேயே ஈசனடி சேர்ந்த இந்த நிகழ்வு தெய்வீகமே அன்னார் குடும்பத்தினர்க்கு அமைதி தந்து இறைவன் காத்திடுவான்; ஆசிரியரின் ஆத்ம சாந்திக்காக சற்குருவின் பாதமலர்களை, முழுமனதுடன் அஞ்சலிசெய்கின்றேன்.

ஓம் சற்குரு கெங்காதரானந்தாய நமோநம

திருமதி. சி. பத்மநாதன்
ஆசிரிய ஆலோசகர் (தமிழ் மொழி)
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டர் திரு. சு. நவரத்தினம் அவர்களின் கைவண்ணத்தில் கதிர்காம யாத்திரையின் போது நடைபெற்ற அன்னதானம்.



கதிர்காமத்தில் அங்கப்பிரதட்சணை செய்யும் அடியார்களுக்குப் பின்னால் திரு. சு. நவரத்தினம் அவர்களின் தலைமையில் பஜனை நடைபெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. சு. நவரட்ணம் ஆசிரியர்

## அவர்களைப்பற்றி.....

ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜீயை சற்குருவாய் ஏற்று வழிநடத்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆசிரியர் நவரட்ணம் அவர்கள். சுவாமிஜி வெள்ளுடை தரித்து வாழ்ந்த காலமுதலே அவரது ஆத்மீக அனுபூதியால் ஈர்க்கப்பட்டு, தன் இறுதி மூச்சுவரை, ஆச்சிரமத்தின் தொண்டனாக வாழ்ந்து வந்த பெருமை படைத்தவர்.

அவரது ஆரவாரமற்ற பேச்சும் செயற்பாடுகளும், அன்போடு பழகும் நல்ல பண்பும், சுவாமிஜி அவர்களை முற்றாகக் கவர்ந்திருந்தது என்பது பல சந்தர்ப்பங்களில் நாம் உணர்ந்து கொண்ட ஒன்று.

சுவாமிஜி எப்போது வெளியூர் புறப்படுகிறார் என்றாலும், சாமமெனவும் பாராது விழித்தெழுந்து, உணவு பாகம்பண்ணி, அவரை வீதிவரை அன்புடனும் வழியனுப்புவதும், அவர் திரும்பும் வேளையை அறிந்து, அவர்க்கு வேண்டுவன ஆயத்தம் செய்து வரவை எதிர்பார்த்து நிற்கும் பக்குவமும் பவ்யமும், அவருக்கும் அவர் குடும்பத்தார்க்குமே உரிய கடமைகளாக, சுவாமிஜி பயிற்சி கொடுத்திருந்தார். என்றால், அவரது பெருமையை வேறு வகையில் கூறமுடியாது.

சுவாமிஜியைத் தம் குருவாகத் துதித்த அதே நேரம், தம் குடும்பத்தில் ஒருவராகவே போற்றி வாழ்ந்தவர் ஆசிரியர் என்று கூறுவதில் ஒரு சிறிதும் தவறில்லை. திருகோணமலையை நாடி சுவாமிஜியின் தரிசனத்துக்காக வரும் பக்தர்கள், கூச்சமின்றித் தங்கி, குரு தரிசனம் செய்ய உதவி வந்த புண்ணியப்பேறு பெற்றவர் ஆசிரியர் அவர்கள். மாஸ்ரர் கைபட்ட வெண்சாதமும் சுவை கொண்ட அமுதமாக மாறி வயிற்றை நிரப்பிவிடும் பெருமை பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரட்ணம் ஆசிரியரின் தொண்டுள்ளத்தை நேரடியாக எம்மிடம் எத்தனையோ தடவைகள் சுவாமிஜி பேசி மகிழ்ந்த துண்டு. இயற்கை நிகழ்வான மரணத்தை, உயிர் சந்திப்பதில் வியப்பொன்றுமில்லை. இருப்பவர் நாம், பிரிந்தவர்களின் பெருமைகளைப் பேசிப் புகழ்ந்து நினைவு கூருதலால் அவர் யார் என உலகம் போற்ற வழிபிறப்ப தோடு நாமும் நம் வாழ்வில் நல்லவை செய்யத் தூண்டப் பெறுகிறோம்.

ஆச்சிரமத் தொண்டர்கட்கும் தொண்டனாய் வாழ்ந்த பெரியார் நவரட்ணம் ஆசிரியரின், உயர்ந்த கல்வி பெற்று நன்னிலையில் வாழும் பிள்ளைச் செல்வங்களே, அவர் தக்கார், தகை சான்றவர் என்பதற்குச் சாட்சி பகரும். சிவயோக சமாஜம் வாழும் காலம் வரை அவர் சேவை அவரை நினைவுறுத்தும்.

சுவாமிஜியின் அஸ்தி ஸ்தாபிதம், லிங்கப் பிரதிஷ்டையிலெல்லாம் அவர் காட்டிய தீவிரம், அவரது குரு பணியின் உறுதிப்பாட்டினை வெளிப்படுத்திய நிகழ்வுகளாகும். அவரது ஆத்மா சாந்தியடையவும், குடும்பத்தினர். ஆறுதல் பெறவும் குருஜியின் பாதாரவிந்தங்களைப் பணிகின்றோம்.

சிவயோக சமாஜக் கிளை,<br>
25-12-94. கொம்மாதுறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர்களின்

# கண்ணீர் அஞ்சலி

"சிவஞானச் செல்வர்" திரு. செல்லப்பா சிவபாதசுந்தரம்
மதிப்பார்ந்த பொதுச்செயலாளர்
தி/மா. இ. இ. பேரவை.

தேவாரப் பாடல்பெற்ற தெய்வத்திருநகரான திருக்கோணமலையின் முதுபெரும் இந்துசமயத் தொண்டரான திரு. சு. நவரத்தினம் ஓய்வுபெற்ற அதிபர் அவர்கள் அமரராகி விட்டமை எமக்கு மிகுந்த மனக்கவலையை அளிக்கின்றது.

யாழ்ப்பாணம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இப்பெரியார் எமது புண்ணிய பூமியில் நீண்ட காலம் வாழ்ந்து தமிழ்ப்பணியும், சைவப்பணியும் ஆற்றியமை நாம் செய்த தவப்பயன் என்றே கருதலாம்.

திருவெம்பாவைக் காலத்தின் போது பெரியார் நவரத்தினம் அவர்கள் அதிகாலையிலேயே சிவயோக சமாஜ மாணவர்களுடன் பிரதான வீதியிலுள்ள சிவயோகசமாஜத்திலிருந்து ஐந்து மைல்களுக்கப்பால் உள்ள சிவயோகபுரம் நடேசப்பெருமான் ஆலயத்திற்கு நடைபஜனையில் சென்றமை இன்றும் என் மனக்கண் முன்னே தோன்றுகின்றது, இத்தகைய பல்வேறுபட்ட சமயப் பணிகளை பல இடங்களில் அன்னார் ஆற்றியிருக்கின்றனர். சமயப்பணியுடன் மட்டுமல்லாது சமூகப்பணிகள், பண்ணைமுயற்சிகள் விவசாயத்திட்டங்களைச் செயற்படுத்தியமை, கிராமங்களில் கல்வி முயற்சிகளுக்கு வித்திட்டமை என இவரின் பணிகளைப் பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சாமையும், விடாமுயற்சியும், கடின உழைப்பும் கொண்ட அன்னார் மிக எளிமையான வாழ்க்கை நடத்தியவர், குடியேற்றத் திட்டங்களில் எல்லாம் எமது தமிழ் மக்களைக் குடியேற்றுவதிலும் அவர்களுக்குத் தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் ஆர்வத்துடன் செயற்பட்டவர் என்றால் அது மிகையாகாது.

சிவயோகசமாஜ ஸ்தாபகரான சமாதியடைந்த எமது மதிப்பிற்குரிய கெங்காதரானந்தாஜீயின் முக்கிய பக்தரான இவர் சிவயோகசமாஜத்தின் அச்சாணியாக விளங்கியவர் ஆவார்.


அன்னாரின் மறைவு திருக்கோணமலை மாவட்டத்துக்கு குறிப்பாக சிவயோக சமாஜத்திற்கும் ஓர் பேரிழப்பாகும். அன்னாரை இழந்து தவிக்கும் அன்பு மனைவிக்கும் அருமைப்பிள்ளைகளுக்கும், மற்றும் உறவினர்களுக்கும், சிவயோகசமாஜ அன்பர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த அனுதாபத்தைப் பணிவுடன் தெரியத்தருகின்றோம்.

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையக் கோணமலைப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிதர் அ. ஆறுமுகம் அவர்களின் அருளமுத வள்ளம் என்னும் நூல் வெளியீட்டில் திரு. நவரத்தினம் அவர்கள் ஞானசிரோன்மணி பண்டிதர் இ. வடிவேல் அவர்களிடம் இருந்து முதல் பிரதியை பெறுகின்றார்.



ஸ்ரீ சண்முக மாணவர் இல்லத்தில் திரு. சு. நவரத்தினம் அவர்களும் காந்தி ஆசிரியர் பொ. கந்தையா அவர்களும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மாவின் உடலுறவு

"நேற்றிருந்தார் இன்றில்லை" என்ற பெருமை இந்த உலகத்துக்கு உண்டு, என்று கூறிய வள்ளுவர் வாக்கை நிதர்சனப்படுத்தியும், "இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பர் என்று எண்ணவோ திடமில்லையே" என்று தாயுமான சுவாமிகளின் அருள்வாக்கை அர்த்தமுள்ள தாக்கியும் மறைந்தவர்களில் ஒருவர் அமரர் சு. நவரத்தினம் அவர்கள்.

"குடம்பை தனித்தொழியப் புள் பறப்பது" போன்ற நிகழ்வுதான் ஆன்மாவின் உடலுறவு. கூட்டை அமைத்து ஒட்டி உறவாடிய பறவை தன்னிறைவு பெற்றபின் கூட்டை விட்டுப் பறந்து விடுகின்றது. அமரர் நவரத்தினம் அவர்களும் இல்லற தர்மக் கூட்டை அமைத்து, நல்லறங் காத்து நிறைவு பெற்றும்; சிவயோக சமாஜக் கூட்டை அமைத்து அதில் குடியிருந்த பிரம்ம ஞானி ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா அவர்களின் உபதேசமும் பெற்றும் குருவின் அடிச்சுவட்டைத் தொடர்ந்து சென்று அமரராகி விட்டார்.

அமரத்துவம் எல்லாருக்கும் கிடைக்குமா? என்னும் ஐயம் எம்மில் பலருக்கும் உண்டு. அமரர் உலகு ஏற்றுக் கொள்ளும் தகுதிகளை ஆன்மாவானது உடலுறவுக் கால கட்டத்திற்குள் பெற்றவர்கள் வானுறையும் வாய்ப்பைப் பெற்றவர்களே. இதனையே "வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்" என திருவள்ளுவர் தெளிவு படுத்தியுள்ளார்.

தென்புலத்தார் - தெய்வம் - விருந்து - ஒக்கல் - தான் என்னும் ஐவருக்கும் இல்லற தர்மங்களை குறைவின்றி நிறைவு செய்தவர்களை வானுலகு வா என்று அழைத்துக் கொண்டிருக்கிறது.

தர்மங்களில் தலை சிறந்தது அன்னதானம். இந்தத் தானத்தை ஏற்பவர்கள் போதும், போதும், என்று கூறித் திருப்தியடைவார்கள் இடுபவர்களை வாழ்த்துவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோராதலால்'' அவர்களுடைய வாழ்த்து வான்வழிச் செல்ல வழிகாட்டும் ஏணி அதன் வழியே சென்று வானத்தவராவதற்கு வாய்ப்புண்டு. ''செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருந்த'' நவரத்தினம் ஐயா அவர்கள் வானவரின் நல்விருந்தாவது உறுதி.

ஒக்கல் என்பது சுற்றம். சுற்றம் தழுவிச் சுகம் கண்டவர் திரு. நவரத்தினம் அவர்கள், ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' எனத் திருமூலர் கூறியதை தமது குருநாதரின் உபதேசத்தின் மூலம் பெற்று, தன்னைப் பக்குவப் படுத்தி வாழ்ந்தவர் ''தன்னைத்தான் காக்கில் சினங் காக்க'' என்பதை வாழ் நாள் பூராவும் கடைப்பிடித்து வாழ்ந்தவர். இத்தகைய தகுதிகள் அவரை அமரராக்கியது. அமைதியாக ஏற்படும். திடீர் மரணம் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை அமரத்துவமடைவதற்கு இத்தகைய மரணம் ஒரு கட்டியம்.

சிவயோக சமாஜத்தைச் சேரும்போது புளியங்காயாக இருந்த ஆன்மா சுவாமிஜீயைச் சார்ந்து புளியம்பழமாகி ஆன்மீக உடலுறவை வாழ்ந்து காட்டியவர். காயாக இருக்கும் போது புளியங்காயின் உட்பகுதி ஓட்டோடு ஒட்டிக் கொண்டிருக்கும். நன்கு பழுத்த பழத்தின் உட்பகுதி ஓட்டை விட்டுப் பிரிந்திருக்கும். அதே போன்று சிவயோகத் தவமுனிவரின் உபதேசங்களால் தெளிவடைந்த நவரத்தினம் அவர்களின் ஆன்மா ''வினைப் போகமே ஒரு தேகங் கண்டாய் வினை ஒழிந்தால், தினைப்போதளவும் தரியாது காண்'' என்பதனை நமக்கு உணர்த்தி அமரத்துவம் எய்திவிட்டார். அன்பர் நவரத்தினம் அவர்கள் உடலால் வாழாது உள்ளத்தால் வாழ்ந்து உத்தமராகி மறைந்து விட்டார். அன்னாரை இழந்து வருந்தும் மனைவி, மக்கள், பேரப் பிள்ளைகள், சுற்றத்தார், நண்பர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல கோணேசப்பெருமான் அமைதியை அருள்வாராக.

ஓம் சாந்தி

15, வித்தியாலயம் ஒழுங்கை
திருக்கோணமலை.
24-12-94

ஞானசிரோன்மணி
பண்டிதர் இ. வடிவேல்
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினம் மாஸ்ரர் அவர்களின்

# தெய்வீக இயல்பு

ஒரு மனிதன் உண்மையில் மூவராக இருக்கின்றார் என்கின்றார் பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா.

ஒன்று ஒருவர் தன்னைப்பற்றி தானே நினைத்துக் கொள்வது.

இரண்டாவது அவரைப்பற்றி மற்றவர்கள் நினைத்துக் கொள்வது.

மூன்றாவது உண்மையில் அவர் யார் என்பது

இந்த மூன்றாவது இயல்பு ஒருவர் அவருக்கேயுரிய இயல்பான தெய்வீகத்தை அவர் எவ்வளவு தூரம் வெளிப்படுத்துகின்றார். என்பதனால் நிர்ணயிக்கப்படுகின்றது.

உண்மையில் எமது நவரட்ணம் ஐயா அவர்கள் தமது நீண்டகால, ஆழமான ஆன்மீக ஈடுபாட்டின் காரணமாக தமது தெய்வீகத்தை சற்று அதிகமாகவே வெளிப்படுத்தினார் என்றால் அது மிகையாகாது. அவரது அன்பான இயல்பும் சேவைமனப்பான்மையும் இதற்கு தூண்டுகோலாக அமைந்திருந்தது. எனலாம்.

ஐயா அவர்களோடு நெருங்கிப் பழகும் அரிய வாய்ப்பு காந்தி ஐயாவின் பாராட்டு விழா சம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது, எனக்குப் பெரிதும் கிட்டியது எனலாம். அவரின்

அன்பான பேச்சு<br>
கருணையான இதயம்<br>
தூய்மையான உள்ளம்<br>
ஆதரவான வார்த்தைகள்<br>
அமைதியான சுபாவம் என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை ஈர்த்தெடுத்தன. அத்துடன் தன் கருத்துக்களை, துல்லியமாக வெளிப்படுத்தி எம்மையெல்லாம், இலகுவாக ஏற்றுக்கொள்ள வைக்கும் ஆசிரியருக்கேயுரிய இயல்பான, "தாயன்பு" அவரிடம் எல்லா நேரங்களிலும் நிரம்பியே இருந்தன.

அவர் எதைச் சொன்னாலும் நாம் மறுக்காமல் ஏற்றுக்கொள்வோம். அத்தகையதொரு "ஆளுமை" அவரிடம் முழுமையாக பூரணத்துவம் பெற்றிருந்தது. இத்தகையதொரு புனித ஆத்மா எமது சண்முகா இல்லம் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் தன் சேவைப்பணியை வழங்கி, எல்லோருக்கும் ஒரு வழிகாட்டியாக இருந்தார் என அறியும் போது அவர்மேல் இருந்த மதிப்பும், மரியாதையும் பன்மடங்கு மேலும் மேலும் அதிகரிக்கின்றது.

இந்த உலகில் எல்லோரும் நலமாக வாழவேண்டும். எல்லா நன்மைகளும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என உளமார விரும்பியவர் நவரட்ணம் ஐயா அவர்கள். அவரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி.

நா. புவனேந்திரன்
மேலதிக அரசாங்க அதிபர்
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஐயா

ஓர் இக்கட்டான காலகட்டத்தில், மனவேதனையோடு கோணேசப் பெருமானின் தாளிணைகளைத் தஞ்சமடைந்த என்னை, கர்மயோகி காந்தி ஐயா அவர்கள், என் உயிருக்கு உத்தரவாதமளித்து, திருவாளர் சு. நவரட்ணம் ஐயா அவர்கள் இல்லத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பித்தார்.

சுயநலன்களுக்காகவும் தமது உயர்வுக்காகவும் வாழும் இந்த உலகத்தில், நவரட்ணம் ஐயா அவர்கள் இத்தகைய வாய்ப்புக்களைத் தாமே ஏற்று அதில் மன நிறைவடைவது சிந்தனைக்குரியதாகும்.

ஒரு தந்தையென்ற ஸ்தானத்தில் அவரும், 'ஐயா' என்ற பாசத்தோடு அழைக்கும் அன்பு மகனாக நானும், அவர்களுடைய குடும்பத்தோடு ஒட்டி வாழ்ந்த நிகழ்வுகள் மறக்க முடியாதது. ஐயா, அக்கா, பிள்ளைகளின் அன்பான உபசரணையும், குடும்பத்தில் ஒருவனான கணிப்பும், எனது எதிர்கால தேவைகளை அக்கறையோடு நோக்குதலும், எனது சுபீட்சமான வாழ்வுக்குத் துளிர் விட்டது போன்று. புத்துணர்வைக் கொடுத்தது என்பதை நன்றியுடன் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன்.

ஒரு சமயம் நான் கடுமையான நோயுற்ற வேளையில் தான் உற்ற கடமையாகப் பொறுப்பேற்று நோய் தீர்த்த நிகழ்வு என் கண் முன்னே நிழலாடுகிறது.

நாயன்மார்களுடைய சரித்திரங்களில் பங்கு கொண்ட அடியவர்களுடைய சேவைதான், ஐயா அவர்களது இல்லத்திலும் நிகழ்ந்தது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. அடைக்கலம் என்று ஐயாவை நாடி வருபவர்களுக்கெல்லாம் இடமளித்தும், உணவுவசதிகள் அளித்தும், கல்விகற்க பணவசதி அளித்தும், இன்னும் பல தொண்டுகளும் அவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லத்தில் நடைபெற்றது. அந்நேரங்களில் தமது உள்ளக் கமலத்தை விசாலமாகத் திறந்து மகிழ்வோடு எதிர்நோக்கிக் காத்திருக்கும் அபூர்வ பிறவிதான் ஐயா அவர்களாகும்.

இவர்களுடன் அந்நியோன்னியமாக இருக்க வாய்ப்புக் கிடைத்த அதிஷ்டத்தினால் சிவயோக சமாஜ குருமணியுடனும் நெருங்கிப் பழக சந்தர்ப்பம் ஏற்பட்டது.

ஐயா அவர்களது இழப்பு என்னை அதிர்ச்சிக்கும் துயரத்துக்கும் உள்ளாக்கியது. இன்று அவர் எம் மத்தியில் இல்லாவிடினும் அவர் விட்டுச் சென்ற அன்பு, பாசம், நன்மொழிகள் எம்மிடையே என்றும் நிலைத்து நிற்கும். ஐயா அவர்களது பிரிவால் சொல்லொணாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவர் குடும்பத்தவரின் துன்பம் தீர, அவர் செய்த நற்செயல்களே துணை நின்று வழி நடத்தும் என்பது எனது திடமான நம்பிக்கை.

ஐயா அவர்களின் குடும்பத்தவரோடு இருந்து வாழ்ந்த இனிமையான, அன்பான, அமைதியான வாழ்வின் நினைவலைகளை நினைவு கூர்ந்து, இச்செய்தியூடாக என் ஆழ்ந்த நன்றிக் கடனை ஐயாவின் ஆத்ம சாந்திக்கு அர்ப்பணிக்கிறேன்.

பாரின் — ஜெகநாதன்.
26-12-94.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை தந்த ஞானி

## திரு. நவரத்தினம்

மூவேந்தர்கள் என்று படித்ததுண்டு. மும்மூர்த்திகள் என்று உணர்ந்ததுண்டு. முக்கனிகள் என்று சுவைத்ததுண்டு ஆனால் இப்புண்ணிய பூமியில் முஞ்ஞானிகள் வாழ்வதை யிட்டு பெரும் மகிழ்ச்சி அடைந்தேன்.

முன்னவர் காந்திய செம்மல் திரு. பொ. கந்தையா அவர்கள் மற்றையவர் ஞானசிரோன்மணி, சைவப் புலவர் பண்டிதர் இ. வடிவேலு அவர்கள். பின்னவர் அறிவொளி கர்மவீரர், திரு. நவரத்தினம் அவர்கள் ஆம் இம் மூவரை யும் அறிந்து, உணர்ந்து, சுவைத்த பின்னரே இப்புண்ணிய பூமியில் உதித்த முஞ்ஞானிகளாகக் கண்டேன்.

அமரர் திரு. நவரத்தினம் ஐயா அவர்களை எனது வாலிப பராயத்திலிருந்து சிறப்பாக அறிந்து, உணர்ந்து வைத்துள்ளேன். ஆனால், அவருக்கு என்னைத் தெரிந்ததோ? அறியேன் ஆதரவற்ற சிறுவர்கள் இல்லத் தலைவனாக இருந்து அளப்பரிய சேவையை செய்தமைக்காக அப்பெரி யாரை பொன்னாடை போர்த்தி கௌரவித்த விழாவில் சந்தித்தேன். எனது வாலிபபராயத்தில் விவசாயத்துறையில் ஈடுபட்டிருந்த வேளை அமரர் ஐயா அவர்களும் அத்துறை யில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டிருந்தார் பன்மதவாச்சி குளத்திற்குத் தெற்குப் பக்கமாக சிவயோக சமாஜசுவாமி அவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த வேளை, மேற்குப் பக்கமாக அமரர் நவரத்தினம் ஐயா அவர்களும், வடக்குப் புறமாக நானும் பெரிய அளவில் விவசாயத்தை மேற் கொண்டிருந்தோம். தினமும், மாலை 8.30, 9.00 மணி யளவில் மூவரும் ஒரே பஸ்ஸில் தான் திருமலை திரும்பு வது வழக்கமாக இருந்தது. அப்போதெல்லாம் ஓர் வாலி பனைப் போல செயல் திறனும், அயரா முயற்சியும், அவரது காருண்ய உள்ளமும் என்னை மிகவும் கவர்ந்தன. "ஒரு பயிர் ஒரு தேவதைக்கு ஒப்பானது" என்பது இறைவாக்கு, அத்துறையில் அவர் செய்த சேவை மகத்தானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம், உண்மை தான். மனிதன் நல்ல காற்றை சுவாசித்து நச்சுக் காற்றை வெளிவிடுகின்றான். ஆனால் மரங்களோ! நச்சுக் காற்றை எடுத்துக் கொண்டு நல்ல காற்றை மனிதனுக்காக தருகின்றன. மனிதனோ! இறைவனால் தரப்பட்ட அமிழ்தம் போன்ற நீரை குடித்து, எதற்கும் பிரயோசனம் இல்லாத கழிவை வெளியேற்றுகின்றான். ஆனால் மரங்களோ நீரை உறிஞ்சி எடுத்து பத்தில் ஒரு பங்கை தனது உணவை தயாரிப்பதற்காக பயன்படுத்திக் கொண்டு. மிகுதி ஒன்பது பங்கையும் மனிதனின் நன்மை கருதி மழைக்காக மேலேத்தி விடுகிறது. அது மட்டுமா? சிறந்த, தெரிந்த காய், கனிகளை உண்டு விட்டு எதற்கும் பிரயோசனம் அற்ற கழிவை வெளியேற்றுகிறான் மனிதன். ஆனால் மரங்களோ, கழிவை உண்டு அருமையான, காய் கனிகளை மனிதனுக்குத் தருகின்றது. ஆம் பயிர்கள் தேவதைகள் தான் அப்படியான பயிர்களுக்கும் உயிர் கொடுத்த உத்தமர் தான் அமரர் பெரியார் நவரத்தினம் ஐயா அவர்கள்.

அறிவு சார்பாக மறைந்த நீத்தாரை நோக்கிய போது, பெரும் ஞானியாகக் கண்டேன். திருக்குறளை நவீன யுகத்திற்கு ஏற்றவாறு ஆய்வு செய்வது என்பது பஞ்சாமிர்தத்தை உண்பது போன்ற நிலைபாட்டை கொண்டுள்ளவன் யான். இத்துறையில் நவரத்தினம் ஐயா அவர்கள் எனக்கு தந்த ஆய்வுகள் பல அதில் ஒன்றை சொல்வதில் பெருமை அடைகின்றேன்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

இதில் "ஈதல் இசைபட வாழ்தல்" என்பதை மறைந்த ஞானி "வறியார்க்கு கொடுத்து, சமுதாயத்துடன் இசைந்து வாழ வேண்டும், என்று கூறிய விளக்கம் என்னை மிகவும் கவர்ந்தது. ஆம், உண்மைதான். அவருடைய சிஷ்யன் என்று கூறுவதில் பெரும் மகிழ்வு காண்கிறேன். இம் மண்ணின் வருங்கால சந்ததியினருக்கு மனித விழுமியங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறள் மூலம் அவர்களின் பிஞ்சு உள்ளத்திலே பதிப்பதற்கு அவர் ஆற்றிய சேவையை, இம் மண்ணின் மைந்தர்கள் என்றும் மறக்க மாட்டார்கள். அமரர் நவரத்தினம் ஐயா அவர்கள் திருக்குறள் போட்டிக்கு நீதிபதியாக கடமையாற்ற வேண்டும். என நான் கேட்ட. போதெல்லாம், எவ் வேளையிலும் எக்காரணம் கொண்டும் மறுக்காது ஆரோக்கியமற்ற நிலையிலிருந்த பொழுதும் கைத்தாங்கலாக வந்திருந்து பல மணி நேரமாக இளம் உள்ளங்களில் குறள் விழுமியங்களை பதித்தமையை நினைக்கும் பொழுது, எப்படித்தான் இப் பெரியாருக்கு நன்றி செலுத்தப் போகின்றேனோ என ஏங்கித்தவித்தது உண்டு.

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

என்ற அமுத வாக்கை உணர்ந்து சமாதானப் பட்டுக் கொள்வேன். அந்த ஞானிக்கு, எனது அறிவுக்கும்; ஆற்றலுக்கும் எட்டிய தூரத்தில் ஒத்து உதவ காத்திருந்தேன். ஆனால் இறைவனுக்கோ அவரது தேவை அவசியப் பட்டு விட்டது போலும், அன்னார் விட்டுச் சென்ற கொடிக்கும், விதைகளுக்கும் என்றும் சேவையாற்ற காத்திருக்கின்றேன்.

மனிதப் பிறப்பு மட்டும் ஏழு தடவை என்பது திருக்குறளிலிருந்து கண்ட விளக்கம். அமரத்துவம் எய்திய நவரத்தினம் ஐயா அவர்கள் வேறொரு உத்தமமான உடலில் சங்கமம் ஆகிவிட்டார். அவரது மறு தோற்றம் சிறந்த இடத்தில் அமைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

கா. விநாயகசோதி,
அதிபர் - குறளமுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயா! என்னை மன்னித்துவிடுங்கள்

ஐயா! ஐயா!! ஐயா!!!

ஆறாத்துயரில் எமை ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டீரே ஐயா! இனி யாரையையா ஐயா என அழைப்போம் ஐயா

ஐயா உமை நினைத்தால் சிவயோக சமாஜமும் அதன் நிகழ்வுகளும் தான் நினைவில் நிழலாடுகின்றன

ஒன்றா? இரண்டா?

ஆண்டுதோறும் அடுக்கடுக்கான முத்தமிழ் விழாக்களையெல்லாம் சமாஜத்தில் நாம் கொண்டாடினோம். இன்று அதை யார் அறிவார்?

சுவாமிஜீயின் ஆளுமையில் நீர் சமாஜத்திற்கு செய்த சேவையை நாம் மறக்கத்தான் முடியுமா?

ஐயா நீர் பண்டிதர் வடிவேல் மாஸ்டருடன் சென்று சுவாமிஜீயை ஓலைக்குடிலில் கண்ட அந்த நாள் முதல் சுவாமிஜீ சமாதியாகு நாள்வரை, சுவாமிஜீ உம்மோடு ஒரு உற்ற நண்பனாய், நல் ஆசானாய் பணிவுள்ள சேவகனாய், பாசமுள்ள குழந்தையாய், பணிபுரியும் தொண்டனாய், அரவணைக்கும் அன்னையாய், கண்டித்து வழிநடத்தும் தந்தையாய், ஆலோசனை கூறும் நல், மந்திரியாய், நோய் தீர்க்கும் மருத்துவனாய், இருந்து அன்னியோன்யமாய் ஆத்மார்த்த ரீதியாகப்பழகிய நாட்களை நாம் மறப்போமா.

ஐயா! சுவாமிஜீ அவர்கள் உங்களோடு பேசும்போதெல்லாம், சமாஜ வளர்ச்சி சமாஜப் பணி, அவற்றின் செயல்முறை ஒழுங்கு என்பவற்றில் தாம் கொண்ட எண்ணங்களையும் செயற்பாடுகளையும் தன் திரிகரணங்களினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமக்கு ஊட்டி உம்மையும் உம் உணர்வுகளையும் உம் செயற்பாடுகளையும் சமாஜப்பணிக்காகத் தயார் செய்தாரேயன்றி உலக விவகாரங்களையும் உழுத்துப்போன சம்பிரதாயங்களையும் பேசிக் காலத்தைப் போக்கவில்லையே ஐயா.

ஐயா! சுவாமிஜீயின் அகத்தையும் புறத்தையும் உணர்த்த ஒரு சிலரில் நீர் முதன்மை வாய்ந்தவர் என்பதை நான் நன்கு அறிவேனையா.

ஐயா! உம் நோய் தீரவேண்டி சுவாமிஜீயை அடைந்த நீர், பல நோய் தீர்க்கும் முறைகளையும் சுவாமிஜியிடமிருந்துகற்றீரே ஐயா.

ஐயா! சிவயோக சமாஜத்தின் அடிக்கல் நாட்டலில் இருந்து சுவாமிஜியின் அஸ்தி பிரதிஸ்டை செய்யும் நாள் வரையும் சமாஜ வளர்ச்சியின் ஒவ்வொரு அணுவிலும் உம் செயற்பாடுகளும் பங்களிப்புக்களும் நிறைந்து நிற்பதை உம்மோடு கூட இருந்து அனுபவித்த நாம் எப்படி ஐயா மறப்போம்.

ஐயா, உம் ஆசா பாச உணர்வுகளின் தேவைகளுக்கு சுவாமிஜீயின் அருள் கிட்டாதபோதும், சுவாமிஜீயின் மேல் உம் குடும்பம் கொண்ட தூய்மையான பக்தியின் மகத்துவத்தை உணராத மண்டூகங்களின் பரிகசிப்பையும், பழிச்சொற்களையும் கண்டும் கேட்டும் அஞ்சாமலும், மனம் துஞ்சாமலும் சுவாமிஜியை விட்டுப் பிரியாமலும், அவர் பாதமே தஞ்சமென, அவருக்கே தொண்டு செய்த நாட்களை நாம் மறப்போமா ஐயா.

சுவாமிஜீயின் வழிநடத்தலிலும், தங்களின் அரவணைப்பிலும் சமாஜம் மனித மேம்பாட்டிற்காக உழைத்த நாட்களைத்தான் நாம் மறப்போமா?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆச்சிரமத்தோடு தம்மை முழுமையாக அற்பணித்த ஒவ்வொருவரும் சமாஜ அங்கத்தவரே'' என்ற சுவாமிஜியின் கூற்றை சிரம்மேற் தாங்கி அதற்கு அமைய, சமாஜத்தின் ஸ்தாபகர் போன்ற நிலையில் இருந்தபோதும், சிறிதுகூட அந்தச் சிந்தனையின்றி, ஒரு சிறு குழந்தை போன்று, ஒரு செயலை - நிகழ்ச்சியை ஆற்றும் போது செயற்படுத்தும்போது, சமாஜ அன்பர்கள் அனைவரையும் ஒருங்கணைத்து அவர்களது ஆலோசனைகளையும் பெற்று, நான் என்ற செருக்கற்று ''நாம்'' என்ற பரந்துபட்ட விரிந்த மனத்தோடு செயல்படுவீரே ஐயா, இதை எப்படி நாம் மறப்போமையா?.

ஆண்டு தோறும் சமாஜத்தில் கதிர்காம அடியார்களுக்குப் பசியாற உணவு சமைத்துப் பரிமாறிப் பணிவிடை செய்த அந்த நாட்களை நாம் மறப்போமா ஐயா.

"கலியுகத்தில் இறைவனை அடைய மிக இலகுவான வழி நாம பஜனையே-கூட்டு வழிபாடே கேட்போர் உள்ளம் உருக, அவர்கள் மனம் பஜனையில் இசைபட - லயிக்க தாள லயத்தோடு சுருதி சுத்தமாகவும் இசைக்கப்பட வேண்டும்'' என்று சுவாமிஜீ அவர்கள் ஒரு முறைக்குப் பல முறை பல பல முறை கூறியதற்கு அமைய இசை வல்லுனர்கள் மனமும் இசைபட, மனம் உருக, இசை அறிவே இல்லாத நாங்கள் கிழமை தவறாமல் இசைத்த இசையை இனி நாம் எப்போ கேட்போம் அந்த இசையில் லயித்த லயிப்பை இனி எப்போ லயிப்போம்.

வடகரை வீதியில் சுவாமிஜீயின் ஓலைக்குடிலில் ஆரம்பித்த பஜனையின்போதிருந்து சிவயோக சமாஜத்திற்கு பஜனை மாற்றப்பட்ட போதும் இதுநாள் வரை தொடர்ந்து பாடிய ஒரே ஒரு பக்தன் தாங்கள் தான் என்பதை நான் அறிய மாட்டேனா?.

நடேசர் ஆலய நிறுவலின் பின் மார்கழி மாத திருவெம்பாவை நாட்களில் சிவயோக சமாஜத்தில் இருந்து அதிகாலை 3.30 மணிக்கு சுவாமிஜியோடு நடேசர்கோயிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி நடைபஜனை செல்வோமே. அந்த பஜனைக்குத் தலைவனாய், உம் தடித்த சரீரத்தை அனாயாசமாகச் சுமந்தபடி அமைதியான அந்த விடிகாலைப் பொழுதிலே உமது வெங்கல சாரீரத்தால் கணீரென்று ஒலிக்க கேட்போர் மனம் உருக நடப்போர் சோர்வகல.

''ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியை நாம் பாடக் கேட்டே'' என்று பாடிக்கொண்டு எம்மத்தியில் நீர் நடக்க, நாங்கள் எல்லோரும் சேர்ந்து பாடிக் கொண்டே செல்லும் அந்த நாட்கள் மீண்டும் வருமா ஐயா?

ஏகாதசி நாட்களில் சுவாமிஜியின் கண்காணிப்பில் சற்சங்கங்களில் தவறாது கலந்து, கொள்வீர்களே.

ஐயா சமாஜத்தின் ஒவ்வொரு நிகழ்வுகளையும் உம்மை வைத்தே நடாத்தினார். சுவாமிஜியின் கண்காணிப்பில் நீர் நடாத்திய விழாக்கள் எண்ணிலடங்கா. சமாஜத்தின் விழாக்களின் மகத்துவத்தையும் ஒழுங்குகளையும் நன்கு அறிந்தவர் நீர் அன்றோ. நீர் சென்ற பின் இனி யார் இருக்கின்றார்?

ஐயா! சுவாமிஜியின் தூரப் பார்வைச் செயல்களை நன்கறிந்த நீர் சுவாமிஜீயோடு தோளோடு தோள் கொடுத்து காடுவெட்டிக் களனி அமைத்தீரே சுவாமிமேல் நீர் கொண்ட பற்றையும் பக்தியையும் அச்செயல் மூலம் காட்டத்வறவில்லையே ஐயா.

சுவாமிஜீ எழுதிய பாடலில் பிழை கண்டு, கோரக்கர் என்ற ஒரு முனிவர் இல்லை என்று பிழை கண்டு உமைச் சுற்றிவளைத்து மற்றையோர் நகைக்கயிலே, சுவாமிஜீயின் வார்த்தையில் - எழுத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு அவர்களை எதிர்த்து வாதாடிய உமது குருபக்தியை நாம் மறப்போமா ஐயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜீ அவர்களின் சமாதிக்குப்பின், சுவாமிஜீயின் விருப்பப்படி அவரது அஸ்திக்குமேல் லிங்கம் பிரதிஸ்டை செய்ய நீங்கள் பட்ட அவஸ்தைகளைத்தான் மறப்போமா ஐயா.

லிங்கப் பிரதிஸ்டைக்குப் பின் ஒரு மண்டலகால அபிடேகம் செய்ய வேண்டும் என்று, நீர் கூறியபோது, அத்தனை நாட்களுக்குயார் இருக்கின்றார்கள் 17 நாட்கள் மட்டும் செய்தால் போதும் என்று ஒரு சிலர் கூற, சுவாமிஜீ வழி சமைப்பார் எனக் கூறி, ஒரு மண்டலகாலம் அபிடேகம் செய்தவராயிற்றே ஐயா.

ஐயா நீர் சமாஜத்திற்குச் செய்த சேவைகளைச் சொல்லால் வடிக்க முடியாதையா.

சமாஜத்தின் அண்மைக் காலத்து நிகழ்வுகளையிட்டு நீர் பட்ட மனவேதனையை வடிக்க எழுத்துக்கள் போதா.

சிவராத்திரி தினங்களில் ஊர் உலகத்தில் உள்ள சிவன் ஆலயங்களில் எல்லாம் மணி ஒலியுடன் கூடிய மந்திர ஒலியுடன் அபிஷேகங்களும் 3காலப் பூசைகளும் நடைபெறும் போது, சிவயோக சமாஜ லிங்கம் மட்டும் பூசை புனஸ்கார மின்றி அடைபட்டுச் சிறைபட்டு இருப்பது கண்டு மனம் நொந்து உளம் வெந்து கண்ணீர் விட்டீரே ஐயா.

வரும் சிவராத்திரியில் இது போன்று நடக்கும் என எண்ணி அது காண மனம் பொறாமல் போனீரா ஐயா

ஆண்டு தோறும் வைகுண்ட ஏகதிசி கண்விழிப்பு முடிந்து மறுநாள் காலை உமது கைவண்ணத்தால் ஆன கறி அமுதல்லவா எமை குளிரவைக்கும் அந்தக் கறி அமுது இனி எந்த ஏகாதிசியில் கிடைக்கும்.

'ஹரி நாராயணா' என்று நீர் பாடினால் அனைவர் உள்ளமும் ஒன்றுபட்டு உணர்வுக்கு அடங்கி அந்த மண்டபமே ஏகோபித்த சுருதி லயத்தோடு ஒலி எழுப்புமே ஹரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயணா என்று பாடினால் அந்த ஒலியில் உம் உருவம் தான் இன்று காண்கின்றோமையா.

ஐயா! நீர் ஒவ்வொரு பஜனை குருபூசைக்கு வரத் தவறியதே இல்லை. அப்படி இருக்க உமது மறைவுக்கு முன் நிகழ்ந்த குருபூசைதினத்தன்று சமாஜத்தில் உமைக் காணாமல் மனம் சஞ்சலப்பட்டேன் வீடு தேடி ஓடி வந்து வினவினேன் உமது பதில் எனைத் திகைக்கவைத்தது.

திதி முடிந்த தினத்தில் நிகழும் குருபூசைக்கு சுவாமிஜீயும் வாரார். நானும் வாரேன் என்றீரே. இது போன்ற நிகழ்வுகள் கண்டு தாங்காது உம் நெஞ்சு வெடித்ததோ ஐயா... ஐயா... ஐயா...

ஒரு சிலமாதங்களுக்கு முன் இங்கு வந்த சுவாமிஜீ பால் மிகுந்த பக்தியும் விசுவாசமும் கொண்டவரும், சமாஜ ஸ்தாபித காலத்தில் உங்களோடு இணைந்து செயலாற்றியவரும், சமாஜ நிகழ்வுகளில் பெருவிழாக்களில் தம்மையும் இணைத்து ஒன்று கலந்து செயல்பட்ட சமாஜ அன்பரும். ஆன சிவதாசன் (செயலாளர் தொழில்துறை அமைச்சு) அவர்கள் சமாஜ பஜனையின் முன் பேசுகையில் சுவாமிஜீயின் மேற்பார்வையில் சமாஜத்தில் சகல விழாக்களைப் பற்றியும், சிவன்ராத்திரி, நவராத்திரி, ஏகாதிசி போன்ற நாட்களில் சிவயோக சமாஜம் எப்படி பொலிவுற்று சமாஜ அன்பர்கள் ஏற்றத் தாழ்வின்றி ஒரு குடும்பமாக இணைந்து செயல்பட்டார்களென்றும், அதுபோன்று ஒரு ஆத்மார்த்த உணர்வு பூர்வமான நிலை மீண்டும் வர வேண்டும் என்பதே எனது ஆசை என்று கூறியபோது கண்மூடி மௌனத்திலிருந்த உங்கள் கடைக்கண்ணில் கண்ணீர்த் துளிகள் தேங்கி நிற்பதைக் கண்டு பஜனை முடிந்து உங்களை அணுகி "ஏன் மாஸ்டர் கண்கலங்கினீர்கள்" என்று வினவியபோது நீங்கள் கூறிய பதில் என் உள்ளத்தையே உருக்கிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று சமாஜம் எவ்வளவு பொலிவோடும் ஜீவகளை யோடும் பக்தி உணர்வோடும் இருந்து சமய கலை இலக்கிய வளர்ச்சியில் எவ்வளவு சேவை ஆற்றி, சிறார்களின் மன வளர்ச்சியிலும், மத வளர்ச்சியிலும் தன்னை அர்ப்பணித்துப் பொலிவுற்றுப் பிரகாசித்தது. ஆனால் இன்று என்னைப்போல் செயலற்று இருள்பட்டிருக்கின்றதே. இதற்கு மீட்சியே இல்லையா என நினைத்தேன். மனம் நொந்து உளம் வெந்து கண்கள் கலங்கின "என்றீரே ஐயா"

இனி இந்த சமாஜத்தில் எந்த விழாவும் நடக்காது சமாஜ விழாக்களை நடாத்தி பெருமை கொண்ட இந்த சரீரம் சமாஜத்தில் விழாக்களே இனி நடக்காதபோது இருந்து என்ன பயன் என்று எண்ணியே எம்மை விட்டுச் சென்றீரோ ஐயா... ஐயா .....


ஐயா! நீர் என்னோடு எப்போது பேசினாலும், சீர் அழிந்த நடேசர் ஆலயத்தைச் சீராக்குவது பற்றியும், சுவாமிஜியின் வேண்டுகோளுக்கிணங்க நடேசர் ஆலய சூழலில் குடி அமர்த்திய குடி அமரக் காணி வாங்கிய அனைவரையும் மீளக் குடி அமர்த்தி நடேசர் ஆலயத்தில் பூசை நடத்த வேண்டும் என்றே சொல்லுவீரே.

உம் சிந்தையெல்லாம் சமாஜம் நடேசர் ஆலயம் சமாஜம் நடேசர் ஆலயம் என்றே இருந்ததையா.

உம்மைப் பற்றி இத்தனை தெரிந்திருந்த நானும் ஒரு வகையில் நன்றி கெட்டவனே. சமாஜத்தில் உம்மோடு சமகாலத்தில் சுவாமிஜீயின் அரவணைப்பில் அன்பில் வளர்ந்தேன். இருந்தாலும் நானும் ஒரு அகங்காரப் பூனையே. என்னதான் அகங்காரத்தில் பூனை வளர்ந்தாலும் அதன் சிந்தையெல்லாம் பறனில் தான் இருக்கும் - எலியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீமத்சுவாமி நடராஜானந்தா அவர்களின் அஸ்தி இந்துக் கல்லூரிக்கு கொண்டுவரப்பட்ட போது கல்லூரி வாசலில் பெரியார்களை வரவேற்று சு. நவரத்தினம் அவர்கள் அழைத்துச் செல்லுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இருக்கும். அதேபோல் எத்தனை ஆண்டுகள் நான் சமாஜத்தில் வாழ்ந்த போதும் நான் மேன்மை அடைந்தேனில்லை. நான் என்ற ஆணவம் வஞ்ச உணர்வுகள் என்னை விட்டுப் போகவில்லை.

ஆராரோ எல்லாம் உமக்கு கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டிருந்தார்கள். ஆனால் சமாஜத்துத் தொண்டன் என்று கூறும் நான் சமாஜத்தின் சார்பில் ஒரு கண்ணீர் அஞ்சலி பிரசுரம் தானும் விட்டேனில்லையே ஐயா.

சமாஜத்தோடு நெருங்கிய அன்பர்களின் மறைவின் போதெல்லாம், சமாஜத்தில் நீர் எத்தனை அஞ்சலி உரை நிகழ்த்தி இருப்பீர் அண்மையில் மறைந்த சமாஜ அன்பர் அமரர் சிவராஜாவுக்குக் கூட காந்தி ஐயாவோடு நீரும் சமாஜத்தில் அஞ்சலி உரை நிகழ்த்தினீர்.

சமாஜத்தின் பெரும் தொண்டன், உண்மை ஊழியன் என்று பறை சாற்றும் இந்த நாயிலும் கேடு கெட்டேடோன். உமது பிரிவை எண்ணி சமாஜத்தில் ஒரு அஞ்சலி உரை நிகழ்த்தினேனும் இல்லை. அப்படி ஒரு நிகழ்வுக்கு தூண்டு கோலாகக் கூட இருக்கவும் இல்லையே ஐயா....

இந்தப் போலியை மன்னித்து விடுங்கள் ஐயா
ஐயா! என்னை மன்னித்து விடுங்கள் ஐயா.

கலாவினோதன் கலை விடுதன்,
— த. (சித்தி) அமரசிங்கம் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான ஆசான்

இந்துக் கல்லூரிக்கு மாணாக்கர்களாக நாம் அடி யெடுத்து வைத்த பொழுது எம்மை அரவணைத்துக் கொண்ட ஆசிரியர்களில் அமரர் நவரத்தினம் ஐயா அவர் களும் ஒருவராவார். ஐயா அவர்களிடம் கல்வி கற்ற மாணாக்கர் பலர் இன்று இந்த நகரில் நல்ல நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். தனது மாணாக்கர்களது நல்வாழ்வு பற்றி மிகவும் அக்கறை கொண்டிருந்த ஒரு ஆசானாக எம்மத்தியிலே அமரர் அவர்கள் வாழ்ந்திருந்தார்.

அமரர் நவரத்தினம் ஐயா அவர்கள் எமது மொழி, இனம், நாடு, சமயம் என்பவற்றின் மீது பற்றுறுதி கொண் டவராக இருந்ததை நாம் அறிவோம். சமயத்துறையில் மாணவர்களை வழிநடாத்துவதில் மிக அக்கறையோடு செயற்பட்டார். ஆலய வழிபாடு, கூட்டுப்பிரார்த்தனை என்பவை ஊடாக மாணவர்களது சிந்தனை செயற்பாடு என்பவற்றை ஆத்மீக வழிப்படுத்தினார்.

எமது அன்பிற்குரிய ஆசான் அவர்கள் தமது ஆசிரிய வாழ்க்கையை எமது கல்லூரியிலேயே ஆரம்பித்தார் என் பதும், பதினெட்டு ஆண்டு காலம் எமது கல்லூரியில் தொடர்ச்சியாக ஆசிரியப் பணியை ஆற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எமது கல்லூரியில் இருந்து 1971ம் ஆண்டில் மாற்றலாகிச் சென்று திருக்கோணமலை மேற்கு தமிழ் மகா வித்தியாலயம், ஔவை நகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டாலும்கூட கல்விப் பணிகள் பொறுத்து ஆர்வமும் அக்கறையும் கொண்டவராக இருந்தார். எமது கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த கரிசனை கொண்டவராகவும் எமது கல்விப் பெறுபேறுகள் குறித்து அடிக்கடி எம்மைப் பாராட்டுபவராகவும் இருந்தார். அமரர் நவரத்தினம் ஐயா அவர்களின் ஆசி எமக்கு என்றுமே இருந்தது.

இந்நகரத்தில் ஒரு சிறந்த சமூக, சமயத் தொண்டராக விளங்கிய அன்னார் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து விட்டார். இருப்பினும் அவரது வழிகாட்டல்களும், ஆலோசனைகளும் அன்னாரை என்றும் எமது நினைவில் வைத்திருக்கச் செய்யும். எமக்கெல்லாம் ஆசானாக விளங்கி எமது கல்லூரியின் வளர்ச்சியில் கரிசனையாக இருந்து எம்மைப் பாராட்டி ஊக்குவித்த அமரர் அவர்களை நாம் நெஞ்சார நினைவு கொள்கின்றோம்.

அமரர் நவரத்தினம் ஐயா அவர்களுக்கு
எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

தி/இ. இ. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி.
திருக்கோணமலை. சி. தண்டாயுதபாணி
அதிபர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவரத்தின மாஸ்ரரின் வாழ்க்கை நெறி நமக்கு எவ்வழியில் பயன் தரும்

ஆண்டவனிடம் எவன் ஒருவன் தன்னை பூரணமாக ஒப்படைத்து, மனோ வாக்கு காயங்களினால் அல்லும் பகலும் வாழ்க்கைப் போரை நடாத்திக் கொண்டிருக்கின்றானோ அவனது இறுதிக்கணம், பாவபுண்ணியத்தளைகளிலிருந்து விடுபட்டு, மிக மிகச் சிறந்ததாய் அமையும். அவனது அறிவின் ஒளி, மரணகாலத்தில், புனிதமான கருத்துக்களோடு, இறுதிவரை பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

ஐயா போய் விட்டார் என்ற செய்தியை அன்பன் தியாகராஜா தாங்கிக் கொண்டு வந்தார். விக்னேஸ்வரப் பெருமானின் பெருங்கதை முடிவன்று, மாஸ்ரரின் உலகியல் கதையும் முடிந்து விட்டது. இச்செய்தி எனக்குத் திகைப்பைத் தருவதற்குப் பதிலாக "விவேகம் மிக்க சான்றோர்கள் இறந்து போனவர்களுக்காகவும் இறக்கப்போகின்றவர்களுக்காகவும் வருத்தப்பட மாட்டார்கள்" என்ற கீதையின் அருளுரைதான் ஞாபகத்திற்கு வந்தது. "மாஸ்ரரின் உடலைப் பார்ப்பதற்காக விரைந்து புறப்பட்டு வரும் வழியில், சமாது பிள்ளையார் ஆலயத்தில் பஞ்ச ஆலத்திதீபாராதனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆலயக் குருக்களும் மாஸ்ரருக்கு அக்கு பஞ்சர் சிகிச்சை அளித்த அன்பருமான புலவர் சோமாஸ் கந்த ஐயாவிடம், மாஸ்ரர் புறப்பட்டு விட்டார், பெருமானுக்கு மோட்ச அர்ச்சனை செய்து விடுங்கள்" என்று கூறிவிட்டு மாஸ்ரரிடம் வந்தேன். அமைதியாக சமாதி நிலையில் உறங்கிக் கொண்டிருந்தார்.

உறக்கமென்பதும் ஒரு சமாதி நிலையே. யாரொருவராகிலும் எத்தன்மையுடையவராகிலும், எண்ணங்களற்று, நல்லது கெட்டது என்ற பேதமின்றி, எல்லாவற்றையும் ஈஸ்வர சிந்தனையோடு, ஈஸ்வரனுக்கே அர்ப்பணித்து விட்டு மரணிப்பாராகில் அவரும் சமாதி நிலையை அடைய உரித்தானவரே. மரணிக்கும் தருவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் பிராணனை புருவத்தின் மத்தியில் வைப்பதற்காக ஞானிகளும், யோகிகளும், ஆத்மசாதகர்களும் இடையறாது ஞான யக்ஞம் செய்து கொண்டேயிருக்கின்றார்கள். செய்கின்றவர்களுடைய யக்ஞத்தில் குறைபாடுகள் இருந்தாலும், நல்லெண்ணத்தோடு செய்யும் கருமம் பகவான் கையில் சேர்ந்ததும் அது புனிதமாகி விடும்.

மாஸ்ரர் இயற்கை எய்திய நிலையும் கூட விசித்திரமாயிருந்தது. இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக, அவர் நன்றாகத் தூங்குகின்றார், தொந்தரவு செய்யக் கூடாது என்ற மனப்பாங்கில், தங்கள் கருமங்களைச் செய்து கொண்டிருந்த மனைவிக்கோ, மகளுக்கோ மற்றவர்க்கோ தெரியாமல், வழமையாகக் கையைத் தலையணையாக வைத்துக் கொண்டு வடக்கை நோக்கிப் பார்த்த வண்ணம் உறங்கிக் கொண்டிருந்த மாஸ்ரர், எந்த வித உபாதையுமில்லாமல் வரும் போது யாருக்கும் எப்படி சொல்லாமல் வந்தாரோ, அதே போல் யாருக்கும் சொல்லாமலே தன் சொந்த ஊருக்குப் புறப்பட்டு விட்டார். குடும்பத்தினர் நம்பவில்லை. இரண்டு டாக்டர்கள் வந்து சாட்சி சொன்ன பிற்பாடு தான், பற்றின் நிமித்தம் கதறி அழத்தொடங்கினார்கள்.

இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமிருக்கவில்லை. இறுதிக்காலங்களில் அவரோடு கொண்ட ஆத்மீக உறவின் மூலமாக நான் அறிந்த உண்மை, அன்னார் தன்னையுமறியாமல், தன்னுடைய பயண ஆயத்தங்களை நடு நிலையோடு, மிக ஆழமாகவும் அமைதியாகவும் செய்து கொண்டிருந்ததை உணரக் கூடியதாக விருந்தது.

பகவான் இராமக்கிருஷ்ணரின் உபதேச மொழிகளை உலகிற்கு தந்த மகா ஞானி, காவி உடுக்காத மாஸ்ரர் மகாசிரியா என்பவரே ஒரு நாள் மகாசிரியாவைப் பார்த்து பகவான் இராமக்கிருஷ்ணர் கூறினாராம். "மகாசிரியா உனது கண்கள், இமைகள், மற்றும் முகத்திலுள்ள அறிகுறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலிருந்து நீ ஒரு யோகி என்பதை என்னால் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. ஆகையால் உன்னுடைய கருமங்கள் எல்லாவற்றையும் செய்து கொண்டிரு, ஆனால் உன்னுடைய மனத்தை மட்டும் இறைவன் மேல் வைத்திரு, மனைவி, மக்கள், தந்தை, தாயார் அவர்கள் எல்லோருடனும் வாழ்ந்து கொண்டிரு. அவர்கள் வேறுயாருமல்ல, உன்னுடையவர்கள் தான் என்ற எண்ணத்தோடு அவர்களுக்குச் சேவை செய். ஆமை குளத்தில் நீந்திக் கொண்டிருந்தாலும் அதனுடைய மனத்தை குளக்கரையில் இட்ட முட்டைகள் மீது செலுத்திக் கொண்டிருப்பது போல், உலகக் கடமைகள் எல்லாவற்றையும் செய், ஆனால் மனத்தை ஆண்டவன் மேல் வைத்திரு. இந்த மொழிகள் எனக்கு நவரத்தின மாஸ்ரரை ஞாபகப் படுத்துகின்றது.

மாஸ்ரர் தன் உலகக் கடமைகளைச் செவ்வனே செய்தார். நல்லாசிரியராகக் கடமை புரிந்தார். மனைவி மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து சிறிது கூட பிசகவில்லை. பிள்ளைகள் எல்லோரும் நல்ல நிலையிலேயே புரிந்துணர்வோடு ஐக்கியமாய் வாழ்கின்றார்கள். விவசாயம் செய்தார். நல்ல பொருட்களை விற்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சில்லறை வியாபாரம் செய்தார். வியாபாரியாக, ''இது நல்ல எண்ணெய், நல்ல தேன், நல்ல நெய், நானும் இதைத்தான் பாவிக்கின்றேன். பயமில்லாமல் கொண்டு செல்லுங்கள்''. என்ற அவரது வார்த்தைகள் இப்பொழுதும் என் காதுகளில் ரீங்காரமாகத் தொனிக்கின்றன. நல்ல ஹோட்டல் (கங்கா) வைத்திருந்தார். மாஸ்ரர் கடைச்சாப்பாட்டுக்கு ஒரு தனி மவுசு. நல்ல தோசை, வடை, லட்டு. தேன் குடிக்கும் வண்டு போல் வீட்டில் சாப்பாடு இருந்தாலும் மாஸ்ரர் கடையில் சாப்பிடுவோம், என்று நுளைந்தவர்களில் நானும் ஒருவன். அங்கு போவதற்கு வேறு காரணங்களும் உண்டு. தினசரிப் பேப்பர் பார்க்க வேண்டிய அவசியமேயில்லை. பட்டறையில் ஒரு கண்ணை வைத்துக் கொண்டு, 'நியூஸ் தெரியுமா?' என்று தொடங்குவார். அரசியல் உட்பட உலக சமாச்சாரங்கள் எல்லாவற்றையுமே கூறி விடுவார். அதில் அவருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரு தனியின்பம். அவரது அரசியல் நோக்கு அபாரமானது. எங்கள் எண்ணங்கள் எதுவாக விருப்பினும், அவர் தன் கருத்தை நிலைநாட்டுவதில் பெரும் சாமார்த்தியகாரர். 'சரிதான் மாஸ்ரர் என்று' பிரிய முடியாமல் பிரிவேன். நான் மட்டுமல்ல பலரின் நிலையும் இது தான்.

மற்றும் அவரின் சாப்பாட்டுக் கடையில் ஒரு விஷேஷம் என்னவென்றால், சிலர் வருவார்கள், 'மாஸ்ரர்' என்பார்கள் 'ம் ம் போய் சாப்பிடு' என்பார். சாப்பிட்டு விட்டு பில்லுடன் மெதுவாக வருவார்கள். மற்றவர்களுக்குத் தெரியாமல் அங்குமிங்கும் பார்ப்பார், 'சரி சரி' போய்ட்டு வா, மறு முறை, வரும் போது காசோடு வா, அரிசி விற்கிற விலை தெரியுந் தானே' 'இப்படி யொரு தொனி இப்படி எத்தனையோ பேர் ஓசிச்சாப்பாடு! இப்படியென்றால் கட்டுமா சேர்? ''என்ன செய்வது முந்தி நல்லலாயிருந்தவர் பாவம் எங்கே போவார்' அவரது இரக்கப் புன்னகையுடனான பதில். ஒரு ஞாபகம், காந்தி மாஸ்ரரிடம் கடன் வாங்கினால் திருப்பிக்கொடுக்க வேண்டியதில்லை, நவரத்தின மாஸ்ரர் கடையில் சாப்பிட்டால் பணம் கொடுக்க வேண்டியதில்லை. இப்படியான ஒரு சிலரும் இல்லாமலிருக்க வில்லை. இப்படியும் சிலர்! பெருமையாக 'பின்பு தருகிறேன்' எனக் கடன் சொல்லி விட்டுப் போவார்கள். 'எழுத வில்லையா சேர்'என்றால், நெஞ்சைத் தொட்டு 'இங்கே ஞாபகம் வைத்திருப்பேன்' எனப் பெருமையாகச் சொல்வார். தெரிந்த விடயம் தானே. பழைய கடனாயிருக்கலாம்! காசே தான் கட வுளப்பா என்ற இவ்வுலகில், இச்செயல்களெல்லாம் மாஸ்ரருக்கு ஒரு விளையாட்டு உலக அனுபவம்.

ஆண்டவன் மேல் அன்பு கொண்டவனுக்கு எல்லோரும் தெய்வமாகத்தான் தெரிவார்கள். உணவு கொடுப்பது ஆண்டவனுக்கு நேரடியாகக் கொடுப்பது சம்பாதிப்பதில் தர்மம் கொடுத்து மிஞ்சியது தான் நமக்கு என்பதை குடும்பத்தினருக்கும் உணர வைத்தவர் மாஸ்ரர். கொள்ளையடித்து, மனச்சாட்சிக்கு விரோதமாகச் சம்பாதித்து, அதில் ஒரு பகுதியை பல வேண்டுதல்களுடன் கடவுளுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து, இறைவன் ஏற்றுக்கொண்டு விட்டான், என் பாவங்கள் எல்லாம் போய் விட்டன என்ற இறுமாப்பில் வாழ்கின்றவர்களுக்கு அப்பாற் பட்டவர் மாஸ்ரர். Very Practical Man. அனுபவமுள்ள மனிதர். "உலகக்கடமைகள் எல்லாவற்றையும் செய், ஆனால் மனதை ஆண்டவன் மேல் வைத்திரு" என்ற பொருளை உணர்ந்து செயற்பட்ட மனிதன்.

மாஸ்ரரின் வீடு தொன்று தொட்டே ஒரு அன்ன தான மடம். அவர் வீட்டிற்குச் சென்றால் பசிக்காதவனுக்கும் பசி வரும். மதிய வேளைகளில்; சாப்பிட்டு விட்டுப் போங்கள் என்று சொல்ல மாட்டாரா என்று நினைப்பதற்குள், 'இலையைப் போடு' என்ற கட்டளை பிறந்து விடும். கதிர்காம யாத்திரை காலங்களில் மாஸ்ரர் வீடு ஒரே கலகலப்பாக விருக்கும் கால் நடையாகக் கதிர்காமம் செல்கின்ற எத்தனையோ அடியார்களும், ஞானிகளும் மாஸ்ரர் வீட்டில் உணவருந்தித் தான் செல்வார்கள். திருக்கோணமலையில் காலம் காலமாகவே இப்படியான அடியார் கூட்டங்களுக்கு சேவை செய்யும் மகான்கள் மறைமுகமாக நிறையப் பேர்கள் வாழ்ந்தார்கள். வாழ்ந்து கொண்டுமிருக்கின்றார்கள். இப்படியான வழிகாட்டிகளில் ஒருவர் மூலமாக இந்த ஞானிகளின் வழித்தோன்றலிலே உலகுக்கு வருகை தந்த உத்தமர் ஒருவரை மாஸ்ரர் கண்டு பிடித்து விட்டார். இந்தத் திருக்கோணமாமலைக்கு அதிபதியான திருக்கோணேஸ்வரப் பெருமான் உறையும் சிவ பூமியாகிய புண்ணிய பூமியிலேயே கண்டு விட்டார். பூர்வீகத் தொடர்பல்லவா அது. சாதாரணமாக ஒரு சுவாமி பிரபலயமடைந்த பிற்பாடு தான் "நாங்களும் அவரின் சிஷ்யர்கள் தான்" என்று பெருமைப்படுகின்ற மக்கள் வாழும் காலம் இது. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் குரு, அருவருக்கத் தக்க ஒரு பைத்தியகாரனாகச் சுற்றித்திரிந்தவர் என்று எத்தனை பேருக்குத்தெரியும். பண்டிதமணி கணபதிப்பிள்ளையிடம் ஆத்மீக சிந்தனைகளை நன்கு கற்றறிந்தவர் மாஸ்ரர்; மிக இலகுவாக, சிறுவனாக சாம்பசிவம் வாழ்ந்த வடகரை வீதியிலே, ஒரு சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டிலிலே, சுவாமி கெங்காதரானந்தரை, தனது சற்குரு கெங்காதரானந்தாவாகக் கண்டார். கண்டது முதல் அவரிடம் சரணடைந்தார் எத்தனையோ மக்கள் தமக்கென ஒரு குருவைத் தேடுவதில் தடுமாற்றமடைகின்ற காலம் இது. தேடிய குருவுக்கு ஒரு சிறிய துன்பம் வந்துவிட்டால் போதும்; சிஷ்யர்களும் 'நமக்கேன் தொந்தரவு' என்று மறைந்து விடுவார்கள். இலட்சிய சீடன் ஒருவன் கடவுளுக்கும் குருவுக்கும் எந்தவித வேறுபாட்டையும் காணமாட்டான் நவரத்தின மாஸ்ரர் இவ்விடயத்தில் திடமாகவேயிருந்தார் இதற்குக் காரணமும் உண்டு.

பாம்பின்கால் பாம்பறியும் என்பது போல் நவரத்தின மாஸ்ரரை சுவாமி கெங்காதரானந்தாவின் பாதங்களுக்கு அழைத்துச் சென்றவர் சாதாரணமானவரல்லர். குருபக்தி சிவபக்தி, அடியார் பக்தியை ஒழுங்காக உணர்ந்து, செயலாற்றிக் கொண்டு வரும் காவி உடுக்காத பிரமச்சாரி ஞான சிரோன்மணி பண்டிதர் வடிவேலு ஐயா தான் என்பதை எத்தனைபேர் அறிவார்களோ! சிவபூமியாகிய திருக்கோணமலையை தன் ஆத்மீக தொண்டுகள் மூலமும், நூல்வடிவங்களிலும் இன்றும் உலகுக்கு எடுத்துக் காட்டி தொண்டு செய்து கொண்டிருக்கின்ற வடிவேலவன், தன்னுடைய ஆத்ம நண்பனுக்கு வழிகாட்டியதில் என்ன வியப்பு. மாஸ்ரருக்கு இறுதி யாத்திரையின் போது திருபொற் சுண்ணப் பதிகத்தையும் பாடி வழியனுப்பி வைத்தார்.

சுவாமி வாழ்கின்ற போதே நவரத்தின மாஸ்ரர் சுவாமியை பிரம்மஞானியாகவே பார்த்தார். தன்னைமட்டுமல்லாது தன் முழுக்குடும்பத்தினரையும் சுவாமிக்கு அர்ப்பணித்தார். சுவாமிக்குச் செய்யவேண்டிய தலையாய கடமைகளைப் பற்றியே சிந்தித்தார். வடகரை வீதி கொட்டிலிலிருந்தே தன் கடமைகளைச் செய்யத் தொடங்கினார். சுவாமிக்குச் செய்யவேண்டிய முதற்பணியும் முக்கிய பணியும், அவருக்குத் தூய உணவு கொடுப்பதே. புலாலுக்கு அடிமையாயிருந்த மாஸ்ரரும் அவரது குடும்பத்தினரும் ஆத்மீக அக்கினியால் எரிக்கப்பட்டுவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய உணவை சமைத்து சுவாமிக்கு கொடுக்கவேண்டு மென்ற அவர்களது நல்ல எண்ணமே அவர்களைத் தூய் மையாக்கிவிட்டது. எவ்வளவு பெரிய தியாகம். யாரால் இவ்வளவு இலகுவாக இதை செய்ய முடியும். அன்று தொடங்கி உணவளிக்கும்பணி இன்றும் மாஸ்ரர் வீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சுவாமி தான் போய் விட்டாரே! இன்று அவருக்கு எப்படி உணவளிக்கப் படுகின்றது என்று ஆச்சரியப்படா தீர்கள்.

ஒரு நாள் மாஸ்ரர் என்றுமில்லாதவாறு மிகுந்த கவலையோடு இருந்தார். ஏன்? என்று வினவியபோது, "பாவம், சுவாமி இறந்து விட்டார் என்று பலர் நினைக் கின்றார்கள். அவருக்குத் தினமும் நேரத்திற்கு அவர் வாழ் கின்ற கோயிலிலே உணவு படைக்கின்றார்கள். இல்லை. இதை யாரும் சிந்திப்பதாகவும் தெரிய வில்லை, என்ன செய்வது கணபதிப்பிள்ளை, அங்கு எப்படி கொண்டு செல் வது, மற்றவர்கள் ஏற்றுக் கொள்வார்களோ என்றும் தெரிய வில்லை" என்று வேதனைப் பட்டார். "ஏன் ஐயா கவலைப்படுகின்றீர்கள்? சுவாமிக்கு வேண்டிய போது உண வளித்தவர்கள். தாங்கள் உங்கள் இல்லத்தில் அவருக்கு சுவாமி அறை வைத்திருக்கின்றீர்கள் தானே. தினமும் சமைக்கின்ற உணவைப் பிரசாதமாகப் படைத்து திருப்திய டையலாமல்லவா? இன்று தொடக்கமே செய்யுங்கள்," என வேண்டினேன். கண்ணீர் விட்டார். இந்தக்கணமே என எழுந்தார். அன்பு மனைவியிடம் பணித்தார். அன்று மதியமே சுவாமிக்கு உணவு படைக்கப்பட்டது. கற்பூர ஆலத்தியும் காட்டப்பட்டது. அந்தப் பணி இன்றும் தொடர்கின்றது. "நான் இல்லாவிட்டாலும் இந்தப் பணி நடக்கட்டும்" என மனைவிமக்களுக்குப் பணித்தும் விட்டார். தங்களை முற்றாக சுவாமிக்கு அர்ப்பணித்தவர்களல்லவா, செய்யத்தவறுவார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஸ்ரரின் செய்திகளை யார் சொல்லியும் நான் எழுதவேண்டியிருக்கவில்லை. சுவாமி கெங்காதரானந் தாவை ஆரம்பம்முதல் அறிந்து பணிவுடன் பழகியவர் களில் அடியவனும் ஒருவன். அவரோடு பழகும் வாய்ப்பு சுமார் 43 வருடங்களுக்கு முன்பாகவே கிடைத்தது. பல கோணங்களில் சுவாமியைப் புகைப்படங்கள் எடுத்தேன். என் புகைப் படங்களைப் பற்றி எப்பொழுதும் பெருமையா கச் சொல்லுவார். அவரது இறுதியாத்திரையைக் கூட படம் எடுக்கும் வாய்ப்பினை நவரத்தின மாஸ்ரர் தான் பணித் திருந்தார். சுவாமியைப் போன்ற மகான்களை தேடிப் பழகுவது இளமையிலிருந்தே என் சுபாவமாக இருந்தது. என்னை ஆட்கொண்டவர் என் சற் குருநாதன் குருமகராஜி, மற்றைய மகான்கள் எவராக விருப்பினும் மதிப்புக் கொடுத்தே நடப்பேன். இது அவன் அருள். ஒரு சுவாமி யோடு இருந்தால் மற்ற சுவாமிகளிடம் போகக் கூடாது, ஆசிகள் பெறக்கூடாது. மதிக்கக்கூடாது என்ற மதியீனர் கள் கூட்டத்தைக் கண்டும் கேட்டும் கண்ணீர் விடுவேன். இதனை மாஸ்ரர் நன்கறிவார். சுவாமி கெங்காதரானந் தாவுக்கும் அடியவனுக்கும் நவரத்தின மாஸ்ரருக்கும் உள்ள பூர்வீகத் தொடர்பை மாஸ்ரர் அறிந்து தான் போலும், சுவாமிக்குச் செய்ய வேண்டிய மாபெரும் தொண்டினை, பெரும் செயலை அடியவன் மூலம் செய்வித்தார். எப் பொழுதும் என் குருநாதனிடம் செல்லும் போது காந்தி ஐயாவிடமும் மாஸ்ரரிடமும் ஆசி பெற்றுக் கொண்டே செல்வேன். 1992ம் ஆண்டு யாத்திரையின் போது வெள் ளிடப்பாவில் பவுத்திரமாக வைத்திருந்த சுவாமி கெங்கா தரானந்தாவினுடைய அஸ்தியை என்கையில் தந்து "தம்பி கணபதிப்பிள்ளை, இந்த ஞானியினுடைய அஸ்தியை புண் ணிய பாரதத்தில் ஓடுகின்ற நதிகளில் சங்கமமாக்கிவிடும், இது தான் என்னுடைய பூரண விருப்பமும் வேண்டு கோளும்" எனக் கண்ணீர் மல்கத் தந்தார். யாரால் இச் செயலை நினைத்துக் கூடப்பார்க்க முடியும். இச்செயல் ஒன்றே அவர் தன் குரு நாதன் மீது வைத்திருந்த பக்தி யையும் அன்பையும் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தற்கரிய பேற்றினைப் பெற்றுக் கொண்டு சுவாமியின் அஸ்தியை தோளில் சுமந்து கொண்டு முதலில் என் குருநாதனிடமே சென்றேன். அவரின் ஆசியைப் பெற்றுக் கொண்டு மூன்று மாதங்களாகப் பாரத மாதாவின் மண்ணில் உள்ள நதிகளில், கேதார் நாத்திலும், பக்திரி நாத்திலும், கங்கோத்திரியிலும், யமுனோத்திரியிலும், பல நதிகளின் சங்கமங்களிலும், பாகீரதி, அலகநந்தா, புண்ணிய ஷேத்திரங்களான காசி, காயா, ரிஷிகேசம், ராமேஸ்வரம் இறுதியாக காவேரியிலும் உரிய முறைகளுடன் கரைத்தேன். சுவாமியின் அஸ்தியை ரிஷகேசத்தில், சிவாநந்த மகராஜியின் சீடராகிய சுவாமி பிரகாச மயானந்தாவைக் கொண்டும் கரைப்பித்தேன். இந்நிகழ்ச்சிக்கும் சுவாமி கெங்காதரானந்தாவுக்கும், சுவாமி பிரகாச மயானந்தாவிற்கும் நெருங்கிய தொடர் பொன்று உள்ளது. சுவாமி கெங்காதரனந்தா கதிர்காமக் கந்தன் வாசலில் சன்யாசியாக காவி உடையைத் தானாகவே எடுத்துக் கொண்ட போது, உடனிருந்த சுவாமி பிரகாச மயானந்தா தனக்கு இவ்வஸ்தியை கங்கையில் கரைக்கக் கிடைத்தது பெறும் பாக்கியம் எனக் கூறினார். அடியவனுடன் கேதார நாதனை நோக்கி நடந்து வந்த புத்தகாயாவைச் சேர்ந்த தர்மமித்தா என்ற பௌத்த பிக்குவும் பல சங்கமங்களில் அடியவனுடன் சேர்ந்து சுவாமியின் அஸ்தியைக் கரைத்தார். சுவாமியை என் தோள் ஏற்றி விட்ட நவரத்தின மாஸ்ரரை என்னால் எப்படி மறக்க முடியும்.? இச்செயலினால் சுவாமியின் தொண்டனாகிய மாஸ்ரருக்கு தொண்டனாக இச் செயலினைப்புரியும் பேறினைப் பெற்றேன்.

இறுதிக்காலத்தில் சில காலமாக மாஸ்ரர் நோய் வாய்ப்பட்டிருந்தார். நோய் என்றால் எல்லோருக்கும் பயம். "நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்" என இராமலிங்க வள்ளலார் பாடினாரே. அது எந்த நோயாக இருக்கலாம்! உடல் நோயா? அல்லது உள்ளத்தின் நோயா? மாஸ்ரரின் வாழ்வில் உடல் நோய் அவருக்கு உதவியல்லவா செய்திருக்கின்றது. தேவையற்று எங்கும் புறப்படாமல் இருந்த இடத்திலேயே பல மகான்களோடு வீற்றிருப்பார். இராமக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணரும், திருமூலரும், விவேகானந்தரும், கெங்காத ரானந்தரும், பகவத்கீதையாக கண்ணனும், நால்வரும், மற்றும் பல மகான்களும், பேரறிஞர்களும் நூல் வடிவங்களில் மாஸ்ரரைச் சுற்றி வீற்றிருப்பார்கள். "இறைவனுடன் மனதை வைத்திரு" என்ற மொழிக்கிணங்க இந்நூல்களை யெல்லாம் வாசித்து அவரைப் பார்க்கப் போகின்றவர்களுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருப்பார்.

மாஸ்ரர் தெய்வமாக மதிக்கின்ற புனித ஆத்மா காந்திமாஸ்ரர். காந்திஐயாவை ஒரு நாள் காணாவிட்டாலும் கலங்கிப்போவார். காந்திஐயாவும் எப்படியோ தன் நேரத்தில் ஒரு பங்கை ஒதுக்கி மாஸ்ரருடன் இருந்துவிட்டுத்தான் போவார். டாக்டர் ராமச்சந்திரனும் சித்திரீச்சரும் அடிக்கடி வந்து சிவயோக சமாஜ விடயங்களைப் பற்றியும் உலக விடயங்களைப்பற்றியும் பேசிவிட்டுப் போவார்கள். ஞானசிரோன்மணி பண்டிதர் வடிவேலு ஐயாவுடன் பல மணிகளாக இருந்து ஞானக்களஞ்சியங்களைப்பற்றி ஆராய்வார்கள் மாஸ்ரரின் வீடு ஒரு பட்டிமன்றம். "சுகாசனத்தில் மாஸ்ரர் கம்பீரமாக வீற்றிருக்கின்ற காட்சியை, போந்து பொலிந்த மனிதன் ஐயா" எனக் காந்திமாஸ்ரர் பல தடவைகள் சொல்லக்கேட்டு ஆனந்தித்திருக்கின்றேன் இனி எப்போ இந்தக் காட்சியைக் காண்பது என ஏங்குகின்றேன்.

நான் எவ்வளவு முக்கிய வேலைகளோடு வந்தாலும் மாஸ்ரரைப் பார்க்காமல் போகமாட்டேன். வேறுபல வழிகளில் அவரோடு பழகினாலும் கண்ணனின் கீதை தான் எங்கள் இருவரையும் இணைத்த ஒரு ஞானப்பாலம். கீதையில் ஏதாவது ஒரு புதிய கருத்து தென்பட்டாலும் அவரிடம் சொல்வதற்காக உடனே ஓடிச் செல்வேன். மணிக்கணக்காக கீதையைப்பற்றிப் பேசுவோம். சுவாமி ராம்சுகதாஸ் எழுதிய இலகுவான கீதா மாதுர்யத்தை அவரிடம் "சமர்ப்பித்தபோது, இப்போது என்னைப் பூரண வேதாந்தி ஆக்கிவிட்டீர் எனச் சிரித்தார். கீதா மாதுர்யத்தை அனுவனுவாகப் பார்த்தார். சித்தாந்தத்தில் மெய் மறந்திருந்த ஞானசிரோன்மணி வடிவேல் ஐயாவையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதா மாதுர்யத்தில் நுழைந்து விட்டார். கீதையைப்பற்றிய விளக்கத்தை இப்போது வடிவேல் ஐயா சொல்லக் கேட்க ஆனந்தமாயிருக்கின்றது. இப்போதுதான் புரிகின்றது கண்ணன் எல்லாவற்றையும் 'நான்' 'நான்' என்று கூறுகின்ற இரகசியம்தேங்காயும் நான், மட்டையும் நான், தும்பும் நான், உள் இருக்கும் பருப்பும் நான், எல்லாமே நான்... என்று வடிவேல் ஐயா கூறிய போது என் மனம் நெகிழ்ந்தது.

இதை அறிந்த பின் எமக்கு போதை தருகின்ற மயக்கமான 'நான்' போய். மிஞ்சுவது நம் முள்ளிருக்கும் அந்தப்பரந்தாமனாகிய நான் மட்டும் தான். மாஸ்ரரிடம் கொண்ட உறவுக்குப் பரிசில்கள் இவை. மாஸ்ரர் இறுதி வரை கீதா மாதுர்யத்தைப் பற்றியே என்னிடம் பேசுவார். அந்த கீதா மாதுர்யத்தை எழுதிய இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற 90 வயதையும் தாண்டிய பழம் பெரும் ஞானி சுவாமிராம் சுகதாசை 21.05-94ல் ஏகாதசித்தினத்தன்று ரிஷகேசம் கீதா பவனத்தில் சந்தித்து ஆசிபெற்று வந்த செய்தியை மாஸ்ரரிடம் சொன்ன போது அவர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை இன்று 28.12.94 ஏகாதசி, இதை எழுதிக்கொண்டிருக்கின்றேன் மாஸ்ரரின் உடல் இங்கில்லை. அவரின் ஆத்மா என்பக்கத்தில் நிற்பதை உணர்கின்றேன்.

இனி எப்போ மாஸ்ரரோடு இருந்து உணவு அருந்துவது. எத்தனை நாட்கள் மதிய உணவருந்தாமல் போக விடவேமாட்டார். வீட்டில் எவ்வளவுதானிருந்தாலும், அவர் அருகிலிருந்து சாப்பிடுவது பெரிய பாக்கியம். நான் தயங்கினாலும் மாஸ்ரரின் பத்தினியார் மேசையில் சாப்பாட்டை பரிமாறத் தொடங்கிவிடுவார். அந்தத்தாயாரைப் பற்றி எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை. புராணக் கதைகளில் நாம் படித்திருக்கின்றோம். வள்ளுவனுக்கு ஒரு வாசுகி. நவரத்தினத்தாருக்கு ஒரு பராசக்தி. உணவு பரிமாறும் போது ஒரு குவளையில் நீர், அருகில் ஒரு ஊசி வைக்கச் சொன்னாராம் வள்ளுவர். எதற்காக என்று கேட்காமல் இறுதிவரை கடமையைச் செய்தாள்வாசுகி.இதேநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் மாஸ்ரர் வீட்டிலும். எதற்காக என்று கேட்காமல் வேண்டியதெல்லாம் செய்யப்படும். அருகிலிருந்து அனுப வித்த சம்பவங்கள். இங்கே ஒரு சிறிய திருப்பம். சில நேரங்களில் உணவு மேசையை ஏக்கமாகப் பார்ப்பார் மாஸ்ரர். ஏதாவது இனிப்புப் பண்டங்கள் இருக்கின்றனவா வென்று "உங்களுக்கு அது கூடாதப்பா" என்ற பராசக்தி, அம்மாவின் ஒரு சிறிய அதட்டல் 'கணபதிப்பிள்ளைக்கு' எனக்கேட்பார். 'எனக்குத் தெரியும் தானே!' அமைதி அடைந்து விடுவார் மாஸ்ரர்.

நோய்வாய்ப் பட்டிருந்த மாஸ்ரருக்கு, அவரின் உடலுக்கு ஏதாவது துன்பம் வந்து கஷ்டத்துக்குள்ளாகக் கூடாதே என்பதைக் கருத்தில் கொண்டு மிகவும் கவனமாக அந்தத்தாய் சேவை செய்ததினால் தான் அவர் நோயிருந்தும் நோயற்றவர் போல் வாழ்ந்தார்.

மாஸ்ரர் ஆற்றிய சேவைகளில் சிகரம் போன்றதொரு சேவை, நம்பவும் முடியாது மறக்கவும் முடியாது காந்தி ஐயாவின் 75வது நிறைவாண்டு விழா ஒரு தனிமனிதனுக்கு விழா எடுப்பதென்றால் அதற்கும் ஒரு தகுதி வேண்டும் தகுதியுள்ளவர்கள் இல்லாமல் அல்ல. பல பல துறைகளில் தகுதிபெற்று வாழ்ந்துகொண்டு இருக்கின்றார்கள், பலர் வாழ்ந்து மறைந்தும் விட்டார்கள். இவர்களைக் கண்டு பிடித்து அவர்களைப் பாராட்ட வேண்டியது ஒரு நல்ல சமுதாயத்தின் கடமை காந்தி ஐயாவை பலவகைகளிலும் நடமாடும் தெய்வமாகப் பார்த்தார் நவரத்தினமாஸ்ரர் அதனை ஆமோதித்தனர் பலர் விழா எடுக்கப்பட்டது. நோய்வாய்ப்பட்டிருந்த நவரத்தின மாஸ்ரர் தன்னுடைய இறுதிக்காலம் வருமுன்பாகவே இத் தொண்டினைச் செய்ய வேண்டுமென்று துடியாய்த் துடித்தார். அவருடைய கனவை நனைவாக்கும் பணியில் அடியவனும், திருவாளர்கள் விநாயக சோதி, புவனேந்திரன், அமரசிங்கம் ஆகிய நால்வரும் ஒருமுகமாக அந்த மகானுக்கு விழா எடுப்பதில் ஒத்துழைத்தோம். அந்த மகானை உணர்ந்த மக்களும் மனமுவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளிக் கொடுத்தார்கள். காந்தி ஐயாவின் விழா சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்ச்சி நவரத்தின மாஸ்ரரின் உள்ளத்தில் இறுதி நாள் வரை பிரகாசித்துக் கொண்டிருந்ததை உணரக் கூடியதாகவிருந்தது.

வலதுகை கொடுப்பது இடது கைக்குத் தெரியாமல் அள்ளிக் கொடுத்தவர் மாஸ்ரர். பலர் கண்களுக்குப் பைத்தியமாக தெருவில் திரியும் காத்தாயியையும் தெய்வமாக மதித்து உணவளிக்கின்ற குடும்பம் மாஸ்ரக் குடும்பம். எந்த வித பற்றுதலுமின்றி, தன் பேரக் குழந்தைகளோடு கூட தன்னையும் ஒரு குழந்தையாக்கிக் கொண்டு விளையாடி விட்டு மறைந்து விட்டார். அவரின் வழித்தோன்றல்களில் ஒன்றான அவுஸ்திரேலியாவில் இருந்து வந்த பால்மணம் மாறாத பேரன் அருணும் வேதாந்தம் பேசுகின்றான். கடவுளைப்பற்றி நிறைய என்னிடம் பேசினான் இக் குடும்பத் தலைவன் மாஸ்ரர் நவரத்தினத்தாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்க எனக்கு அவசியமேயில்லாமல் போய் விட்டது. ஏனெனில் அவரது ஆத்மா சாந்தியடைந்து விட்டது.

அவரது வாழ்க்கை நெறியைப் பின்பற்றி ஏதாவது செய்ய வேண்டுமாகில், அவரதும் மற்றவர்களதும் தெய்வமாகி குருவாகி வாழ்ந்து மறைந்த சுவாமி கெங்காதரானந்தா அவர்களின் எண்ணத்தை, நடேசர் கோவிலை மீண்டும் கட்டி எழுப்பும் பணியை நிறைவேற்றுங்கள்.

**So Live In The World With The Mind On God**

அன்பன்
நாகராஜா கனபதிப்பிள்ளை
28-12-94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவயோக சமாஜத்தின் நந்திதேவர் ஆக

# வாழ்ந்த மாமனிதர்

பூவுலகில் வாழும் கோடிக்கணக்கான மனிதர்களுள் ஒரு சிலரே சமுதாயத்தின் பெயருக்கும் புகழுக்கும் உரிமையாளர் ஆகின்றனர். அமரர் சு. நவரத்தினம் அவர்களும் இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர் என்பதில் ஐயமில்லை. இவர் புண்ணிய இடமாகத்திகழும் திருக்கோணமலையில், சிவயோகசமாஜத்தின் நுழைவாயிலில் அமைந்துள்ள தனது இல்லத்தில் சமய அனுஷ்டானங்களுடன், பரம் பொருளே நித்திய வஸ்து என்ற நினைவுடன் வாழ்ந்து வந்தார். இவரை அனைவரும் மாஸ்ரர் என்று அன்புடன் அழைத்து வந்தனர்.

அமரர் சு. நவரத்தினம் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு அவர் இல்லத்திலேயே முன்த முதலில் எனக்குக் கைகூடியது. நான் இந்து அமைச்சில் வேலை பார்த்த சமயம் என்னையும் அமரர் வே. ந சிவராஜா அவர்களையும் அமைச்சர் அவர்களையும் மதிய போசனத்துக்கு சுவாமிஜி அவர்கள் அழைத்திருந்தார். தவிர்க்க முடியாத காரணத்தால் அமைச்சர் அவர்கள் அன்று வரமுடியவில்லை. அமைச்சர் வரவில்லையே என்று மனம் கோணாது, எங்கள் இருவரையும் அமைச்சரின் ஸ்தானத்தில் வைத்து அன்புடன் உபசரித்தார். இது அவரின் பெருந்தன்மையைக் காட்டுகின்றது. இந்த விருந்து உபசாரத்தை சுவாமிஜி அவர்களின் விருப்பத்துக்கிணங்க அமரர் சு. நவரத்தினம் அவர்கள் தனது இல்லத்தில் வைத்திருந்தார். அன்றிலிருந்து அவரின் தொடர்பு வளரத் தொடங்கியது.

இவர் ஸ்ரீமத்சுவாமி கெங்காதரானந்தா அவர்களைத் தனது மானசீகக் குருவாக ஏற்று வாழ்ந்தவர். சிவயோக சமாஜ வேலைகள் அனைத்தும் இவர் மூலமாகவே சுவாமிஜி அவர்கள் ஒப்பேற்றுவிப்பார். சுவாமிஜி அவர்களின் ஆத்மீக சாதனைகள் தெய்வீக ஊற்றாக உருவெடுத்து நகரம் சாலையில் மெய்யுணர்வுடன் வாழ்ந்த மாமனிதர் ஆத்மீக உணர்ச்சிகளை உள்ளத்தில் நிரப்பி வைத்திருந்த அமரர் சு. நவரத்தினம் அவர்களுக்கு எக்கருமமும் நற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருமமாகத் தென்பட்டது. சிவயோக சமாஜ பஜன்களில் முக்கிய பங்கு வகித்து வந்தார். நாராயண பஜனை பாடும் பொழுது அவரின் உருக்கமான மனநிலை அவரை நாராயணன் பால் அழைத்துச் சென்றுவிடும். இது இவரின் தனிக்கலை என்று தான் சொல்லவேண்டும்.

மாஸ்ரர் அவர்கள் பல விழாக்களில் கலந்துள்ளார். விழாக்களில் கலந்து கொள்வதால் சிறப்படைகிறோம் என்ற மனநிலை இவரிடம் இருக்க வில்லை. விழாக்களில் கலந்து விழாவைச் சிறப்பிப்பதே இவரின் முக்கிய எண்ண மாகத் திகழ்ந்தது.

பிற்காலகட்டத்தில் நோய்வாய்ப்பட்டு இருந்தாலும் இறைவன் மேல் பூண்ட சாச்சுவதமான அன்பினால் தனது பணிகள் அத்தனையையும் இறைபணி ஆகக் கருத்தில் கொண்டு வாழ்ந்த பெருந்தகை.
இவர் குடும்பமே அவருடன் இப்பணியில் ஊறி நிற்பதைக் கண்கூடாகக் காணமுடிந்தது.

ஆண்டவனை நோக்கி நாம் நடாத்தும் பிரயானத் தின் இடையே குருவின் இருப்பிடம் சத்திரமாக அமை கிறது. ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா அவர்களின் ஆச்சிரமத்தில் அமரர் சு. நவரத்தினம் அவர்களின் இருப் பிடம் திருக்கோவிலில் நந்தியெம் பெருமான் அமைந்திருப் பது போன்று அமைந்திருக்கிறது. அதன் அமைப்புக் கேற்ப சுவாமிஜி அவர்களும் அந்த ஸ்தானத்தில் மாஸ்டர் அவர் களை நிலை நிறுத்தி அவரைச் சந்தித்த பின்பே தன்னி டம் அணுகும் நிலையை வைத்திருந்தார். ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா அவர்களுக்கு நந்தியெம் பெருமானாக இருந்து சேவை செய்துள்ளார். என்றால் சாலவும் பொருந் தும் அன்றோ! சுவாமிஜி அவர்களின் அருளாசியுடன் அம ரர் சு. நவரத்தினம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

**சிவ. சி. மாணிக்கவாசகர்**

முன்னாள் செயலாளர்,
மின்வலு எரிபொருள் அமைச்சு,
கொழும்பு -2.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

யாழ் நகரிலிருந்து நாம் திருமலை செல்வதென்றால் அது நவரட்ணம் மாஸ்ரர் வீட்டிற்குத் தான். எந்த நேரம் சென்றாலும் அது நடுச்சாமமாக இருந்தாலும் வந்தவரை உள் அன்போடு வரவேற்று முகமலர்ச்சியுடன் உபசரித்து உணவளிக்கும் உளப்பாங்கு அவர் ஒருவருக்கு மட்டும் தான் இதனை அனுபவித்தவர் பலருண்டு உரியது என் குடும்பத் தவரும் பலமுறை திருமலை சென்றபோது அவரது அன்பான உபசரிப்பில் திண்டாடியுள்ளோம். இந்த வகை யில் எங்கள் குடும்பம் அவரிடம் மிகவும் கடமைப்பட்டு துள்ள.

சிவயோக சமாஜ சுவாமி கெங்காதரானந்தாவின் அன்பர்களாகிய எங்களுக்கும் அவருக்கும் அன்புமயமான தெய்வீகப்பாலம் அமைந்தவர்கள் சுவாமிஜீ அவர்கள் தான். என்று அவருடனும் அவரது குடும்பத்தவருடனும் அன்புப் பாலம் அமைத்தோமோ அன்றிலிருந்து இன்றுவரை எந்த வித தடங்கலுமின்றி எங்கள் அன்பு நட்பு வளர்ந்து கொண்டேவந்தது.

ஆழ்ந்த கடவுள் பக்தி தன்னலமில்லா சேவை தூய் மையான உள்ளம், மலர்ந்தவதனம், நகைச்சுவை ததும்ப உரையாடும் அவரது தனிப்பங்கு எதையுமே எம்மால் மறக்க முடியாது. ஜீவசேவையே சிவசேவை என வாழ்ந்த வர். தன் இறுதி மூச்சுவரை சிவயோக சமாஜத்துத் தொண் டுக்கே தன்னை அர்ப்பணித்தவர். சமீபத்தில் நோய்வாய்ப் பட்டிருந்தும் எம்மால் அவரைச் சென்றுபார்க்க முடிய வில்லை என்று எங்களுக்கு மனவேதனை.

அன்னாரின் இழப்பு அன்னாரின் குடும்பத்தவருக்கு மட்டுமல்ல சைவ உலகிற்கே பேரிழப்பாகும், அவரை இழந்து பரிதவிக்கும் அன்னாரின் குடும்பத்தவருக்கு எங்கள் இதயம் நிறைந்த அனுதாபங்கள்.

திருமதி கனகலிங்கம் குடும்பத்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாப அஞ்சலி

அமரர். சு. நவரத்தினம் அவர்கள் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் மாணவர். அவர் அன்பும் பண்பும் நிறைந்த சான்றோர்.

அமரர். சு. நவரத்தினம் அவர்கள் நாற்பது ஆண்டுகளாக சுவாமி கெங்காதரானந்தா அவர்களுடன் பழகியவர். அவரது ஆன்மீக அனுபவங்களை உடனிருந்து அனுபவம் பெற்ற பெரியார்.

சுவாமிஜி அவர்களின் பணிகளுக்கு உதவிய பெருந்தகையாளர். நடேசர் கோவிலை மீண்டும் புனரமைக்க வேண்டுமென்ற எண்ணமுடன் வாழ்ந்தவர்.

ஞானிகளின் வரலாறுகளும் அனுபவங்களும் உணர்ந்த ஞானி.

ஆசிரியராகப் பணியாற்றி நல்ல மாணவர் சமுதாயத்தை உருவாக்கிய பெரியார்.

இத்தகைய சிறந்த பெரியார் ஞானி அமரராகி விட்டார். அவரது சிறந்த சிந்தனைகளை நாம் போற்றுவோம்.

டாக்டர். புலவர். சிவஸ்ரீ. வை. சோமாஸ்கந்தக்குருக்கள். D,AC

471, திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நவரத்தினம் ஆசிரியர் மறைவு குறித்த இரங்கல் பாமாலை

1. முத்தமிழும் உணர்ந்தோன் முந்தையோர் மகிழவே
சித்தத் தெளிவோடு செய்வதெலாம் சீராக
வைத்துப் பணிபுரிந்த வள்ளல் நவரத்னம்
அத்தன் அருளாலே அமரனாய் ஆயினான்

2. சொந்த பந்தம் நோக்காது சுவாமிஜீ அடி நின்று
புந்தி மகிழ்வோடு புதுப் பொலிவு பெற நாளும்
குந்தமிலாச் சிவயோக கூடந்தனை அமைத்து
விந்தையுறு சேவை செய்து வீரனாய் வாழ்ந்தான்

3. அறுபதுக்கு மேல் வாழ்ந்து அடக்கமொடு இளைஞன் போல்
இறுதிவரை சளைக்காமல் இறைபணியே செய்பவனாய்
உறுதியுடன் உழைத்து உமைமாதின் கிருபையினால்
மறதியறு மனத்தினனாய் மக்கள் பணி செய்தனனே

4. கருமவினை காட்டிக் களிப்புடனே திருமலையில்
பொறுதியுடன் சமாதிலிங்கப் பூசைகளைச் செய்வித்து
இறுதி மூச்சு ஓயும்வரை உழைத்துழைத்தே மகிழ்ந்து
அறுதியிட்டு வாழ்ந்து ஆண்டவனின் அடிசேர்ந்தான்

5. நவமான சேவையினால் நற்புகழை நாட்டிச்
சிவயோகக் குருமணியைச் சேவித்து வாழ்ந்தான்
அவமானம் பாரான் அனைத்துமே தான் செய்து
சிவலோகம் சென்றான் செல்வன் நவரத்னம்

6. அமரனாம் நவரத்னம் அரன்தொழும்பு செய்து
மரணபயம் ஒழித்து மண்ணுலகில் வாழ்ந்து
சிரமங்கள் பாராது சிவத்தொண்டு பல செய்து
பரமனடி சேர்ந்தான் பலர்புகழும் செயல்வீரன்

கோணா கவியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நெஞ்சம் மறவா உள்ளம்

திருக்கோணமலை சிவயோக சமாஜ சுவாமி கெங்காதரானந்தா அவர்களின் மிகவும் முக்கியமான தொண்டராக, சீடராக அவருடன் இணைத்து தன் வாழ்வில் பல வழிகளும் சீரும் சிறப்புமாக வாழ்ந்து இறைவன் திருவடியைப் பற்றிக் கொண்ட சு. நவரட்ணமாஸ்ரர் அவர்களை நான் கடந்த 30 ஆண்டுகளாக நன்றாக அறிவேன். மிகவும் நெருக்கமாக சென்ற நாலு இரண்டு ஆண்டுகளாக பழகும் வாய்ப்புக் கிடைத்தது. நான் தினமும் மாலை பதினைந்து நிமிடமாவது அவரைச் சந்தித்து உரையாடாமல் என் உள்ளம் உறங்காது. ஐயா அவர்கள் யாழ் கோண்டாவிலில் பிறந்து வளர்ந்து திருநெல்வேலி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் அவர்களிடம் கல்வி பயின்று ஆசிரியர் பணியைத் தொடர்ந்தார் திருமலை இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்து பல நன் மாணாக்கரை உருவாக்கினார். மேலும் ஐயா அவர்கள் அரசியலிலும் தன் பங்கைச் செலுத்தினார். தீவிரமாக ஈடுபட்டதன் விளைவாக ஐயா அவர்கள் பொல்காவலைக்கு மாற்றப் பட்டார். பின்பு திருக்கோணமலைக்கு மாறி வந்து சேவை செய்தார். திருநெல்வேலி கம கிருஷிக பாடசாலையில் விவசாயக் கல்வி பயின்றவர். சிவயோக சமாஜம் சார்பில் நடை பெறும் சகல விழாக்களையும் ஐயா அவர்கள் எப்போதும் முன் உரிமையுடன் நடாத்தி சுவாமியின் நல் ஆசியையும் ஆதரவையும் பெற்றுக் கொண்ட முதல் மிக முக்கியமான சுவாமி கெங்காதரானந்தாவின் சீடராவார்.

நவரட்ண மாஸ்ரர் அவர்கள் எப்போதும் எல்லாக்காரியங்களைச் செய்யும் போதும் சுவாமி கெங்காதரானந்தாவின் ஆலோசனைகளைக் கலந்தாலோசிக்காமல் செய்து கொள்ள தவறவில்லை. தன்னை நாடி வரும் சகலருடனும் எப்போதும் தாராள சிந்தையுடன் எது வித பலன்களையும் எதிர் பாராமல் உதவிகளைச் செய்து கொடுத்தார்கள். ஐயா அவர்கள் நல்லாசிரியராக மட்டும் அல்ல ஒரு சிறந்த விவசாயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக, வர்த்தகராக மட்டும் அல்ல நல்ல வைத்தியராக வும் சிலருக்குச் சேவை செய்துள்ளார் என்பதை நான் அறி வேன். சிவயோக சமாஜ சுவாமியிடம் இருந்து சில வைத் திய முறைகளை ஐயா அவர்கள் பெற்றுக் கொண்டார். ஒரு நாள் ஒரு அன்பர் கடுமையான நோய்க்கு ஆளாகி விட்டார். நோயைக் குணமாக்குவதற்கு வைத்திய சாலைக்கு போக பயந்த நிலையில் மாஸ்ரரிடம் வந்து தனக்கு ஏற் பட்ட நோய் காரணமாக தமது வாழ்வில் வெறுப்பு கொள்ள எண்ணிவிட்ட விடயத்தைக் கூறினார். இவரின் தாற்பரி யத்தை அறிந்து தனது சொந்த பணம் செலவு செய்து மருந்து வாங்கி இவரின் நோயைக் குணப்படுத்தினார். நோய்க்கு ஐயா அவர்கள் கொடுத்த மருந்து வகைகளால் 7 நாட்களில் பூரண குணமாகி விட்டது. நோயாளி சந் தோசப்பட்டு ஐயாவுக்குக் கொடுத்த பணத்தை வாங்கவே இல்லை. மாஸ்ரருக்கு மிகவும் நல்ல சந்தோசம் அன்று. வேறு ஒரு ஆங்கில வைத்தியர் குணமாக்கி இருந்தால் சுமார் 10,000/- அறவிட்டிருப்பார் என்பது உண்மை யான விடயம். நவரட்ணமாஸ்ரர் அவர்கள் சித்த வைத்தியத் துறையில் சிறந்து விளங்கிய வைத்தியர் V. பலராமையா BABL டாக்டர் பொன் கேசவன் ஆகியோரின் அரிய மருந் துகள் பற்றியும் தெரிந்தவர்கள்.

நான் 1993ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் சுகயீனமுற்று இருந்தேன். கடும்நோய் தாங்கிக் கொள்ள என்னால் இயலாத கட்டம். ஆஸ்பத்திரிக்குப் போக நான் தயங்கினேன். மாஸ்ரர் இதனை அறிந்து எனக்கு உதவி கள் செய்ய முன்வந்து என்னை வைத்தியசாலைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து ஆகவேண்டிய சகல அலுவல் களையும் கவனிக்க எல்லாவித ஏற்பாடுகளையும் செய்தார். தினமும் தவறாமல் என்னைவந்து ஆஸ்பத்திரியில் 26 நாட் கள் பார்வையிட்டு என் நலனில் மிகவும் அக்கறையுடன் உதவி செய்தமைக்சாக ஐயா அவர்களுக்கு என்றும் நான் கடனாளியாக இருக்கிறேன். ஐயா அவர்கள் நான ஆஸ் பத்திரியில் இருந்தபோது சுகம் விசாரிக்க வரும்போது ஆத்மீக நூல்கள் புதிது புதிதாகக் கொண்டுவந்து கொடுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்கள் நான் மாஸ்ரருக்கு என்ன கைமாறு செய்வது என்று தெரியாத நிலையில் இருக்கிறேன். அவரின் பணிகள் தொடர என்றும் எல்லாம் வல்ல ஆதியும் அந்தமும் இல்லாத நாயகனை வேண்டுகிறேன்.

திரு நவரட்ணமாஸ்ரர் அவர்கள் அண்மைக்காலமாக ஆன்மிக நூல்கள் அதிகமாக வாங்கிப் படித்து அதில் மூழ்கி இருப்பதை நான் தினமும் அவதானித்தேன்.

இம் மாதம் இந்தியாவில் இருந்து புத்தகங்கள் வாங்கி காந்தி ஐயாவுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்தார் கடைசியாக ஐயா அவர்கள் திருமூலர் திருமந்திரம் என்னும் நூலை படித்துபொருள் விளக்கினார்கள்.

மேலும் ஐயா அவர்கள் தனது கடைசி மகளின் விவாகம் முடிந்தவுடன் நான் பயனமாகி விடுவேன் என்று பல தடவை கூறினார்கள் ஆனால் அவரின் கடமைகள் அனைத்தும் முடிவடைந்தவுடன் அவர் பயணமாகிவிட்டார்கள்.

இந்திரன் தெய்வம், அக்கினி தெய்வம் வாயு தெய்வம் பிரமன் தெய்வம் என்று இவ்வாறு இல்லாத பொய்யான தெய்வங்களை புகழ்ந்து பேசி பலவாறு வருந்துகின்ற இந்த உலகத்தில், 'யான்' 'எனது' என்னும் பற்றுக்கள் சுய நல எண்ணங்கள் நீக்கி, பதவி பணம் முதலியவை அழிந்தாலும் அழியாத அவற்றிற்கெல்லாம் மேம்பட்ட மெய்யான தெய்வத்தின் திருவடியை ஐயா அவர்கள் அடைந்துவிட்டார்கள் எப்போதும் அவர் எங்களுக்கு ஒளிமயமாக வந்து உதவ வேண்டுகிறோம். ஐயாவின் பிரிவால் வாடும் மனைவி பராசக்தி அம்மாவுக்கும் பிள்ளைகள் அனைவருக்கும். என்றும் உள்ளம் ஒரடி நீங்காத ஒருவன் துணை செய்வான்.

வணக்கம்

இப்படிக்கு
ச. தியாகராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலிக்குரிய பெருந்தகை
# அமரர் நவரத்தினம் அவர்கள்

எங்கள் பேரன்புக்கும் நன்மதிப்புக்குமுரிய ஒரு குடும்பம் தான் அமரர் நவரத்தினம் ஆசிரியரின் குடும்பமாகும். இப்பெரியாரின் மறைவு பற்றிய செய்தி நேற்றைய தினந்தான் எனக்குக் கிடைத்தது. (24-12-94ல்) உடனே சில நிமிடங்கள் அமைதியாகக் குனிந்து விட்டேன். எனது அருமை நண்பி பராசக்தி இன்று விதவைக் கோலத்தை அடைந்து விட்டாவா! என்று நினைத்த போது நெஞ்சம் திடுக்குற்றது. என்ன செய்வோம்! இது தானே எமது இறுதி முடிவு என்ற எண்ணம் உள்ளத்தைத் திடப்படுத்தியது.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் இல்லத்தில் திருக்கோணமலை மண்ணில் நான் தங்கியிருந்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். எடுப்பான பேச்சும் இனிய செந்தமிழும் கலந்து வெளிவருவதை நான் நன்கு நயந்து பாராட்டியதுண்டு. சேவை மனப்பான்மையுள்ள ஒரு தெய்வீகக் குடும்பம் இது. செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கும் இல்லக்கிழத்தியும் இனிய பண்புகள் வாய்ந்த சற்புத்திர புத்திரிகளும் இக்குடும்பத்தை அணி செய்துள்ளமை மிகவும் பாராட்டுக்குரியது. இவையெல்லாம் முன்னை வினைப்பயன் என்று அடிக்கடி சொல்வார் அமரர் அவர்கள்.

இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயாவின் அபிமான ஆசிரிய மாணவனாகப் பயிற்சி பெற்றவர் இப்பெரியார். திருக்கோணமலை சிவயோக சமாஜத் தலைவர் ஸ்ரீ கங்காதரானந்த சுவாமிகளின் அருளணைப்பில் ஆத்மீகத்துறையில் வெற்றி கண்ட பெருமை அமரர் நவரத்தினம் அவர்களுக்கு உண்டு. நீற்றினொளி குன்றாத நெற்றியும் நல்லுரைகள் தவழும் நன்னாவும் கலகலவெனச்சிரிக்கும் நற்சுபாவமும் இப்பெரியாரை எம்போன்றார் மத்தியில் நினைவில் இருத்திவிட்டது. இந்நிலை என்றும் மாறவே மாறாது.

அன்னாரர் ஆத்மா சாந்தியடைவதாக

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி J. P.

25-12-94

தலைவர்
துர்க்கா தேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நன்றி நவிலுகிறோம்

எங்கள் குடும்ப விளக்கு அணைந்ததினால் தாளாத துன்பத்தில் தவித்திருந்த எங்களை நீளத்துயரத்தில் வீழ விடாது தேற்றி நேரில்வந்து ஆறுதல்கூறியும்; தந்தி, தொலைபேசி, கடிதம் மற்றும் பிறவழிகளிலும் அனுதாபத்தை நல்கியும்; ஈமக்கிரியைகள் சிறப்பாக நடைபெற அனைத்து உதவிகளையும் செய்து பங்கு பற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும், 'நினைவு மலருக்கு' இரங்கற் செய்திகள் தந்து ஆதரவளித்த அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பர்களுக்கும், அந்தியேட்டிக் கர்மங்களில் சமுகமளித்த அனைவருக்கும் எங்கள் உளம் நிறைந்த நன்றி

இவ்வண்ணம்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஸ்ரீ கணேச அச்சகம், திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org